

அருட்பணி பாடல்கள்

இந்திய அருட்பணி இயக்கம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Ist Edition - 5,000 Copies - 2005
2nd Edition - 6,000 Copies - 2008
3rd Edition - 10,000 Copies - 2009
4th Edition - 20,000 Copies - 2010
5th Edition - 10,000 Copies - 2011
6th Edition - 10,000 Copies - 2012
7th Edition - 10,000 Copies - 2013

Compiled by :
Rev. J. RAJAIAH
TN. State Secretary South/
1049 (247) K.P. Road,
Near Canara Bank
Nagercoil-629 001.
Ph : (04652) 279413
Cell : 9443727941

Printed at :
Kumari Press
Neyyoor, Monday Market.

Head Office :
Rev. P. JOHN WESLY
General Secretary,
38, Langford Road,
Bangalore - 560 025,
Ph : 080 - 22245256,
Cell : 09845665507

TN. State Office South
Rev. J. RAJAIAH
State Secretary South,
1049 (247) K.P. Road,
Near Canara Bank,
Nagercoil-629 001.
Ph : (04652) 279413
Cell : 9443727941

TN. State Office North
Rev. V.E. RAVIKUMAR
State Secretary North,
No. 9/1, 2nd Cross,
Ponnagar,
Trichy-620 001.
Cell : 94420-55436



அருட்பணி பாடல்கள்

இந்திய அருட்பணி இயக்கம்

முன்னுரை

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் ... கர்த்தரைப் பாடி அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பை சுவிசேஷமாய் அறிவியுங்கள் சங். 96:2.

பாடல் கிறிஸ்தவ ஆராதனைக்கு உயிர்நாடி. ஐ.இ.எம். நிகழ்ச்சிகளில் ஆராதனை வேளையும், புதிய நோக்கப்பாடல் மற்றும் உயிரூட்டும் பாடல்களும் இன்றியமையாத அம்சமாகும். ஆகையால் நமது கூட்டங்களில் மற்றும் குடும்ப ஜெபங்களில் பயன்படும் விதமாய் இப்பாடல் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. நாம் எப்பொழுதும் பாடுகின்ற பழைய பாடல்களும் புதிய பாடல்கள் மற்றும் அருட்பணி பாடல்களையும் இவ்அருட்பணி பாடல் புத்தகத்தில் தொகுத்து வழங்கியுள்ளோம்.

பாடல்கள் பல சூழ்நிலையில் பற்பல தேவனுடைய பிள்ளைகளால் எழுதப்படுகிறது என்பதை நாம் யாவரும் அறிவோம். பாடல்களை பாடுகின்றோம், ஆனால் அதன் ஆக்கியோன் பெயரை அறிந்து கொள்வதில்லை. பாடல்களை இயற்றியவர்களை அறிந்துகொள்ளும் படியாகவும், அவர்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தும்படியாகவும், இயன்றவரை அவர்களின் பெயர்களையும் இப்புத்தகத்தில் தொகுத்து வழங்கியுள்ளோம். தவறுகள் ஏதேனும் இருப்பின் பொருத்தருளுக.

தேவன்தாமே இந்த அருட்பணி பாடல் புத்தகத்தை ஆசீர்வதிப்பாராக. இயேசுவின் ராஜ்ஜியம் வளர்ச்சியடையவும் அவருடைய நாமம் மகிமையடையவும் இப்புத்தகம் பயன்படுவதாக.

இப்படிக்கு கிறிஸ்துவின் மகிழ்ச்சியான ஊழியத்தில்,

P. ஜான் வெஸ்லி
ஐ.இ.எம். பொது காரியதரிசி,
பெங்களூர்.

பாடல் அட்டவணை

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
1.	அடைக்கலமே உமதடிமை நானே	43	அஜானா
2.	அதிசயமான ஒளிமய நாடாம்	170	எமில் ஜெபசிங்
3.	அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும்	191	பெர்க்மான்ஸ்
4.	அநாதி தேவன் உன் அடைக்கலமே	181	சாராள் நவரோஜி
5.	அர்ப்பணித்தேன் என்னை	98	அற்புதராஜ் மெர்காஷிஸ்
6.	அருள் ஏராளமாய் பெய்யும்	103	ஜேம்ஸ் மெக்ரனன்
7.	அலையலையாய் அலைபிறுராடே	87	இராபர்ட் சேம்ராஜ்
8.	அல்லேலூயா கர்த்தரையே	16	எமில் ஜெபசிங்
9.	அவர் எந்தன் சங்கீதமானவர்	24	சாராள் நவரோஜி
10.	அழகாய் நிற்கும் யாரிவர்கள்	173	எமில் ஜெபசிங்
11.	அழகானவர் அருமையானவர்	206	கிளிபோர்ட் குமார்
12.	அழைக்கிறார் அழைக்கிறார் இதோ	119	TPM
13.	அறுப்பு மிகுதி ஆட்களில்லை	90	
14.	அறுப்பு மிகுதி இராஜாவே	257	
15.	அறுவடைக்கு வேலையாட்கள்	89	இராபர்ட் சேம்ராஜ்
16.	அன்பென்னும் ஆவியால்	105	அகஸ்டின் ஜெபக்குமார்
17.	அன்பு இயேசுவின் அன்பு	185	
18.	அன்பே அன்பே அன்பே	205	Rev. டக்கர்
19.	அன்பின் ஆண்டவர் வருகை	117	
20.	அன்பே பிரதானம் சகோதர	127	ஞானமணி
21.	அசைவாடும் ஆவியே	221	சாம் ஜெபத்துரை
22.	அப்பா நான் உம்மை பார்க்கின்றேன்	52	பெர்க்மான்ஸ்
23.	அப்பா பிதாவே அன்பான தேவா	218	பெர்க்மான்ஸ்
24.	அந்தோ கல்வாரியில் அருமை	144	நடராஜ முதலியார்
25.	ஆத்துமமே என் முழு உள்ளமே	11	தைரியம் எழுத்தர்
26.	ஆயிரம் ஆயிரம் பாடல்களை	2	தயானந்தன் பிரான்சிஸ்
27.	ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்	12	பெர்க்மான்ஸ்
28.	ஆனந்தமாய் இன்பக் கானான்	194	சாராள் நவரோஜி
29.	ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே	40	சாராள் நவரோஜி
30.	ஆனந்தமே பரமானந்தமே – யேசு	237	சகாயம்

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
31.	ஆணிகள் பாய்ந்த கரங்களை	120	
32.	ஆவியானவரே அன்பின்	203	சாம் ஜெபத்துரை
33.	ஆராதனை ஆராதனை – துதி	38	பால் தங்கையா
34.	இது சிந்திக்கும் காலம் செயல்படும்	95	எமில் ஜெபசிங்
35.	இதோ மனுஷரின் மத்தியில்	167	CPM
36.	இந்த நாளில் இயேசு எந்தன்	190	
37.	இந்தியா எங்கள் தாயகமே	93	IMS
38.	இந்தியாவில் இயேசு நாமம்	76	FMPB
39.	இயேசு என்ற திருநாமத்திற்கு	9	
40.	இயேசு கிறிஸ்துவின் நல்	81	எமில் ஜெபசிங்
41.	இயேசு மீட்பர் உந்தன் நெஞ்சில்	188	F.L. நாதன்
42.	இயேசு இராஜா முன்னே செல்கிறார்	49	சாம் ஜெபத்துரை
43.	இயேசுவின் அன்பை அறியாமல்	74	ஜாண் சாமுவேல்
44.	இயேசுவின் குடும்பம் ஒன்று	169	மார்க்ரெட் ஜாஷ்வா
45.	இயேசுவின் மார்பினில் சாருவேனே	140	
46.	இயேசுவின் நாமம் இனிதான நாமம்	208	ஹாரிஸ்
47.	இயேசுவின் தோட்டத்தில் வேலைக்	251	
48.	இயேசுவைப்போல் அழகுள்ளோர்	207	
49.	இயேசு இராஜனின் திருவடிக்கு	57	D.T. ராஜா
50.	இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என்	63	
51.	இயேசுவை நாம் எங்கே காணலாம்	240	நடராஜ முதலியார்
52.	இயேசு அழைக்கிறார்	244	F.J. செல்லத்துரை
53.	இயேசு என்னும் நாமமே – நமக்கு	128	
54.	இலேசான காரியம் – எதுவும்	162	லாரன்ஸ்
55.	இரத்தக்கோட்டைக்குள்ளே	217	பெர்க்மான்ஸ்
56.	இரட்டிப்பான நன்மைகள் தந்திட	137	சாராள் நவரோஜி
57.	இரட்சிப்பை உயர்த்தி கூறுவோம்	122	
58.	இருள் சூழ்ந்த லோகத்தில்	234	பாஸ்டர். வில்சன்
59.	இருள் சூழும் காலம் இனிவருதே	79	எமில் ஜெபசிங்
60.	இன்பமிதே பேரின்பமிதே	72	வின்செண்ட் சாமுவேல்
61.	இன்ப இயேசுவையே தினம்	67	
62.	இன்ப துன்ப நேரத்திலும்	236	

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
63.	இன்ப இயேசு இராஜாவை நான்	210	
64.	உதவி வரும் கன்மலை நோக்கி	227	பெர்க்மான்ஸ்
65.	உம்மிடத்தில் சொல்லி விட்டேன்	252	
66.	உம்மை நம்பி உந்தன் பாதம்	225	பெர்க்மான்ஸ்
67.	உருகாயோ நெஞ்சமே குருசினில்	145	
68.	உம்மைப் போற்றிப் பாடுவோம்	18	Dr. Mrs. மனோரமா ஜெயச்சந்திரன்
69.	உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி	25	சுஜானா
70.	உம்மைப்போல் யாருண்டு	196	எமில் ஜெபசிங்
71.	உம்பாதம் பணிந்தேன் எந்நாளும்	66	சாராள் நவரோஜி
72.	உயிரோடு எழுந்தவரே – உம்மை	7	பால்தங்கையா
73.	உள்ளத்தில் அவர்பால் பேரன்பு	80	எமில் ஜெபசிங்
74.	உள்ளமெல்லாம் உருகுதையா	148	பாஸ்கரதாசன்
75.	உலகோர் உன்னை பகைத்தாலும்	123	பிரகாஷ் ஏசுவடியான்
76.	உன்னையும் என்னையும்	156	
77.	உன்னதமானவரின் உயர் மறைவில்	180	சாராள் நவரோஜி
78.	ஊற்றுத்தண்ணீரே எந்தன் தேவ	104	சாம் ஜெபத்துரை
79.	எங்கே விடுதலை விடுதலை	108	அற்புதராஜ் மெர்காஷிஸ்
80.	எண்ணி எண்ணி துதி செய்வாய்	13	கிளிபோர்ட் குமார்
81.	எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம்	4	தேவஇரக்கம்
82.	எந்நாளுமே துதிப்பாய் – என்	10	பரமானந்தம்
83.	எந்த காலத்திலும் எந்த நேரத்திலும்	3	TPM
84.	எந்தன் ஜெபவேளை உம்மை	130	வின்சென்ட் சாமுவேல்
85.	எந்தன் உள்ளம் தங்கும்	157	எமில் ஜெபசிங்
86.	எந்தன் நாவில் புதுப்பாட்டு	48	பாக்கியநாதன்
87.	எந்தன் அன்புள்ள ஆண்டவர்	19	R. ஜேசையா
88.	எந்தன் உள்ளம் புதுக்கவியாலே	55	சாராள் நவரோஜி
89.	எலியாவின் தேவன் நம்தேவன்	161	
90.	என் மீட்பர் சென்ற பாதையில்	151	
91.	என் தேவன் என் வெளிச்சம்	239	3 Chords
92.	என் இரட்சகா என் இயேசுவே	175	MPA
93.	என் சபையைக் கட்டுவேன்	86	அற்புதராஜ் மெர்காஷிஸ்
94.	என் இதயக் கதவினில் ஓர்	109	இராபர்ட் சேம்ராஜ்

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
95.	என் நேசர் இயேசுவை	46	
96.	என் பின்னே வாருங்கள்	94	இராபர்ட் சேம்ராஜ்
97.	என்ன தியாகம் என் கல்வாரி	141	TPM
98.	என்ன என் ஆனந்தம்	202	சத்தியநாதன் பிள்ளை
99.	என்றும் ஆனந்தம்	36	பெர்க்மான்ஸ்
100.	என்னை உண்டாக்கிய	223	
101.	என்னை நேசிக்கின்றாயா	143	B. இராஜன்
102.	என்னை மறவா இயேசுநாதா	177	சாராள் நவரோஜி
103.	என்னையே உம் கைகளில்	101	இராபர்ட் சேம்ராஜ்
104.	எனக்கின்பம் ஏதெனக் கேளு	158	VBS
105.	எனக்காய் ஜீவன் விட்டவரே	179	பிரகாஷ் ஏசுவடியான்
106.	எக்காளச் சத்தம் வானில்	199	MPA
107.	எத்தனை நன்மைகள் எனக்கு	34	பெர்க்மான்ஸ்
108.	ஏமாறாதே ஏமாறாதே	110	டேவிட் கருணாகரன்
109.	ஒரு தாய் தேற்றுவதுபோல்	183	ராணி, திருச்சி
110.	ஓ! யேசு உமதன்பு	186	யெகோவா ஷம்மா
111.	கண்களை ஏறெடுப்பேன்	224	ஐயாத்துரை பாகவதர்
112.	கர்த்தர் நாமம் என் புகலிடமே	51	பெர்க்மான்ஸ்
113.	கர்த்தர் மேல் பாரத்தை வைத்து	216	பெர்க்மான்ஸ்
114.	கர்த்தர் என் மேய்ப்பரே	159	The three Chords
115.	கர்த்தர் பெரியவர் அவர் நமது	68	
116.	கர்த்தர் உன் வீட்டைக் கட்டாராகில்	235	
117.	கர்த்தாவின் ஜனமே கைத்தாள	59	பாக்கியநாதன்
118.	கர்த்தரின் கை குறுகவில்லை	176	MPA
119.	கர்த்தனே எம் துணையானீர்	178	எமில் ஜெபசிங்
120.	கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்	182	சாராள் நவரோஜ்
121.	கட்டடம் கட்டிடும் சிற்பிகள்	245	R. ஜேசையா
122.	கரையேறி உமதண்டை	116	சார்லஸ் C. லூத்தர்
123.	கல்வாரி அண்டையில் பல்லாயிரம்	91	இராபர்ட் சேம்ராஜ்
124.	கல்வாரி அன்பை எண்ணிடும்	154	
125.	கல்வாரி மாமலை மேல்	146	
126.	கல்வாரியின் கருணையிதே	142	CPM
127.	கன்னியாகுமரி முதல் ஜம்மு	77	FMPB

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
128.	கனி தேடி வந்தேன்	253	
129.	காக்கும் கரங்கள் உண்டெனக்கு	42	ஜெயச்சந்திரன்
130.	காலையும் மாலையும் எவ்வேளையும்	20	சாராள் நவரோஜி
131.	காரிருளில் என் நேச தீபமே	204	ஜார்ஜ் ஹென்றி நியூமேன்
132.	கால்மிதிக்கும் தேசமெல்லாம்	114	பெர்க்மான்ஸ்
133.	காலத்தின் அருமையை அறிந்து	125	பரமானந்தம்
134.	கிருபையிதே தேவ கிருபையிதே	230	TPM
135.	கிறிஸ்துவின் அடைக்கலத்தில்	152	எமில் ஜெபசிங்
136.	கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு	174	பெர்க்மான்ஸ்
137.	கீழே வேர் கொள்ளுவோம் – மேலே	107	இராபர்ட் சேம்ராஜ்
138.	குதூகலம் நிறைந்த நன்னாள்	164	TPM
139.	குயவனே குயவனே	132	B. இராஜன்
140.	கூடாதது ஒன்றுமில்லையே	163	காலேப்
141.	கூடி மீட்பர் நாமத்தில்	168	
142.	கூடுவோம் நாம் ஓடுவோம்	255	
143.	கேளுங்க நல்ல நண்பா	129	
144.	கொடுங் கொல்கொதாவின்	155	
145.	கொண்டு வாருங்கள்	85	எமில் ஜெபசிங்
146.	கோடா கோடி ஸ்தோத்ரம்	23	சாராள் நவரோஜி
147.	சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன்	15	
148.	சந்தோஷம் பொங்குதே	47	மைக்கேல்
149.	சத்திய வேதத்தை தினம் தியானி	124	எம். சாமுவேல்
150.	சருவ லோகாதிபா நமஸ்காரம்	30	ம. வேதமாணிக்கம்
151.	சின்னஞ்சிட்டு குருவியே	247	
152.	சிலுவையின் நிழலில்	147	
153.	சீர் திரியேக வஸ்தே நமோ	65	
154.	சீர்மிகு வான்புவி தேவா	29	வே. மாசிலாமணி
155.	சேனையதிபன் நம் கர்த்தருக்கே	192	சாராள் நவரோஜி
156.	சோர்ந்து போகாதே மனமே	233	
157.	தம் கிருபை பெரிதல்லோ	231	சாராள் நவரோஜி
158.	தந்தேன் என்னை இயேசுவே	96	வே. சந்தியாகு
159.	தாசரே இத்தரணியை அன்பாய்	78	வே. சந்தியாகு
160.	திருக்கரத்தால் தாங்கி என்னை	131	கிளிபோர்ட் குமார்

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
161.	திருப்பாதம் நம்பி வந்தேன்	184	சாராள் நவரோஜி
162.	துக்கம் மாற வேண்டும்	189	
163.	துதி கீதங்களால் புகழ்வேன்	26	J.V. பீட்டர்
164.	துதி செய் மனமே நிதம் துதி	54	TPM
165.	துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்	58	
166.	துதிப்போம் அல்லேலூயா பாடி	62	
167.	துதித்துப் பாடிட பாத்திரமே	22	சாராள் நவரோஜி
168.	தூயாதி தூயவரே – உமது	5	பாக்கியநாதன்
169.	தெரிந்து கொண்டார் என்னை	112	இராபர்ட் சேம்ராஜ்
170.	தேவ தேவனை துதித்திடுவோம்	28	MPA
171.	தேவனுக்கே மகிமை	27	பெர்க்மான்ஸ்
172.	தேவ கிருபை என்றுமுள்ளது	39	சாராள் நவரோஜி
173.	தேவசேனை வானமீது	165	எமில் ஜெபசிங்
174.	தேவ பிதா எந்தன் மேய்ப்பன்	172	த. யோசேப்பு
175.	தேவனே ஆராதிக்கின்றேன்	35	பெர்க்மான்ஸ்
176.	தேவனே நான் உமதண்டையில்	248	வே. சந்தியாகு
177.	தேவனின் ஆலயமே பரிசுத்த	228	
178.	தேவா சரணம் கர்த்தா சரணம்	70	பால்தங்கையா
179.	தேவா நான் எதினால்	238	
180.	தேசமே பயப்படாதே	232	MPA
181.	தொழுகிறோம் எங்கள் பிதாவே	64	
182.	தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்	171	
183.	நமது இயேசுகிறிஸ்துவின் நாமம்	115	
184.	நல்ல போராட்டம் போராடு	229	
185.	நல்ல செய்தி இயேசுவை	126	பிரிசில்லா J. ஓவன்ஸ்
186.	நற்செய்தி ஊழியம் பெருகிடவே	256	
187.	நன்றியால் பாடிடுவோம்	6	CPM
188.	நன்றியால் துதி பாடு	14	பெஞ்சமின்
189.	நாம் ஆராதிக்கும் தேவன்	17	
190.	நான் என்னையே இந்நேரமே	99	
191.	நான் பிரமித்து நின்று	44	
192.	நான் நேசிக்கும் தேவன்	50	பாக்கியநாதன்

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
193.	நானே வழி சத்யம் ஜீவன்	193	இராபர்ட் சேம்ராஜ்
194.	நானும் என் வீட்டாருமோ	73	தாமஸ் அருள் சிகாமணி
195.	நான் பாவிதான் ஆனாலும்	212	சார்லெட் எலியட்
196.	நான் இயேசுவின் பிள்ளை	226	
197.	நான் உம்மைப் பற்றி இரட்சகா	150	ஐசக் உவாட்ஸ்
198.	நெஞ்சம் அஞ்ச வேண்டாம்	84	
199.	நேசரே உம் திருப்பாதம்	220	பெர்க்மான்ஸ்
200.	பர்வதங்களே! கர்த்தரை	246	
201.	பரலோகமே என் சொந்தமே	243	வின்செண்ட் சாமுவேல்
202.	பரிசுத்த ஆவி எங்கள் மீதிலே	136	
203.	பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா	121	E.A. Hoffman
204.	பரிசுத்தமான பரமனே என்னை	213	இராபர்ட் சேம்ராஜ்
205.	பரிசுத்தர் கூட்டம் நடுவில்	197	எமில் ஜெபசிங்
206.	பலிபீடத்தில் என்னை பரனே	139	CPM
207.	பாகாலுக்கு மண்டியிடாத	113	இராபர்ட் சேம்ராஜ்
208.	பாவத்தின் பலன் நரகம்	200	
209.	பாவ தோஷம் நீங்கிட	249	R. Lowry
210.	பாரீர் கெத்சமனே பூங்காவில்	153	TPM
211.	பிதாவே ஆராதிக்கின்றேன்	37	பெர்க்மான்ஸ்
212.	பிரதான தூதன் எக்காளம் முழங்க	241	சாராள் நவரோஜ்
213.	பிரியமானவனே உன் ஆத்துமா	219	பெர்க்மான்ஸ்
214.	புதிய பாடல் பாடி பாடி	69	
215.	பூவின் நற்கந்தம் வீசும் சோலை	250	W.O. Cushing
216.	பொன்னான இயேசுவை	92	
217.	போற்றித் துதிப்போம் எம் தேவ	21	இஸ்ரவேல் நாயகம்
218.	போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்	56	TPM
219.	போற்றுவோமே போற்றுவோமே	60	
220.	மகிமை உமக்கன்றோ	33	பெர்க்மான்ஸ்
221.	மனதுருகும் தெய்வமே	198	பெர்க்மான்ஸ்
222.	மகிழ்வோம் மகிழ்வோம்	41	Rev. மோகன்
223.	மந்தையில் சேரா ஆடுகளே	83	எமில் ஜெபசிங்
224.	மா பெரிதான வேலையிது	88	அற்புதராஜ்
225.	மாறிடார் எம் மாநேசரே	149	நடராஜ முதலியார்

வரிசை எண்.	பாடல்	பாடல் எண்.	இயற்றியவர்
226.	மான்கள் நீரோடை வாஞ்சித்து	133	MPA
227.	முன்னேறிச் செல்வோம் செயல்	111	டேவிட் கருணாகரன்
228.	முன்னேறி முன்னேறிச் சென்றி	254	
229.	மேகங்கள் நடுவே வழி	166	ஸ்டீபன் ஆபிரகாம்
230.	மேகமீதில் இயேசு இராஜன்	201	அருளப்பன்
231.	ராஜா உந்தன் வீட்டிலே	106	இராபர்ட் சேம்ராஜ்
232.	வந்தேன் நாதா வந்தேன்	97	ஹிந்தி தமிழாக்கம்
233.	வனாந்திர யாத்திரையில்	187	FGPC
234.	வருவாய் தருணமிதுவே	211	சாராள் நவரோஜி
235.	வல்லமை தேவை தேவா	222	சாம் ஜெபத்துரை
236.	வாசலண்டை நின்று ஆசையாய்	118	ஆக்னஸ் டேவிட்சன்
237.	வான பராபரனே – இப்போ	71	
238.	வாதை உந்தன் கூடாரத்தை	214	பெர்க்மான்ஸ்
239.	வாலிப அலையே தற்காலிக	75	பிலிப் பட்டாபிராம்
240.	விடுதலை நாயகன் வெற்றியை	45	பெர்க்மான்ஸ்
241.	விடுதலை விடுதலை விடுதலை	160	ஸ்டீபன் தர்மராஜ்
242.	விந்தைக் கிறிஸ்தேசு ராஜா	138	சந்தியாகு
243.	வெற்றிக்கொடி பிடித்திடுவோம்	215	பெர்க்மான்ஸ்
244.	ஜீவ பலியாய் என்னை	102	இராபர்ட் சேம்ராஜ்
245.	ஜீவ தேவன் கரத்தினிலே	100	IEM
246.	ஜீவ வசனங் கூறுவோம்	258	
247.	ஜீவனுள்ள தேவனே வாரும்	195	எமில் ஜெபசிங்
248.	ஜீவியமே ஒரே ஜீவியமே	82	எமில் ஜெபசிங்
249.	ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்	209	எமில் ஜெபசிங்
250.	ஜெபத்தைக் கேட்கும் எங்கள்-	135	Rev. ஐயாத்துரை
251.	ஜெபமே ஜெயமே – என்	134	இராபர்ட் சேம்ராஜ்
252.	ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு	1	D. மோகன்
253.	ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு	242	S.F. பென்னட்
254.	ஸ்தோத்திரம் இயேசுநாதா	8	சாராள் நவரோஜி
255.	ஸ்தோத்திரம் செய்வேனே	31	சத்தியநாதன்
256.	ஸ்தோத்திரம் துதி பாத்திரா	53	TPM
257.	ஸ்தோத்திரம் பாடியே போற்றி	61	TPM
258.	ஸ்தோத்திர பாத்திரனே	32	ஜாண்

பல்லவிகள் அட்டவணை

வரிசை எண்.	பல்லவிகள்	பல்லவி எண்.
1.	அகிலத்தையும் ஆகாயத்தையும் Ah Lord God	26
2.	அதிசய யேசுவை போற்றிடுவோம்	22
3.	ஆடுகளே ஆடுகளே	35
4.	ஆராதிக்கின்றோம்	4
5.	ஆராதிப்போம் Come bless the Lord	23
6.	ஆஹா கல்லறை திறக்க	5
7.	இயேசு என்னை முற்றிலும் மீட்டார்	3
8.	இயேசுவின் அழகு Let the beauty of Jesus	7
9.	இயேசுவே ஆண்டவர் He is Lord	21
10.	இன்றைய நாள் This is the day	18
11.	இயேசு என்னைக் கைவிடமாட்டார்	40
12.	இயேசுகிறிஸ்து மாறாதவரே	51
13.	இயேசு மேய்ப்பர்	39
14.	இயேசென்னும் நாமத்தில்	52
15.	இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன்	50
16.	உந்தன் நாமம் உயர்த்துவேன் Lord I lift your name	12
17.	உம் சித்தம் தேவா Have thine own way Lord	1
18.	உள்ளம் நன்றியால் I will enter His gate	14
19.	எண்ணெய் பூசி He poured in the oil	15
20.	எத்தனை நல்லவர்	27
21.	எந்தன் துக்கம் மாற்றி Thou hast turned	11
22.	எல்லாம் என் இயேசுவே He is my everything	10
23.	என் தேவனை நான் என்றும் பாடுவேன்	2
24.	என்ன செய்ய வேண்டும்? What shall I do?	28
25.	எப்படிப்பாடுவேன் நானே?	47
26.	எழுப்புதல் அனுப்பும்	46
27.	என்னுள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே	42

வரிசை எண்.	பல்லவிகள்	பல்லவி எண்.
28.	ஒரு வெண்ணங்கி	49
29.	ஓசன்னா Hossana	30
30.	ஓ! தேவனுக்கு மகிமை Oh! Glory to God	31
31.	கர்த்தருக்கு புதுப்பாட்டு Sing unto the Lord	13
32.	காலையோ மாலையோ	29
33.	குட்டி நானையா	36
34.	கொண்டாடுவோம் கொண்டாடுவோம் Celebrate	19
35.	கோழிதன் குஞ்சுகளை	33
36.	சகேயு ஆயக்காரன்	32
37.	சுத்திகரியும் நாதா	16
38.	சுவிகார புத்திரராய்	6
39.	துதிகனம் மகிமை உமக்கே	34
40.	நன்றி சொல்லும் நாவை	20
41.	நான் ஆடிப்பாடி மகிழுவேன்	38
42.	நான் இயேசுவை நேசிக்கிறேன்	44
43.	நீயும் நானும் விசுவாசித்து If you believe	17
44.	மாட்சிமை தொழுவோம் Majesty	25
45.	மின்னி மின்னித் துலங்கிடும்	37
46.	வேத புஸ்தகம் எனக்கு	48
47.	வேதத்திலே வேதத்திலே	41
48.	ஜிங் ஜிங் ஜிங் ஜிங் ஜாலரா	45
49.	ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்	43
50.	For I am building	8
51.	I am Happy today	9
52.	This Land is your Land	24
53.	With my hands lifted up	53
54.	Sweep over my soul	54
55.	Blessing and honour glory and power	55
56.	Hail Jesus you're my King	56

1

ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜாவுக்கு
வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம்

அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியால் உயர்த்துவேன்

1. நீதியின் கரத்தினால்
தாங்கியே நடத்துவார்
கர்த்தரே என் பெலன்
எதற்குமே அஞ்சிடேன்

2. அற்புதம் செய்பவர்
அகிலம் படைத்தவர்
யுத்தத்தில் வல்லவர்
மீட்பர் ஜெயிக்கிறார்

3. நம்பிக்கை தேவனே
நன்மைகள் அளிப்பவர்
வார்த்தையை அனுப்பியே
மகிமைப்படுத்துவார்

4. உன்னத தேவனே
உருக்கம் நிறைந்தவர்
நம்மை காப்பவர்
உறங்குவதில்லையே

2

1. ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களே
யாவரும் தேன்மொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களே

அல்லேலூயா, அல்லேலூயா
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லலில்லை அல்லலில்லை
ஆனந்தமாய்ப் பாடிடுவோம்

2. புதிய புதிய பாடல்களை
புனைந்தே பண்களும் சேருங்களே
துதிகள் நிறையும் கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களே

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களாம்
மிஞ்சும் ஓசைத் தாளங்களால்
மேலும் பரவசம் நாடுங்களே

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களே

3

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே

2. தாய் தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே

3. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என்பாதையில் நீரே

4. வானிலும் நீரே - பூவிலும் நீரே
ஆழியில் நீரே - என் ஆபத்தில் நீரே

5. துன்ப நேரத்தில் - இன்பமே அவர்
இன்னல் வேளையில் - என் மாறிடா நேசர்

6. ஞான வைத்தியராம் - ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் - என் நண்பரும் நீரே

7. ஞானமும் நீரே - கானமும் நீரே
தானமும் நீரே - என் நாதனும் நீரே

4

எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. பூமியில் வாழ்கின்ற யாவும்
அதின் மேல் உள்ள ஆகாயமும்
வான் தூதர் சேனைகள் யாவும்
ஸ்வாமி உம்மைப் போற்றுதே

2. சூரிய சந்திரரோடே
சகல நட்சத்திர கூட்டமும்
ஆகாய பறவைகள் யாவும்
தேவா உம்மைப் போற்றுதே

3. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனித் தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுதே

4. பாவ மனுக்குலம் யாவும்
தேவா உம் அன்பினை உணர்ந்தே
சிலுவையின் தியாகத்தைக் கண்டு
ஓயா துதி பாடுதே

5

தூயாதி தூயவரே
உமது புகழை நான் பாடுவேன்
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ள வரை நின் புகழ்பாட வேண்டும்

சரணங்கள்

1. சீடரின் கால்களை கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே

2. நோய்களை அகற்றிடும் வைத்தியரே
தெய்வீக நல்சுகம் ஈந்திடுமே

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே

4. பரலோகில் இடமுண்டு என்றவரே
பரிவாக எனைச் சேர்க்க வந்திடுவீரே

5. பாவத்தின் சேற்றினில் அமிழ்ந்திடாமல்
பாசமாய் அணைத்தென்னை தூக்கினீரே

6

நன்றியால் பாடிடுவோம் (2)
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே

சரணங்கள்

1. செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த
எங்கள் தேவனின் கரமே
தாங்கியதே இந்நாள் வரையும்
தயவாய் மா தயவாய்

2. உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம்வரை
உடன் சுதந்தரராய் இருக்க
கிருபையின் மகா தானமது
வரும் காலங்களில் விளங்க

3. ஜீவனை தியாகமாய் வைத்த பலர் கடும்
சேவையில் மரித்தார்
சேர்ந்து வந்து சேவை புரிந்து
சோர்ந்திடாது நிற்போம்

4. மித்ருக்களான பலர் நன்றியிழந்தே
சத்துருக்களாயினாரே
சத்தியத்தைச் சார்ந்து தேவ
சித்தம் செய்திடுவோம்

5. சீயோனை பணிந்துமே கிறிஸ்தேசு ராஜனாய்
சீக்கிரம் வருவார்
சிந்தை வைப்போம் சந்திக்கவே
சுந்தரன் முகமே

7

1. உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆராதனை செய்கிறோம்
- அல்லேலூயா ஓசன்னா (4)

2. மரணத்தை வென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் ஜெயித்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
- அல்லேலூயா ஓசன்னா (4)

3. அகிலத்தை ஆள்பவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஆனந்த பாக்கியமே
உம்மை ஆராதனை செய்கிறோம்
- அல்லேலூயா ஓசன்னா (4)

8

1. ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கின்றோம் நின்னடியார்
திருநாமத்தினாதரவில்

11

ஆத்துமமே, என் முழு உள்ளமே, - உன்
ஆண்டவரைத் தொழு தேத்து, இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த - உன்
ஆண்டவரைத் தொழு தேத்து

சரணங்கள்

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள
2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத
3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும், மேலான
4. வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த
5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும்
6. துதி மிகுந்தேறத் தோத்திரி தினமே
இதயமே, உள்ளமே, என் மனமே

12

ஆராதிப்பேன் நான், ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

1. வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
நல்லவரே உம்மை ஆராதிப்பேன்
2. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன்
3. ஆவியிலே உம்மை ஆராதிப்பேன்
உண்மையிலே உம்மை ஆராதிப்பேன்
4. தூதர்களோடு ஆராதிப்பேன்
ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன்

13

எண்ணி எண்ணி துதி செய்வாய்
எண்ணிலடங்காத கிருபைகளுக்காய்
இன்றும் தாங்கும் தம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே

1. உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன்னில் பதறாதே
கண்மணிபோல் காக்கும் கரங்களில்
உன்னை மூடி மறைத்தாரே
2. யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விஸ்வாச சோதனையில்
3. உனக்கெதிராகவே
ஆயுதம் வாய்க்காதே
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசர்க்கு நீதியவர்

14

நன்றியால் துதிபாடு நம் இயேசுவை
உள்ளத்தால் என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மை உள்ளவர்

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்துவிழும் - நன்றியால்
2. செங்கடல் நம்மைச் சூழ்ந்து நின்றாலும்
சிலுவையின் நிழலுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்து விடும் - நன்றியால்
3. துன்மார்க்கத்திற் கேதுவான வெறிகொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே
சங்கீத கீர்த்தனம் பாடு - நன்றியால்
4. சரீரம் ஆத்துமா ஆவியினாலும்
சோர்ந்து போகும் வேளையிலெல்லாம்
துதி சத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும் - நன்றியால்

15

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மை
போற்றிடுவோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம்
ஆ ஆ ஆ அல்லேலூயா (8) ஆமென்

1. வானம் பூமி ஒழிந்து போனாலும்
உம் வார்த்தைகள் என்றும் மாறாதே
இவ்வாழ்க்கை அழிந்து மறைந்து போம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான்

2. எந்தன் மீட்பரும் ஜீவனும் நீரே
என்னைக் காக்கும் கர்த்தரும் நீரே
என்னை உமக்கு என்றும்
அர்ப்பணித்தேன்
என் வாழ்வின் ஜோதியும் நீரே

16

1. அல்லேலூயா கர்த்தரையே
ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம்
பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும்
வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும்
இயேசுவைத் துதியுங்கள்

பல்லவி

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும் வீணையோடும்
கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப்
போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும்
முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர்
இயேசுவைத் துதியுங்கள்

3. சூரியனே, சந்திரனே
தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம்
அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே, கல்மழையே
படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை
உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே, வாலிபரே
தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே
கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே
தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய்
செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே, சமுத்திரமே
தேவனைத் துதியுங்கள்
அலைஅலையாய் ஊழியர்கள்
எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே
தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை பரிசுத்தர்கள்
நிரப்புவார் துதியுங்கள்

17

நாம் ஆராதிக்கும் தேவன்
அவர் ஜீவனுள்ள தேவன்
ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் நம் தேவன் - அவர்

1. ஆபிரகாம் விசுவாசித்தான்
நீதிமானின் ஆசிகள் பெற்றான்
விசுவாச மார்க்கத்தாலே
ஆபிரகாமின் பிள்ளைகளாய்
ஆஸ்திகளை சுதந்தரிப்போம்

2. ஈசாக்கு விதை விதைத்தான்
நூறத்தனை ஆசிகள் பெற்றான்
பரலோக பலன்களை
மகிமையாய் அடைந்திட
மகிழ்வுடன் பிழைத்திடுவோம்

3. யாக்கோபு வேண்டுதல் செய்தான்
உயிர் பிழைத்திட ஆசிகள் பெற்றான்
விசுவாச ஜெபத்தினால்
உன்னதத்தின் திருமுக
ஆசிகளை அடைந்திடுவோம்

18

உம்மைப் போற்றி பாடுவோம்
எங்கள் உயர்ந்த கன்மலையே

1. பெரு வெள்ளம் மதிலை மோதி
பெருங்காற்றும் அடிக்கையில்
எங்கள் புகலிடமே எங்கள் தஞ்சமே
பெருங்கன்மலையின் நிழலே

2. செங்கடலும் பிளந்து போகும்
யுத்த சேனையும் அமிழ்ந்திடும்
எங்கள் பராக்கிரமமே எங்கள்
பெலனும் நீரே
ஜெயம் எடுப்போம் உம்மாலே

3. எம்மை உயர்ந்த ஸ்தானங்கள் மேல்
வைத்து வைத்ததும் நீரல்லவோ
கன்மலைத்தேனும் வடியும் எண்ணெயும்
தருவதும் நீரல்லவோ

19

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர்
இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப்போல் ஒரு தேவனைப்
பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வமே நீர்

பல்லவி

ஆ ஆனந்தம் ஆனந்தமே
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே! எந்தன் ஆருயிரே

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும்
நீரோ வாக்கு மாறாதவரே

3. உயர் அடைக்கலத்தில் என்னை
வைத்தவரே
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும்
நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர்

20

காலையும், மாலை, எவ்வேளையும்
கர்த்தரைக் கருத்துடன் பாடிடுவேன்,
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என தூதர்
பாடிடும் தொனி கேட்குதே

சரணங்கள்

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி
திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன் - காலை

2. எனக்கெதிராய் ஓர் பாளயமிறங்கி
என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்,
பயப்படேன் எதிராளி நிமித்தமாய்
செவ்வையான
பாதையில் நடத்திடுவார் - காலை

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே
நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம்
ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன் - காலை

4. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார்
எந்தன் உள்ளம் ஸ்திரமாக திடமாக
கர்த்தருக்கே
என்றென்றும் காத்திருக்கும் - காலை

5. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார்;
தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர்
விருப்பமும்
தவறாமல் நிறைவேற்றுவார் - காலை

21

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புதிய கிருபையுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவை நாம் என்றும் } 2
பாடித்துதிப்போம்

பல்லவி

இயேசு என்னும் நாமமே - என்
ஆத்துமாவின் கீதமே,
என் நேசரேசுவை - நான் என்றும்
ஏற்றி மகிழ்ந்திடுவேன்

2. கோரப் பயங்கரமான புயலில்,
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம் கொண்டு மார்பில்
சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்

3. யோர்தான் நதிப்போன்ற சோதனையிலும்
சோர்ந் தமிழ்ந்து மாளாதே,
ஆர்ப்பின் ஜெய தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன்

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்,
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து,
ஜீவ பாதை என்றும் ஓடுவேன்

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி, ஆத்துமாவும், தேகம் யாவுமின்று
தந்து தொண்டு செய்குவேன்

22

1. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே,
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

பல்லவி

ஆ! அற்புதமே, அவர் நடத்துதலே,
ஆனந்தமே பரமானந்தமே!
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண்மணி போல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியின் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்,
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே

4. இந்த வனாந்திர யாத்திரையில்,
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும், நம் வருகையிலும்
புகலிடமானதால் ஸ்தோத்தரிப்போமே

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்;
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே!

23

கோடா கோடி ஸ்தோத்ரம் ஏறெடுப்போம்
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை

சரணங்கள்

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமூகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழுவோம்
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம்

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தத்தின் கீழே வந்து நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா
கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே

3. குருவி பறவை வானம் பாடியே
கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா
அற்புதமான சிருஷ்டிகரே
அந்த விசுவாசம் கற்றறிந்தோம்

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர்

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர்
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
தேவ குமாரன் வந்திடும் நாள்
தூய முகம் கண்டு கெம்பீரிப்போம்

24

அவர் எந்தன் சங்கீதமானவர்
அரணான கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான அவரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்திடுவோம்

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
திக்கற்ற பிள்ளைகளின் தேவன் அவரே

2. இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன்
இருகரம் தட்டி என்றும் வாழ்த்திடுவோம்

3. வானவர் கிறிஸ்தேசு நாமத்தையே
வாழ்நாள் முழுவதும் போற்றிடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம்

25

உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி கர்த்தரே
உம் கிரியைகள் மிக அற்புதமானதே
உம்மைப் பணிவேன் தேவாதி தேவனே
உம் ஆலோசனைகள் அருமையானதே

சரணங்கள்

1. என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்
என் நினைவுகளையும் தூரத்தில் அறிவீர்
எந்தன் நாவில் சொல் பிறவா முன்னமே
எந்தன் தேவனே அவையாவும் அறிவீர்

2. உமக்கு மறைவாய் இருளும் மூடாதே
இரவும் பகல் போல் வெளிச்சமாகுமே
உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்
இந்த அறிவுதான் மா விந்தையானதே

3. வானில் சென்றாலும் அங்கேயும் இருக்கிறீர்
விடியற்காலத்துச் செட்டையில் பறந்தாலும்
பாதாளத்திலே படுக்கை போட்டாலும்
உமது கரத்தால் என்னைப் பிடிக்கிறீர்

4. என்னை ஆராய்ந்து, அறிந்து கொள்ளுமே
வேதனை வழி என்னின்று அகல
நித்திய வழியிலே என்னை நடத்துமே
எந்தையே எந்தன் உள்ளம் பாடிட

26

துதி கீதங்களால் புகழ்வேன்
உந்தன் நாம மகத்வங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல்

1. தினந்தோறும் உம் தானங்களால்
நிறைத்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமது போல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால்

2. அலைமோதும் இவ்வாழ்க்கையிலே
அனுகூலங்கள் மாறும்போது
வழிகாட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோடடியார்களைக் காருண்யத்தால்

27

தேவனுக்கே மகிமை
தெய்வத்திற்கே மகிமை
தேடி வந்து மீட்டவரே
தினம் உமக்கே மகிமை
ஐயா வாழ்க! வாழ்க! உம் நாமம்வாழ்க!

1. உன்னதத்தில் தேவனுக்கே
மகிமை உண்டாகட்டும் - இந்த
பூமியிலே சமாதானமும்
பிரியமும் உண்டாகட்டும்
வாழ்க! வாழ்க! உம் நாமம் வாழ்க!

2. செவிகளை நீர் திறந்து விட்டீர்
செய்வோம் உம்சித்தம் - இந்த
புவிதனிலே உம் விருப்பம்
பூரணமாகட்டுமே
வாழ்க! வாழ்க! உம் நாமம் வாழ்க!

3. எளிமையான எங்களையே
என்றும் நினைப்பவரே - எங்கள்
ஒளிமயமே துணையாளரே
உள்ளத்தில் ஆறுதலே
வாழ்க! வாழ்க! உம் நாமம் வாழ்க!

4. தேடுகிற அனைவருமே
மகிழ்ந்து களிகூரட்டும் - இன்று
பாடுகிற யாவருமே
பரிசுத்தம் ஆகட்டுமே
வாழ்க! வாழ்க! உம் நாமம் வாழ்க!

5. குறை நீக்கும் வல்லவரே
கோடி ஸ்தோத்திரமே - பாவ
கறை போக்கும் கர்த்தாவே
கல்வாரி நாயகனே
வாழ்க! வாழ்க! உம் நாமம் வாழ்க!

28

தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தர்க்கே
அல்லேலூயா இராஜனுக்கே

1. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணிபோல காத்தருளும்
கிருபையால் நிதம் வழி நடத்தும்

2. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
வேத வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம்

3. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம்

29

1. சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்!
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்
ஏர்குணனே தோத்ரம்! அடியார்க்
கிரங்கிடுவாய், தோத்ரம், மாநேசா!

2. நேர்மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்!
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்!
ஆர்மணனே தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா!

3. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்!
தினம், தினம் அருள் நன்மைக்காகவும்
தோத்ரம்!
ஆவலுடன் தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா!

4. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்!
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்!
சாற்றுகிறோம் தோத்ரம், உனது!
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா!

5. மாறாப் பூரண நேசா, தோத்ரம்!
மகிழொடு ஜெபமொழி மாலையின்
தோத்ரம்!
தாராய் துணை; தோத்ரம்! இந்த
தருணமே கொடு தோத்ரம்; மா நேசா!

30

1. சருவ லோகாதிபா, நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும்
படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்!

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் திரட்சகனே, நமஸ்காரம்!
தரணியின் மனுடர் உயிர்
அடைந்தோங்க
தருவினில் மாண்டோய், நமஸ்காரம்!

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரமசற் குருவே, நமஸ்காரம்!
அருபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே, சதா நமஸ்காரம்!

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா,
துத்திய திரியேகத்வா, நமஸ்காரம்!

31

தோத்திரம் செய்வேனே, - ரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே

பாத்திரமாக இம்மாத்ரம் கருணை வைத்த
பார்த்திபனை, யூதகோத்திரனை, என்றும்

1. அன்னை மரி சுதனை - புல்மீது
அமிழ்துக் கமுதவனை
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை

2. கந்தை பொதிந்தவனை, - வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை,
வானபரன் என்னும் ஞான குணவானை

3. செம்பொன்னுருவானை, - தேசிகர்கள்
தேடும் குருவானை
அம்பர மேவிய உம்பர் குழாங்களோடு
அன்புபெற நின்று, பைம்பொன் மலர் தூவி

32

தோத்திர பாத்திரனே, தேவா,
தோத்திரம் துதியுமக்கே!
நேத்திரம் போல் முழு ராத்திரியுங்
காத்தாய்;
தோத்திரம் துதியுமக்கே!

சரணங்கள்

1. சத்துரு பயங்களின்றி - நல்ல
நித்திரை செய்ய எமைப்
பத்திரமாய்ச் சீராட்டியுறக்கியே
சுற்றிலும் கோட்டையானாய்

2. விடிந்திருள் ஏகும் வரை - கண்ணின்
விழிகளை மூடாமல்
துடி கொள் தாய் போல் படிமிசை எமது
துணை எனக் காத்தவனே

3. காரிருள் அகன்றிடவே - நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே
பாரிதைப் புரட்டி உருளச்செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய்

4. இன்றைத் தினமிதிலும் - தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன்திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக் கொள்வாய்

33

மகிமை உமக்கன்றோ
மாட்சிமை உமக்கன்றோ
துதியும் புகழும் ஸ்தோத்திரமும்
தூயவர் உமக்கன்றோ

ஆராதனை - ஆராதனை - என்
அன்பர் இயேசுவுக்கே

1. விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
விடுதலை கொடுத்தீர்
இராஜாக்களாக லேவியராக
உமக்கென தெரிந்து கொண்டீர்

2. வழிகாட்டும் தீபம் துணையாளரே
தேற்றும் தெய்வமே
அன்பால் பெலத்தால்
அனல்மூட்டும் ஐயா அபிஷேக நாதரே

3. எப்போதும் இருக்கின்ற
இனிமேலும் வருகின்ற எங்கள் ராஜாவே
உம் நாமம் வாழ்க உம் அரசு வருக
உம் சித்தம் நிறைவேறுக

4. உம் வல்ல செயல்கள்
மிகவும் பெரிய அதிசயமன்றோ
உம் தூய வழிகள் நேர்மையான
சத்திய தீபமன்றோ

34

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் - நான்
நன்றி ராஜா... நன்றி ராஜா...

1. தாழ்மையில் இருந்தேன் தயவாய் நினைத்தீர்
தேவனே உம்மை துதிப்பேன்

2. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலத்தால் இடைகட்டினீர்

3. பாவத்தினாலே மரித்துப்போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே

4. கரங்களைப் பிடித்து கண்மணிபோல
காலமெல்லாம் காத்தீர்

5. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
பூரண சுகமாக்கினீர்

6. முள்முடி தாங்கி திரு இரத்தம் சிந்தி
சாத்தானை ஜெயித்து விட்டீர்

7. நீர் செய்த அதிசயம் ஆயிரம் உண்டு
விவரிக்க முடியாதையா

35

தேவனே ஆராதிக்கிறேன்
தெய்வமே ஆராதிக்கிறேன்

1. அதிகாலையில் ஆராதிக்கின்றேன்
ஆனந்த சத்தத்தோடு ஆராதிக்கின்றேன்

2. கன்மலையே ஆராதிக்கின்றேன்
காண்பவரே உம்மை ஆராதிக்கின்றேன்

3. முழுமனதோடு ஆராதிக்கின்றேன்
முழந்தாள் படியிட்டு ஆராதிக்கின்றேன்

4. யேகோவாயீரே ஆராதிக்கின்றேன்
எல்லாமே பார்த்துக் கொள்வீர்

5. யேகோவா நிசியே ஆராதிக்கின்றேன்
எந்நாளும் வெற்றி தருவீர்

6. யேகோவா சாலோம் ஆராதிக்கின்றேன்
எந்நாளும் சமாதானமே

36

என்றும் ஆனந்தம், என் இயேசு தருகிறார்
துதிப்பேன் துதிப்பேன் துதித்துக்
கொண்டேயிருப்பேன்
அல்லேலூயா ஆனந்தமே (2)

1. உன்னதர் மறைவில் வல்லவர் நிழலில்
என்றும் தங்குவேன்
தேவனை நோக்கி அடைக்கலப் பாறை
என்றே சொல்லுவேன்

2. தமது சிறகால் என்னை மூடி
காத்து நடத்துவார்
அவரது வசனம் ஆவியின் பட்டயம்
எனது கேடகம்

3. இரவின் பயங்கரம் பகலின் அம்பு
எதற்கும் பயமில்லை
உன்னத தேவன் எனது அடைக்கலம்
தங்கும் உறைவிடம்

4. வழிகளில் எல்லாம் என்னைக் காக்க
தூதர்கள் எனக்குண்டு
பாதம் கல்லில் மோதாதபடிக்கு
கரங்களில் ஏந்துவார்

37

பிதாவே ஆராதிக்கின்றோம்
இயேசுவே ஆர்ப்பரிக்கின்றோம்
ஆவியானவரே அன்பு செய்கின்றோம்
ஆராதிக்கின்றோம்
ஆர்ப்பரிக்கின்றோம்
அன்பு செய்கின்றோம்

1. மகனாக தெரிந்து கொண்டீர்
மறுபடி பிறக்க வைத்தீர்
ராஜாக்களும் நாங்களே
ஆசாரியர்களும் நாங்களே

2. பரிசுத்தர் பரிசுத்தரே
பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே
இனிமேலும் வருபவரே

3. சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே
மகிமைக்கு பாத்திரரே
மங்காத பிரகாசமே

4. உமது செயல்களெல்லாம்
அதிசயமானவைகள்
உமது வழிகளெல்லாம்
சத்தியமானவைகள்

5. ஸ்தோத்திரமும் கனமும்
வல்லமையும் பெலமும்
மாட்சிமையும் துதியும்
எப்போதும் உண்டாகட்டும்

38

ஆராதனை ஆராதனை
துதி ஆராதனை ஆராதனை
காலையிலும் மாலையிலும்
ஆராதனை அப்பாவுக்கே

1. தூய ஆவியே உமக்கு ஆராதனை
துணையாளரே உமக்கு ஆராதனை
வான பிதாவே உமக்கு ஆராதனை
வழிகாட்டியே உமக்கு ஆராதனை

2. ஜீவபலியே உமக்கு ஆராதனை
ஜீவ தண்ணீரே உமக்கு ஆராதனை
மேகஸ்தம்பமே உமக்கு ஆராதனை
மேசியாவே உமக்கு ஆராதனை

39

தேவ கிருபை என்றுமுள்ளது
அவர் கிருபை என்றுமுள்ளது!
அவரைப் போற்றி துதித்துப் பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

1. நெருக்கப்பட்டும் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர், அவர் வல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது - தேவ

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தர் தாம் தாவீதின் தேவன் நமக்காய்
முன் சென்றாரே, அவர் வல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது - தேவ

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே, அவர் நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது - தேவ

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்,
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார், அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது - தேவ

5. வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளது - தேவ

6. நித்திய தேவனாம் சத்திய பரன்தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது - தேவ

40

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லா கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எம்மைக் காத்தாரே
கவலைகள் நீக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்.- ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும்புயல் அடித்து கவிழ்த்தினாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தியெம்மை
காப்பாரே அல்லேலூயா.- ஆத்துமமே

4. யோர்தானை கடப்போம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்ப்போம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம்.- ஆத்துமமே

5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடி தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார் - ஆத்துமமே

41

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினார்
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

2. சின்னஞ்சிறு வயதில் என்னை குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
“ஜீவன் பெற்றுக்கொள்” என்றுரைத்தார்

3. எந்த சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னை பிரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன்

4. அவர் வரும் நாளினில் என்னைக்கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன். - ஆ ஆனந்தமே

42

காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்.

நம்பி வா இயேசுவை
நம்பி வா இயேசுவை

1. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என் மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன் - நம்பி

2. கன்மலைகள் பெயர்க்கும்படியாய்
கர்த்தர் உன்னைக் கரம் பிடித்தார்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகுபோல எழும்பிடுவாய் - நம்பி

3. அத்திமரம் துளிர்விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை - நம்பி

43

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

சரணங்கள்

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம் பாதம் பற்றிடுவேனே.

2. கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்வமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்பப் பாக்கியமிதே

3. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனைக் கிருபை
சூழ்ந்துகொள்ளுமே.

4. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
சூப்பிட்ட என்னைக் குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே.

5. பாவங்களைப் பாராதென்னை பற்றிக்
கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தை
திரும்பத் தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே

44

1. நான் பிரமித்து நின்று பேரன்பின்
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச்சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்.

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்;
இயேசையரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்.

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்;
வீண் முயற்சி நீங்கினபோதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்.

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்;
நான் அவரின் வஸ்திரம் தொட,
ஆரோக்கியம் அருளினர்.

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்;
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார்

45

விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார் என்னே ஆனந்தம்

1. நான் பாடிப்பாடி மகிழ்வேன் - தினம்
ஆடி ஆடித் துதிப்பேன் - எங்கும்
ஓடி ஓடி சொல்லுவேன் (2)
என் இயேசு ஜீவிக்கிறார்.

2. அவர் தேடி ஓடி வந்தார் - என்னை
தேற்றி அணைத்துக் கொண்டார்
என் பாவம் அனைத்தும் மன்னித்தார்
புது மனிதனாக மாற்றினார்

3. அவர் அன்பின் அபிஷேகத்தால்
என்னை நிரப்பி நடத்துகின்றார்
சாத்தானின் வலிமை வெல்ல
அதிகாரம் எனக்குத் தந்தார்

4. செங்கடலைக் கடந்து செல்வேன்
யோர்தானை மிதித்து நடப்பேன்
எரிகோவை சுற்றி வருவேன்
எக்காளம் ஊதி ஜெயிப்பேன்

46

என் நேசர் இயேசுவை நான் என்றும் பாடுவேன்
என் ஆத்துமாவை நித்தம் நேசிக்கின்றவர்
என் நேசர் லீலியிலும் வெண்மையானவர்
என் வாழ்வில் நறுமணம் ஈந்தவர்

1. பெலனற்றுப் போகையில் என் பெலன் அவரே
இன்ப துன்ப நேரத்தில் என் நண்பர் அவரே
பொற்றள வீதியில் பாடி மகிழ
என் நேசர் இயேசு மீட்டுக் கொண்டாரே

2. கடும்புயல் சீறிடும் அலைகள் மோதிடும்
கண்ணுக்கெட்டா கரைதனில் உள்ளம்நாடிடும்
பொற்கரம் நோக்கி என்கரம் நீட்டுவேன்
என் நேசர் இயேசு மீட்டுக் கொள்வாரே

3. எட்டியாய்க் கசந்திட்ட என் வாழ்வு இனித்திட
எத்தனாய் அலையாது நான் நித்தம் பின் செல்ல
ஏந்திட்டார் பொற்கரத்தில் ஆவலாய் என்னை
எந்நாளும் இன்ப துதிகள் பாடவே

47

சந்தோஷம் பொங்குதே (2)
சந்தோஷம் என்னில் பொங்குதே அல்லேலூயா
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

1. வழிதப்பி நான் திரிந்தேன் - பாவ
பழியதை சுமந்தலைந்தேன்
அவர் அன்பு குரலே
அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில்
எந்தன் பாவம் நீங்கிற்றே

2. சத்துரு சோதித்திட - தேவ
உத்திரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார்
தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல இயேசு
எந்தன் சொந்தமானாரே

3. பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில்
நாளும் பாடல் பாடிடுவேன்
என்னில் வாழும் இயேசுவோடு
என்றும் வாழுவேன்

48

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்
ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் அல்லேலூயா

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார்

2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர்தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார்

4. தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன்

5. இவ்வுலகப் பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண காத்திருக்கிறேன்.

49

இயேசு ராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே, ஓசன்னா ஜெயமே
ஓசன்னா ஜெயம் நமக்கே.

1. அல்லேலூயா துதி மகிமை - என்றும்
அல்லேலூயா துதி மகிமை - 2
இயேசு ராஜா, எங்கள் ராஜா
என்றென்றும் போற்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே, ஓசன்னா ஜெயமே
ஓசன்னா ஜெயம் நமக்கே.

2. துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடிவந்தாலும்
பயமுமில்லை கலக்கமில்லை - 2
கர்த்தர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே, ஓசன்னா ஜெயமே
ஓசன்னா ஜெயம் நமக்கே

3. செங்கடல் தடை செய்தாலும்
பார்வோன் சேனைகள் பின்தொடர்ந்தாலும்
அச்சமில்லை திகிலுமில்லை - 2
அற்புதர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே, ஓசன்னா ஜெயமே
ஓசன்னா ஜெயம் நமக்கே

4. யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை எதிர் நின்றாலும்
பயமுமில்லை கலக்கமில்லை - 2
மீட்பர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே, ஓசன்னா ஜெயமே
ஓசன்னா ஜெயம் நமக்கே

50

நான் நேசிக்கும் தேவன்
இயேசு என்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும், இன்றும்,
நாளை, என்றும் மாறாதவர்.

நான் பாடி மகிழ்ந்திடுவேன்
என் இயேசுவைத் துதித்திடுவேன்
என் ஜீவகாலமெல்லாம்
அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில்
படகாய் வந்திடுவார்
இருள்தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார்

2. பாவ நோயாலே வாடும் நேரத்தில்
மருத்துவராகிடுவார்
மயங்கி விழும் பசிதனிலே
மன்னாவைத் தந்திடுவார்

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனைத்
தேற்றிட வந்திடுவார்
கால் தளரும் வேளைதனில்
ஊன்றுகோல் ஆகிடுவார்

51

கர்த்தர் நாமம் என் புகலிடமே
கருத்தோடு துதித்திடுவேன்

1. யேகோவாயீரே எல்லாமே பார்த்துக் கொள்வீர்
கலங்கலப்பா - நாங்க கலங்கலப்பா

2. யேகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

3. யேகோவா ரஃப்பா சுகம் தரும் தெய்வமே
கலங்கலப்பா நாங்க கலங்கலப்பா

4. யேகோவா ரூவா எங்கள் நல்ல மேய்ப்பரே
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

5. யேகோவா ஷம்மா கூடவே இருக்கிறீர்
கலங்கலப்பா - நாங்க கலங்கலப்பா

6. யேகோவா ஷாலோம் சமாதானம் தருகின்றீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

52

அப்பா நான் உம்மைப் பார்க்கின்றேன்
அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீரூற்று நீர்தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன்

53

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

காத்தீரே என்னை கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் என்னையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக

1. வல்ல வான ஞான வினோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லைகள் யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் என்னையும் மீட்டீரே

2. நம்பினோரை காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவி யாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரை கண்பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மை
துதியே துதியே துதித்திடுவேன்
தேவா நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக்காத்தீரே
தீ தணுகாதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன்

5. அல்லேலூயா ஸ்தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியாதிருப்பேனோ
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையே துதித்திடுவேன்

54

துதிசெய் மனமே நிதம் துதிசெய்
துதிசெய் இம்மட்டும் நடத்தின உன்
தேவனை இன்றும் என்றும் நன்றி மிகுந்த
மனதோடே

1. முன் கால மெல்லாம் உன்னைத் தம்
கரமதில் ஏந்தி
வேண்டிய நன்மைகள் யாவும் உனக்
களித்தாரே

2. ஏகிடும் வழியில் பாடுகள் பல நேர்ந்தபோது
ஏசுபரன் உன்காவலனாய் இருந்தாரே

3. சோதனை பலவாய் மேகம் போல்
உன்னை சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை

4. தாய் தந்தை தானும் ஏகமாய் உனை
மறந்தாலும்
தூயரின் கையில் உன் சாயல்
உள்ளதை நினைத்தே

5. சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன்
சொந்தம் பாராட்டி உன்னுடன் இருப்பதினாலே

55

1. எந்தன் உள்ளம் புது கவியாலே பொங்க
இயேசுவை பாடிடுவேன்
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்
அவரையே நேசிக்கிறேன்

அல்லேலூயா துதி அல்லேலூயா -எந்தன்
அண்ணலாம் இயேசுவை பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தரைக் கொண்டாடுவேன்

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே - ஓர்
சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசீர் பொழிந்தெனக் கென்றும்
சுக பெலன் அளித்தாரே

3. சில வேளை இமைப்பொழுதே தம் முகத்தை
சிருஷ்டிகர் மறைத்தாரே
கடுங்கோபம் நீக்கி திரும்பவும் என் மேல்
கிருபையும் பொழிந்தாரே

4. பஞ்ச காலம் பெருகிட நேர்ந்தாலும் தாம்
தஞ்சமே ஆனாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே

5. களிப்போடு விரைந்தெம்மை சேர்த்திட - என்
கர்த்தரே வருவாரே
ஆவலோடு நாமும் வானத்தை நோக்கி
அனுதினமும் காத்திருப்போம்

56

போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
பொற்பரன் இயேசுவையே
புவியில் அவர் போல் வேறில்லையே

1. தந்தையைப்போல் தோளினிலே
மைந்தரெமைச் சுமந்தவரே
எந்நாளுமே அவர் நாமமே
இந்நிலத்தே நாம் துதித்திடுவோம்

2. கன மகிமை புகழடைய
கருணையால் ஜெநிப்பித்ததாலே
கனலெரியின் சோதனையில்
கலங்கிடுமோ எம் விசுவாசமே

3. ஞாலமெல்லாம் கண்டதிசயிக்க
ஆவியின் அபிஷேகத்தாலே
ஏக சரீரமாய் நிறுத்த
இணைத்தனரே நம்மைத்தன் சுதராய்

57

இயேசு ராஜனின் திருவடிக்கு
சரணம் சரணம் சரணம்
ஆத்ம நாதனின் மலரடிக்கு
சரணம் சரணம் சரணம்

1. பார் போற்றும் தூய தூய தேவனே
மெய் ராஜாவே எங்கள் நாதனே
பயம் நீக்கும் துணை யாவும் ஆனீரே
சரணம் சரணம் சரணம்

2. இளைப்பாறுதல் தரும் வேந்தனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதரே
ஏழை என்னை ஆற்றி தேற்றி காப்பீரே
சரணம் சரணம் சரணம்

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலனீந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்துமா சரீரத்தை படைக்கிறேன்
சரணம் சரணம் சரணம்

4. உந்தன் சித்தம் செய்ய அருள் தாருமே
எந்தன் சித்தம் யாவும் என்றும் ஒழிப்பீரே
சொந்தமாக ஏற்று என்னை ஆட்கொள்ளும்
சரணம் சரணம் சரணம்

5. அல்லேலூயா பாடி வந்து துதிப்பேன்
மனதார உம்மை என்றும் போற்றுவேன்
அல்லேலூயா அல்லேலூயா ஆமென்
சரணம் சரணம் சரணம்

58

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
காலா காலமெல்லாம் என்னைக் காத்தவரை
நான் உள்ளளவும் துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்

1. பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பைச் சொரிந்து
என்னை மீட்டு காத்து நடத்திய
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

2. நண்பர்கள் பகைவராய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னைத் தேற்றி அன்பு கூர்ந்த
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

3. வாழ்விலே உம்மை நான் ஏற்றிடவே
தாழ்விலும் என்னை நீர் தாங்கிடவே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

59

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலேமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு
அல்லேலூயா ! அல்லேலூயா !

1. பாவத்தின் சுமையகற்றி கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மை கரம் நீட்டி காத்த
பரிசுத்த தேவன் அவரே அல்லேலூயா !

2. நீதியின் பாதையிலே அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப
புதுவாழ்வைத் தருகின்றாரே அல்லேலூயா!

3. மறுமையின் வாழ்வினிலே இயேசு
மன்னவன் பாதத்திலே
பசி தாகமின்றி துதி கானம் பாடி
பரனோடு நிதம் வாழுவோம் அல்லேலூயா!

60

போற்றுவோமே போற்றுவோமே
எம் தேவரீரை இவ்வேளையிலே
நன்றியுடனே

1. துங்கன் இயேசுவே தூயா உமக்கே
துதிகள் சாற்றிடுவேன்
மங்கா புகழும் மகிழ்ந்து போற்றி
எங்கும் துதித்திடுவேன்
கங்குல் அற எங்குமே ஒளி
மங்கிடாமலே தங்கிட வேணும்

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த எம்மையே
அணைத்து எடுத்தோனே
ஆழிதன்னிலெம் பாவம் எறிந்த
அன்னை உத்தமனே
அன்றும் இன்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே மண்மீதினிலே

3. பாவம் போக்கியே கோபம் மாற்றியே
ரோகம் தொலைத்தோனே
துரோகி என்னையே சுத்திகரித்த
தூய வேந்தனே
தூயா நேயா காயமாற்றியே
கருணா நிதியே பரிகாரியே

61

ஸ்தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

1. அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே

2. ஜோதியாய் வந்த அன்பே - பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்ய மதுர அன்பே

3. மாய உலக அன்பை - நம்பி மாண்ட
என்னை கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே

4. ஆதரவான அன்பே - நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமான தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே

5. வாக்கு மாறாத அன்பே - நித்தம்
வார்த்தையுரைத் தென்னை தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே

62

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை
தேவ தேவனுக்கே மகிமை அல்லேலூயா - துதி

1. தேவன் நன்மை வந்தடையச் செய்தார்
தம்மை யென்றும் அதற்காகத் தந்தார்
அற்புதங்கள் செய்யும் சர்வவல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார் - துதி

2. அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும்
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன் -துதி

3. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒருபோதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமாய் நின்றே
விடுவித்துக் காத்திடுவார் -துதி

4. கூப்பிடும் வேளைகளிலே என்னை
தப்புவிக்க ஆத்திரமாய் வந்தார்
சிங்கத்தின் மேலே நடந்திடுவேனே
சர்ப்பங்களை மிதித்திடுவேன் -துதி

5. பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர்
ஒருபோதும் வாதை என் கூடாரத்தை
அணுகாமல் காத்திடுவார் -துதி

63

1. இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் மீட்பராம்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் இராஜனாம்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் ஜீவனாம்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் தேவனாம்

அல்லேலூயா ஓசன்னா! அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா அல்லேலூயா

2. இயேசுவுக்கு ஸ்தோத்திரம் மாறிடா நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் ஆறுதல் நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் வானிலும் நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் பூவிலும் நேசர்

3. இயேசுவுக்கு ஸ்தோத்திரம் வாழ்விலே அன்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் தாழ்விலே நண்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் வாதையில் தாதி
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் பாதையில் ஜோதி

64

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

1. வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம்

2. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடி வந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம்

3. பார்த்திபனே கன தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் தோத்திரம்
வாழ்க, வாழ்க, வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென்

65

சீர்திரியேக வஸ்தே நமோ, நமோ, - நின்
திருவடிக்கு நமஸ்தே நமோ, நமோ!

பார்படைத்தாளும் நாதா, பரம சற்பிரசாதா
நாருறுந்தூய வேதா நமோ, நமோ, நமோ!

1. தந்தைப் பராபரனே, நமோ, நமோ, - எமைத்
தாங்கி ஆதரிப்போனே நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்
சொல்லரும் நலமீந்தாய்
எந்தவிர் போக்குமெந்தாய் நமோ,

2. எங்கள் பாவத்தினாசா நமோ, நமோ, -புது
எருசலேம் நகர் ராசா நமோ, நமோ!
எங்கும் நின் அரசேற எவரும் நின் புகழ் கூற
துங்க மந்தையிற் சேர நமோ, நமோ

3. பரிசுத்த ஆவி தேவா நமோ நமோ - திட
பலமளித் தெமைக் காவா நமோ, நமோ!
கரிசித்துத் தாநற்புத்தி கபடற்ற மன சுத்தி
திருமொழி பற்றும் பக்தி நமோ நமோ நமோ

66

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரை பாடுவேன்
- இயேசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

1. பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர்

2. புது எண்ணெயால் புது பெலத்தால்
புதிய கிருபை புதுகவியால்
நிரப்பி நிதம் நடத்துகின்றீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர்

3. நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசை கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னை தாங்குகின்றீர்

4. என் முன் செல்லும் உம் சமூகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னையும் தேற்றிடுதே

5. கனி செடி நீர் நிலைத்திருக்கும்
கொடியாய் அடியேன் படர்ந்திலங்க
கிளை நறுக்கி களை பிடுங்கி
கர்த்தரே காத்தென்னை சுத்தம் செய்வீர்

67

இன்ப இயேசுவையே தினம் துதித்திடுவேன்
புகழ் பாடி மகிழ்ந்திடுவேன்
இனிமை சுகமே அளித்தார் அவரை
பண்பாடி வாழ்த்திடுவேன்

1. கோரத்தின் எல்லை புயலினில்
பேரலை வீசும் கடலினில்
மாளும் பாவி என்னைத் தூக்கி
தோளில் தாங்கி கரை சேர்த்தார்
மகிபன் அருளின் வடிவாம் அவரை
மகிழ்வாகப் பாடிடுவேன்

2. மாந்தர்கள் கைவிட்ட வேளைதனில்
மாமன்னர் என்னை சேர்த்துக்கொண்டார்
ஜீவ இரத்தமதால் மீட்டார்
தூய வாழ்வதனை தந்தார்
மகவாய் எடுத்தே அணைத்தார் கரத்தில்
மகிழ்வாய் பாடிடுவேன் - இன்ப

3. வானக வேந்தன் என்றென்றுமே
வாழ்ந்திட தந்தேன் என் உள்ளமே
வான தூதர் போல நானும்
வாழ்வு காண வாக்கு தந்தார்
வருவார் அழைப்பார் வானகம் செல்வேன்
வல்லோனை வாழ்த்திடுவேன்

68

கர்த்தர் பெரியவர் அவர் நமது
தேவனுடைய நகரத்திலே
தமது பரிசுத்த பர்வதத்திலே
மிக துதிக்கப்படத் தக்கவர் (2)

1. வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமும் - சர்வ
பூமியின் மகிழ்ச்சியாய் இருக்கிறது
அது மகா இராஜாவின் நகரம்

2. தேவனே உம் ஆலயத்தின் நடுவில்
உம்முடைய கிருபையை
சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம்
உம் நாமம் விளங்குகிறது

69

புதிய பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல் பாடிப் பாடி - இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்

1. கழுவினார் இரத்தத்தாலே
சுகம் தந்தார் காயத்தாலே
தேற்றினார் வசனத்தாலே
திடன் தந்தார் ஆவியாலே - எனக்கு

2. கூப்பிட்டேன் பதில் வந்தது
குறைவெல்லாம் நிறைவானது
மகிமையின் ராஜா அவர்
மகத்துவமானவரே - இயேசு

3. மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு
கோபமோ ஒரு நிமிடம்
கிருபையோ நித்தம் நித்தம் - அவர்

4. உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மையே நம்பி உள்ளோம்
பூரண சமாதானம்
புவிதனில் தருபவரே - தினமும்

5. அதிசயமானவரே
ஆலோசனைக் கர்த்தரே
வல்லமை உள்ள தேவா
வரங்களின் மன்னவனே - எல்லா

70

தேவா சரணம் கர்த்தா சரணம்
ராஜா சரணம் இயேசைய்யா சரணம்

1. தேவாதி தேவனுக்கு சரணம்
இராஜாதி இராஜனுக்கு சரணம்
தூய ஆவி சரணம்
அபிஷேக நாதா சரணம்
சரணம் சரணம் சரணம் (2)

2. கர்த்தாதி கர்த்தனுக்கு சரணம்
காருண்ய கேடகமே சரணம்
பரிசுத்த ஆவி சரணம்
ஜீவ நதியே சரணம்
சரணம் சரணம் சரணம் (2)

3. மகிமையின் மன்னனுக்கு சரணம்
மாசற்ற மகுடமே சரணம்
சத்திய ஆவி சரணம்
சர்வ வியாபியே சரணம்
சரணம் சரணம் சரணம் (2)

71

1. வானபராபரனே இப்போ
வாரும் எம் மத்தியிலே
வந்து நின் திருகரத்தால் எம்மை
ஆசீர்வதியுமையா
எல்லா மகிமை கனமும் துதியும்
ஏற்றிட வாருமையா

2. பக்தரின் மறைவிடமே ஏழை
மக்களின் அதிபதியே
பாதமே கூடும் பாதகர் எமக்கு
பரிசுத்தம் ஈயுமையா
வாக்குமாறா தேவா வாரும்
வல்லமையால் நிறைக்க

3. கிருபாசன பதியே நின்
கிருபையில் நிலைத்திடவே
கஷ்டமதிலும் நஷ்டமதிலும் நின்
கருணையில் நின்றிடவே
நின் சக்தியோடு பக்தியில் நாம்
பூரணராகிடவே

4. தாய் என்னை மறந்தாலும் ஐயா
நீர் மறவாதிருக்க
ஆவியினால் என் உள்ளமதினில்
அக்கினி பற்றிடவே
யேகோவாவே எங்களின் ராஜா
எழுந்து வாருமையா

72

இன்பமிதே பேரின்பமிதே
இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே
இயேசு நாமமே

1. பாவம் போக்க வந்த நாமம்
இயேசு நாமமே
வாதை போக்க வந்த நாமம்
இயேசுவின் நாமமே - இன்பமிதே

2. நேற்றும் என்றும் மாறாத நாமம்
இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம்
இயேசுவின் நாமமே - இன்பமிதே

3. ஜீவ பாதை காட்டும் நாமம்
இயேசு நாமமே
ஜீவன் பெலன் தந்த நாமம்
இயேசுவின் நாமமே - இன்பமிதே

4. சாவு பயங்கள் நீக்கும் நாமம்
இயேசு நாமமே
சாபம் ரோகம் நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே - இன்பமிதே

5. தேவ ராஜ்யம் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே
தேவ நீதி நிறைந்த நாமம்
இயேசுவின் நாமமே - இன்பமிதே

73

நானும் என் வீட்டாருமோ வென்றால்
கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா? - 2

1. கர்த்தரையே சேவிப்பது
ஆகாததென்று கண்டால்
யாரை நீ சேவிப்பாய் என்பதை
இன்றே தீர்மானம் செய்வாய் - நானும்

2. அடிமையான நம்மையுமே
தேவாதிதேவன் மீட்டார்
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட
கர்த்தரை சேவிப்பாயா? - நானும்

3. நம் பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர்வாதம் கண்டு
நன்றியாய் சேவிப்பாயா? - நானும்

4. நன்மையான ஈவுகளை
தேவாதி தேவன் தந்தார்
கீழ்ப்படிந்தே அவர் சத்தம் கேட்டு
சாட்சியாய் ஜீவிப்பாயா? - நானும்

74

1. இயேசுவின் அன்பை அறியாமல்
கோடி கோடி மக்கள்
அலைந்து திரியும் வேளையிலே
திறப்பின் வாசலில் நிற்பவன் யார்?

அறியாதோர் இயேசுவை அறிந்திடட்டும்
அறிந்திட்டோர் யாவரும் செயல்படுவோம்

2. தேனினும் இனிய நற்செய்தியினை
அறியாதோர் ஆயிரம் ஆயிரமே
ஆத்தும பாரம் தாகத்துடன்
திறப்பின் வாசலில் நிற்பவன் யார்?

3. தாமதிக்க இனி காலமில்லை
இயேசுவை அறிவிக்க யாருமில்லை
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
திறப்பின் வாசலில் நிற்பவன் யார்?

75

வாலிப அலையே தற்காலிக நிலையே (2)
இயேசு எந்தன் கன்மலையே
இன்னல் துன்பம் இனி இல்லையே } 2

1. இள வயதும் வாலிபமும் மாயையே
இந்த இகவாழ்வும் இன்பமும் போலியே
நலமான நல்ல பங்கு தேவையே
வளமான வாழ்வு உண்டு வாரீரோ

2. விளைந்து நிற்கும் வயல்கள் எதிரே
ஏராளம்
அழிந்து விடுமே அத்தனை மணியும்
அதிவேகம்
எழுந்து வா, எழுந்து வா நீ இன்றே
கடந்த காலம் கைவராது விரைந்து வா

76

இந்தியாவில் இயேசு நாமம்
இன்றே கூறவேண்டும்
இந்தியரை பரலோகத்தில்
பாக்கியவான்களாய் மாற்றும் } 2

1. எலியாக்கள் எழும்ப வேண்டும்
எலிசாக்கள் எழும்ப வேண்டும் } 2
கர்த்தரின் வல்ல நாமம்
உயர்த்தியாக வேண்டும் } 2

2. அக்கினி இறங்க வேண்டும்
அற்புதம் விளங்க வேண்டும் } 2
கர்த்தரே தெய்வம் என்று
ஜாதிகள் முழங்க வேண்டும் } 2

77

கன்னியாகுமரி முதல் ஜம்முகாஷ்மீர்வரை
பாரததேசம் இயேசுவை அறியட்டுமே
பாரதம் நம் பாரதம் இயேசுவை
அறியட்டுமே (2)

1. பாரில் எங்கும் இயேசுவின்
நாமம் சொல்லுவோம்
பாவம் தீர்க்க வந்தோரை
சாட்சி பகர்வோம்
ஆயுசின் நாளெல்லாம்
வாழ்த்திப் பாடிடுவோம் (2)

2. உலக வாழ்க்கை குறுகியதே
சீக்கிரம் கடந்திடும்
உலக மீட்பர் இயேசுவின்
வருகை சமீபமே
தேசம் அழியுது பார்
இயேசு வரப் போகிறார் (2)

3. கண்ணீரோடு ஜெபித்திடுவோம்
இதயத்தை ஊற்றிடுவோம்
தியாகத்தோடு செயல்படுவோம்
உள்ளதைக் கொடுத்திடுவோம்
இயேசுகிறிஸ்துவுக்காய்
வாழ்வை அர்ப்பணிப்போம் (2)

78

தாசரே இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்

நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம்
மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம்

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தி அன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை
நமது துன்பத்தை, சுமந்து தீர்த்தாரே

2. பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள்
படுகுழிக்குள், விழுந்தனரே

4. இந்து தேசமாது சிரோமணிகள்
விந்தையொளிக்குள் வரவழைப்போம்
சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம் நாம்
முயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம்
ஜெயித்திடுவோம்

79

1. இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வார் யார்?

பல்லவி

திறவுண்ட வாசல் அடைபடும்முன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வார் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினால் எழுந்து செல்வீர்

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள்

4. விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒரு மனம், ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

80

உள்ளத்தில் அவர்பால்
பேரன்புள்ளோரெல்லாம்
எண்ணத்தில் தெளிவைப் பெறுவீர்
சொல்லதில் கூறுவீர் வாழ்வதில்
சாதிப்பீர்
இயேசு தேடும் நபர் இவரே

1. பரமன் பேரிலே பற்றுக் கொண்டோரெல்லாம்
எளிதில் புரிவார் அவரின் பாரத்தை
உலகின் பேரிலே இயேசுவின் அக்கறை
தமதாக்கியவர் வாழுவார், மாளுவார்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

2. தேசங்கள், தீவுகள், பல பிராந்தியங்கள்
பாவத்தால் நிறைந்து சாபமாகிறது
திறப்பின் வாயிலே நிற்கத்தக்கதாக
தேவன் தேடும் நபர் நம்மிலே யார்யாரோ?
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

3. செல்வம், சீர் சிறப்பு, நற்குடிப்பிறப்பு
செல்வாக்கு அந்தஸ்து படாடோபவஸ்து
யாவையும் பெறினும் சாகையில் என் செய்வீர்
உலகின் சம்பத்து குப்பை என்றே சொல்வீர்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

81

1. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

பல்லவி

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜபாதையைச் செவ்வையாக்குவோம்

3. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார்முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்

4. ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல, அவரே எல்லாம்
என முடிவு செய்தோம், அதில்
நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்

82

ஜீவியமே ஒரே ஜீவியமே
அண்ட சராசரம் அனைத்திலுமே
மேவி வசிக்கும் மனிதர் அனைவரும்
பூமியில் வாழ்வது ஒரே தரமே

சரணங்கள்

1. பிறப்பதும் இறப்பதும் தெய்வச் செயல்
இடையில் இருப்பது வாழ்க்கையாகும்
இயேசுவில் சார்வதால் பரிசுத்தம் காணும்
பரிசுத்தர் ஆட்சியில் சாட்சி கூறும்
இதைவிடில் முடிவது வீழ்ச்சியாகும்

2. நித்தம் நம்மைவிட்டுச் செல்வார் பாரீர்
அவர் யாரும் செல்லும் அவ்விடமும் பாரீர்
அலறலும் புலம்பலும் உடல்தனைக் கீறலும்
நரகத்தின் தினசரிக் காட்சி கேளீர்
இரக்கத்தின் வழி காணார் கதியும் காண்பீர்

3. திறப்பின் முகம் நிற்க ஆட்கள் தேவை
தியாகத்தின் பாதைக்குச் செல்வோர் தேவை
என் ஜனம் அழியுதே என ஏங்கும் ஆண்டவர்
துக்கத்தைத் தணிக்கும் சீஷர் தேவை
முன்வருவோர் யார்க்கும் இதுவே வேளை

4. எண்ணிப்பார் கழிந்திட்டக் காலமதை
கதையைப்போல் மனிதரின் நாட்கள் செல்லும்
உலகத்து சேவை சாகையில் ஓயும்
உன்னுடன் மரித்தபின் வருவதேது?
கிறிஸ்துவின் சேவையே நிலைத்து நிற்கும்

5. அர்ப்பணம் தந்தையே கையளித்தேன்
கல்வி, செல்வம், சுகம், பொருள் அனைத்தும்;
செல்லுவேன் சொல்லுவேன்
இயேசுவே வழி என
வாழ்க்கையில் தம்மையே கொண்டு
வாழ்வேன்
என்றுமே அங்கே நான் உம்மில் வாழ்வேன்

83

மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே
மந்தையில் சேரா ஆடுகளே

அழைக்கிறார் இயேசு
அவரிடம் பேசு நடத்திடுவார்

1. காடுகளில், பல நாடுகளில்
என் ஜனம் சிதறுண்டு சாகுவதா? } 2
பாடுபட்டேன் அதற்காகவுமே
தேடுவோர் யார் என் ஆடுகளை?

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
என்னை அங்கு சொல்ல இங்கு
ஆட்கள் உண்டு } 2
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்

3. எனக்காய்ப் பேசிட நாவு வேண்டும்
என்னைப்போல் அலைந்திடக்
கால்கள் வேண்டும் } 2
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறேன் தரவேண்டும்

84

நெஞ்சம் அஞ்சவேண்டாம்
செய்தி எடுத்துரைப்பீர்
உங்களைத் தொடுகிறவன்
எந்தன் கண்களைத் தொடுகிறவன்

1. அக்கினி கடலில் நின்றார், ஒரு முடியும்
கருகவில்லை
சிங்கக் கெபியில் எறிந்தார் ஒரு
சேதமும் காணவில்லை
உள்ளங்கை நடுவில் உங்களைக் கண்டேன்
உள்ளம் துவள வேண்டாம் - அல்லேலூயா

2. எக்காளம் ஊதவேண்டும்,
ஜாமக்காரரல்லவோ
இக்காலம் மௌனம் கொண்டால்,
குற்றம் நம்மேலல்லவோ
விசுவாசவீரரே வீறுகொண்டு எழுவீர்
பூமி எங்கும் செல்லுவீர் - அல்லேலூயா

3. எருசலேம் துவங்கி, பூமி இறுதி வரை
குமரிமுனை துவங்கி, வடதிசையின்
சுவர் தொடுங்கள்
புறப்பட்டுச் செல்லுங்கள் சீடர்கள்
ஆக்குங்கள்
திருச்சபையைக் கட்டுங்கள் - அல்லேலூயா

85

1. கொண்டு வாருங்கள் கொண்டு வாருங்கள்
என் மக்களை என் பக்கமாக கொண்டு
வாருங்கள்
ஆற்றி தேற்றுங்கள் ஆசீர்வதியுங்கள்
வாழப்பிறந்த மனிதர்களை கொண்டு
வாருங்கள்

குற்ற உணர்வை கொல்லும் உணர்வு
கொண்டு வாருங்கள்
சுத்தம் செய்யும் எந்தன் இரத்தம்
கொண்டு வாருங்கள்
தாகம் உள்ளோர் அனைவரையும்
கொண்டு வாருங்கள்
பாவம் தீர்க்கும் சிலுவைப் பக்கம்
கொண்டு வாருங்கள்

2. மதமாற்றம் வேண்டாம் மனமாற்றம்
தேவை
விரும்பி வரும் ஜனங்கள் மட்டும்
கொண்டு வாருங்கள்
வருகை வரும்வரை கிருபை சிலுவையில்
வாழப் பிறந்த மனிதர்களைக்
கொண்டு வாருங்கள்

3. என்னைக் கண்டவன் பிதாவைக்
கண்டவன்
வருந்தி வாழும் ஜனங்கள் யாரும்
கொண்டு வாருங்கள்
வரும் எவரையும் தள்ளவே மாட்டேன்
வாழப் பிறந்த மனிதர்களைக்
கொண்டு வாருங்கள்

4. பொறுப்பை உணர்ந்தோரே
திருச்சபையோரே
தீவிரமாய் ஓடிச்சென்று கொண்டு
வாருங்கள்
அனுப்ப தகுதியோ ஆட்கள் இல்லையே
காலம் சிறிது கடமை பெரிது கொண்டு
வாருங்கள்

86

என் சபையைக் கட்டுவேன் என்ற
இயேசு பேசுகின்றார்
உள்ளத்தைக் கேட்கின்றார்
உனக்குள்ளதைக் கேட்கின்றார்
வாராயோ? தாராயோ?
உந்தன் இயேசு கேட்கின்றார்

1. காலங்கள் வேகமாய் கடந்து செல்லும்
பருவங்கள் விரைவினில் மாறிவிடும்
இரட்சிப்பின் பணியைச் செய்திடவே
இன்றைக்கே தருணம் வந்திடாயோ?

2. இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
தூயவர் ஆவியை நிரம்பப் பெற்றோர்
தரிசனம் பெற்றிட காத்திருந்தால்
அருட்பணி செய்திட யார் வருவார்?

3. பெலனில்லை அறிவில்லை வரமுமில்லை
குறையுள்ளவன் எனத் தயங்கிடாதே
இயேசுவின் கரத்தினில் தந்துவிடு
வல்லவர் ஆயுதமாக்கிடுவார்

87

அலையலையாய் அலையினூடே
அல்லேலூயா பாடிட வா (2)

1. அலை கடலில் மீன் பிடிப்போனே - நீ
வலை கிழிய மீன் பிடிக்க வா
கலைகளெல்லாம் கைவிட்டதோ - உன்
வலையை வலப்புறமே வீச வா

2. அலைகடலைக் கடந்து சென்றோனே - நீ
வலைகளிலே சிக்கி விட்டாயோ
மலைதனிலே சிலுவையண்டை - பார்
விலைமதியா விடுதலையுண்டே

3. பல வழிகள் பார்த்து நிற்கும் நீ - பார்
மலைகளிலே மாளும் மாந்தரை
அலையலையாய் மாந்தர் செல்கிறார் - உன்
வலையுடனே வேகமாக வா

4. அலைகளினால் அமிழும் நண்பனே - நீ
அலைகளின் மேல் நடந்த நாதராம்
த்லைவன் இயேசு கரம் பிடித்திட்டால்
அலைகளின் மேல் அழைத்துச் செல்லுவார்

88

மா பெரிதான வேலையிது
மாந்தரே உணர்ந்திடுவீர்
மாசற்ற தேவன் மகிமைப் பணியிது
மகிழ்வுடன் ஏற்பீரே

1. யார் போவார்? எந்தனுக்காய்
என்றே கேட்கையிலே
பார் மீதில் எந்தனையே
அனுப்பிடும் என்பீரோ?

2. அறுவடையோ அதிகமாயும்
ஆட்களோ கொஞ்சமென்றார்
மறு பிறப்பின் மாட்சிமையை
மண்ணில் உரைப்போர் யார்?

3. உன்னதத்தின் தூதர்களும்
அடைந்திடா பெரும் பாக்கியம்
உந்தனுக்கே கிடைக்கையிலே
உதறியே தள்ளுவானேன்?

4. இலவசமாய்ப் பெற்றுக் கொண்ட
ஈவின் அனுபவத்தை
உலகினுக்கே உவந்தளிக்க
ஊக்கமாய் வருவாயா?

89

1. அறுவடைக்கு வேலையாட்கள்
கொஞ்சமாகையால்
அறுப்புக்கெஜமான் வேலையாட்கள்
அனுப்ப வேண்டுங்கள்.
விளைந்து நிற்கும் வயல் நிலங்கள்
வேகம் பாருங்கள்
அறுப்புக்கெஜமான் வேலையாட்கள்
அனுப்ப வேண்டுங்கள்.

அறுப்பு மிகுதி பொறுப்பு மிகுதி
அறுவடைக்கு ஆட்கள் வேண்டும்
வேண்டிக் கொள்ளுங்கள்

2. இயேசு உனக்காய் மரித்தார் என்று
கூறி அறிவித்து
தேசமெங்கும் திரிவோருக்காய்
வேண்டிக் கொள்ளுங்கள்
நாச சாத்தான் வலையில் சிக்கி
மடியும் மானிடர்
நேச மீட்பர் பாதம் பற்ற
வேண்டிக் கொள்ளுங்கள்.

3. இந்த செய்தி முந்தி ஏன் நீர்
சொல்ல வரவில்லை
என்று கேட்டு ஏங்கி நிற்கும்
மக்கள் பாருங்கள்
பிந்தியேனும் இந்நற்செய்தி
கூற வாருங்கள்
அந்தி நேரம் வந்த பின்னர்
நொந்து பயனில்லை

90

அறுப்பு மிகுதி ஆட்களில்லை
ஆள் இருந்தாலும் அனல் இல்லை
கலங்கும் கண்களில் கண்ணீரோடு
மன்னவன் இயேசு ஏங்குகிறார்.
கண்களை ஏறிட்டுப் பார்
வயல்நிலம் அறுப்புக்கு ஆயத்தமே

1. ஆத்தும ஆதாய பணிகட்காய்
ஜெபிக்கும் உள்ளங்கள் எங்கும் இல்லை
உள்ளம் உடைந்து பாரத்தால்
ஜெபிக்க நீ முன் வருவாயா?

2. சுயத்தை வெறுத்து கொடுத்திடும்
பக்தரின் கரங்கள் வெகு சொற்பம்
இயேசுவிற்காக கொடுப்பாயா?
பரலோகத்தில் சேர்த்து வைப்பாய்

91

கல்வாரியண்டையில் பல்லாயிரம் பேரை
பொல்லாங்கன் கையினின்றிழுக்க
உழைப்போம்
பொல்லா உலகினில் நல்ல சுவிசேஷம்
எல்லோரும் கேட்டிட நில்லாமல் உழைப்போம்

1. அற்பமாகவே எண்ணப்படுவதும்
எப்பக்கத்திலும் நெருக்கும் சூழலும்
சாவுக்கேதுவாம் சூழ்நிலைகளும்
சுவிசேஷத்தினிமித்தமே - கல்வாரி

2. எந்தனைத்தானே அடிமையாக்கியும்
பந்தபாசங்கள் விலக்கி வாழ்ந்துமே
இந்தியாவுக்காய் சிந்தும் கண்ணீரும்
சுவிசேஷத்தினிமித்தமே - கல்வாரி

3. லாபமென்று நாம் எண்ணினதெல்லாம்
நஷ்டமென்று தான் விட்டுவிட்டதும்
எல்லாருக்குமாய் எல்லாமானதும்
சுவிசேஷத்தினிமித்தமே - கல்வாரி

4. ஹட்சன் டெய்லரும், ஜிம்எலியெட்டும்
சாது சுந்தர்சிங் போன்றவர்களும்
தியாகம் செய்தனர், ஜீவன் விட்டனர்
சுவிசேஷத்தினிமித்தமே - கல்வாரி

92

பொன்னான இயேசுவை
புண்ணியர் நல் நேசரை
கொண்டு செல்வோம் பூலோகமெங்கும்
அவர் ஒன்றே வழி என்றே கூறுவோம்

1. அவர் எந்நாளும் நம்மோடு இருப்பதினால்
அலைகள் புயல்கள் நம்மை
அசைப்பதில்லை
அஞ்சாமல் செல்வோம் வஞ்சகனை
வெல்வோம்
அரணான கோட்டைகளை
பிடித்திடுவோம்

2. எலியா எலிசா மூலம் அற்புதம் செய்தார்
நம் மூலம் இந்த நாளில் நிச்சயம் செய்வார்
எத்தனையோ நோய்கள் அத்தனையும்
போக்கும்
இயேசுவின் இரத்தத்தாலே ஜெயம்
பெறுவோம்

3. காலமும் கடல் அலையும் காத்திருக்காது
உள்ள காலத்திலே உலகை கலக்கிடுவோம்
கல்லான நெஞ்சம் கரைந்திடச் செய்யும்
கனிவான கர்த்தர் பணி செய்திடுவோம்

93

இந்தியா எங்கள் தாயகமே
இறைவன் விரும்பும் பாரதமே
ஆன்மீக விடுதலை அடைந்திடவே
அன்பராம் இயேசுவைக் கொடுத்திடுவோம்

1. இறைவன் எங்கே (எங்கே) என்று தேடும்
தெய்வம் இங்கே (அங்கே) என்று ஓடும்
அலைமோதும் மானிடர் வழி அறியாமலே
மாண்டிட நாமும் சம்மதியோம்

2. இயேசுவை வாயினால் அறிவித்திடுவோம்
இயேசுவை வாழ்வினில் காட்டிடுவோம்
இயேசுவின் அருட்பணி நிறைவேறிட
இயேசுவின் முழு சித்தம் கீழ்ப்படிவோம்

3. சொல்லொன்றும் செயலொன்றும்
இனியும் வேண்டாம்
தொல்லை இல்லா சுக வாழ்வு தேட்டம்
வேண்டாம்
நற்பணி வளர்ந்திட கோதுமை மணியாக
அர்ப்பணிப்போம் நம்மை முற்றிலுமாய்

94

என் பின்னே வாருங்கள் - உங்களை
மனுஷரைப் பிடிப்போராக்குவேன்

1. கடலில் மீன் பிடிக்கச் சென்று
களைத்துப் போயிருப்பினும் - உங்களை
மனுஷரைப் பிடிப்போராக்குவேன்
உலக வேலை உடல் வருத்தி
உடைந்து போயிருப்பினும் - உங்களை
மனுஷரைப் பிடிப்போராக்குவேன்

2. வயலில் நல் விளைச்சல் கண்டும்
தயங்கி நின்று அங்கலாய்க்கும் - உங்களை
மனுஷரைப் பிடிப்போராக்குவேன்
புயலில் சிக்கி நொந்த யோனா
போல நீங்கள் பதறினும் - உங்களை
மனுஷரைப் பிடிப்போராக்குவேன்

3. மலைகளெங்கும் சிதறி வாழும்
மனிதர் மீட்பை அடைந்திட - உங்களை
மனிதரைப் பிடிப்போராக்குவேன்
வருகை நாள் சமீபமன்றோ
வருந்தும் யாரும் வாழ்ந்திட - உங்களை
மனுஷரைப் பிடிப்போராக்குவேன்

95

இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்
மௌனமாயிருக்காதே
மௌனமாயிருக்காதே (2) நீ

1. அறுவடை காலத்தில் மௌனமாயிருந்தால்
அறுவடையிழப்பாயே
ஆண்டவர் காலத்தில் மௌனமாயிருந்தால்
ஆத்துமா இழப்பாயே! - இது

2. இந்தியர் இயேசுவை அறிந்திடும் காலம்
இதுதான் இதுதானே
இந்த காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புத்தான் வருமோ? - இது

3. பகட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது உன்னை இழுக்கிறது?
கணக்குக் கேட்கும் கர்த்தர் வருவார்,
வெறுங்கையாய் நிற்பாயோ? - இது

96

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே

உந்தனுக்கே ஊழியஞ் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்

1. ஜீவகாலம் முழுவதும்
தேவபணி செய்திடுவேன்
பூவில் கடும் போர்புரிகையில்
காவும், உந்தன் கரத்தினில் வைத்து

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நாளிலத்தினில் நாதா, வெல்லுவேன்

3. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும்

4. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே, அங்கே இதோ போகிறேன்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்

97

வந்தேன் நாதா
வந்தேன் பிரபு
நம்பி வந்தேன் நாதா
வந்தேன் பிரபு

1. காலைதோறும் புது கிருபையாலே
நிரப்பிட உந்தன் பாதத்தண்டை
வசனத்தால் கழுவிட என் இயேசுவே
வந்தேன் நாதா வந்தேன் பிரபு

2. புது வாழ்வு எனக்கு சந்ததாலே
நிதம் உந்தன் வேலை நான் தொடர
இவ்வேளை என்னை அர்ப்பணிக்க
வந்தேன் நாதா வந்தேன் பிரபு

98

1. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே - எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத்தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2. என் எண்ணம்போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்டதாருமில்லை
உம் சிலுவை அன்பைச் சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்

3. ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெரும் காயங்கள் ஏற்ற நாதா
வான்புவி கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

4. என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த சவு வரங்கள் யாவும்
உம் பணி சிறந்திட முற்றும் தந்தேன்

99

நான் என்னையே இந்நேரமே
உம் சொந்தமாய் தந்தேன் இதோ

1. சோர்வாகவே நான் நிற்கையில்
என் நேசரே ஏற்றுக் கொள்ளுமேன்

2. காடானாலும் மேடானாலும்
என் இயேசுவே பின்பற்றுவேன்

3. என் நேசரே என் இராஜனே
உம்மை என்றும் பின்பற்றுவேன்

100

ஜீவ தேவன் கரத்தினிலே
ஜீவ பலியாய் தந்தேன்
ஜீவனையே முழுமையாக
ஜீவாதிபதியில் கண்டேன்

1. அவர் முகம் மறைந்தாலும்
புயல் அடித்தங்கலாய்த்தும்
ஏசு எந்தன் கன்மலையே
அவர் எனக்குறைவிடமே

2. நற்செய்தி என் மகிழ்ச்சி
அச்செய்தி உண்மையாமே
நற்செய்தி என் ஆதாரமே
உச்சித மோட்சம் செல்ல

3. ஆத்தும ஆதாயம் நான்
நித்தமும் செய்திடுவேன்
எத்திசையும் இயேசுவை நான்
நித்தமும் சொல்லிடுவேன்

101

1. என்னையே உம் கைகளில்
அர்ப்பணம் செய்கின்றேன் நான்
என்னிலுள்ள எல்லாம் உம்
சிலுவையண்டை வைக்கின்றேன்

அங்கீகரியும் இயேசு நாயகா
உந்தன் நாமம் அறிவிப்பேன்
ஜீவனுள்ள நாளெல்லாம் உண்மையாய்
உமக்காய் நான் வாழுவேன்

2. என் கையில் நீர் தந்திட்ட
தாலந்துகள் எல்லாமே
உந்தன் பணி செய்திட
இப்போதே அர்ப்பணிக்கின்றேன்

3. எங்கு நீர் அழைத்தாலும்
அங்கே நான் சென்றிடவே
இந்நேரமே என்னையே
அர்ப்பணம் செய்திடுகின்றேன்

102

1. ஜீவபலியாய் என்னை ஒப்படைக்கின்றேன்
பாவ பரிகாரி உம் பாதத்தண்டையில்
பாவம் போக்கிடும் தூய ரத்தத்தால்
பாவம் நீக்கியே சுத்தமாக்கிடும் (2)

ஏற்றுக்கொள்ளுமே இயேசு தேவனே
காத்துக்கொள்ளுமே நேச கர்த்தரே

2. எந்தன் சரீரமதை ஜீவபலியாய்
உந்தன் கரங்களிலே ஒப்படைக்கிறேன்
புத்தியுள்ளதோர் ஆராதனையை
பக்தியுடனே நித்தமும் செய்வேன் (2)

3. எந்தன் தேசமெங்கும் உந்தன் நாமத்தை
எந்த நாவுமே பாடும் சத்தம் கேட்டிட
எந்தன் வாழ்வினை ஜீவபலியாய்
சிந்தையார நான் தந்திடுகின்றேன் (2)

103

1. அருள் ஏராளமாய் பெய்யும்
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

அருள் ஏராளம், அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல
திரளாய் பெய்யட்டுமே

2. அருள் ஏராளமாய் பெய்யும்
மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்.

3. அருள் ஏராளமாய் பெய்யும்
யேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமேன்

4. அருள் ஏராளமாய் பெய்யும்
பொழியும் இச்சணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே

104

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவநதியே என்னில் பொங்கி பொங்கி வா
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம்
தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர்
வாக்களித்தீரே

2. ஜீவ தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே
கனி தந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட

3. இரட்சிப்பின் ஊற்றுகள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே
ஆத்ம பாரமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே

4. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
பாவக்கறைகள் முற்றும் நீங்கிட
பரிசுத்த சமூகத்தில் ஜெயம் பெற்றிட

105

அன்பென்னும் ஆவியால் என்னையும்
ஆண்டவரே நீர் நிரப்பிடும்
ஆயுள் முழுவதும் நின்சேவை செய்ய
ஆண்டவரே என்னை அனுப்பிடும்

1. அழியும் ஜனத்தின் அழுகுரல்
அன்பரே என்னையும் உருக்காதோ
மாளுவோரை மீட்க வந்தவரே
மாண்டிடும் மக்களை மீட்டிடவே
அனுப்புமே என்னையுமே
ஆண்டவரே உம்மை வேண்டுகிறேன்

2. நல்ல போராட்டத்தை போராடி
ஓட்டத்தை முடிக்க உதவுமேன்
உம்மோடு பாடு சகிக்கவும்
உம் நாமத்திற்காக மரிக்கவும்
ஆயத்தமே நானும் இப்போ
ஆண்டவரே என்னை ஏற்றுக்கொள்ளும்

106

ராஜா உந்தன் வீட்டிலே
உபயோகமுள்ளதோர்
பாத்திரமாகத் தெரிந்து கொண்டீர்
தோத்திரங்கள் செலுத்துகின்றேன்

1. கந்தை போன்ற என் வாழ்விலே
நிந்தைகள் பல உண்டே
கர்த்தனே நான் கெஞ்சுகின்றேன்
கேட்டு சுத்தம் செய்தருளும் -ராஜா

2. சுத்தமற்ற பாத்திரம் நான்
இரத்தத்தாலே கழுவிடுமே
பரிசுத்தப்படுத்தி என்னை
பிரித்தே பயன்படுத்தும் -ராஜா

3. எந்தன் வாஞ்சை எந்நாளுமே
எஜமானை மகிழ்விப்பதே
எப்பணி நீர் தந்திடினும்
அர்ப்பணிக்க ஆயத்தமே -ராஜா

4. உந்தன் சித்தம் போலென்றுமே
எந்தன் சித்தம் நீக்கியே
என்னை பயன்படுத்திடவே
இப்போதே படைக்கின்றேன் -ராஜா

107

கீழே வேர் கொள்ளுவோம்
மேலே கனி கொடுப்போம்
கீதங்கள் பாடியே
வேதம் எடுத்துரைப்போம்

1. வேதத்தில் வேரூன்றி ஆழமாய் ஆராய்வோம்
நாதரின் பாதத்தில் வேதம் நாம் கற்றிடுவோம்
இயேசுவில் சார்ந்து நற்செய்தி கூறிடுவோம்
நற்கனி தந்திடுவோம் -கீழே வேர்

2. சீடராய் வாழ்ந்திடும் வாழ்வினில் சிறந்திடுவோம்
சேதங்கள் வந்தாலும் சாய்ந்திடா வேர்
கொள்ளுவோம்
விசுவாசமும் தியாகம் தரிசனமும்
வேர்களாய் விளங்கிட்டிடும்- கீழே வேர்

3. தேசங்கள் தீவுகள் தேடியே சென்றிடுவோம்
இயேசென்னும் சொல் கேளா மாந்தரைக்
கண்டிடுவோம்
ஆத்துமாக்களை ஆதாயம் செய்திடவே
அர்ப்பணம் செய்திடுவோம்.- கீழே வேர்

108

எங்கே விடுதலை! விடுதலை!
அங்கே நிம்மதி! நிம்மதி!
இயேசு தருகின்றார்
மெய்யான விடுதலை

1. கருவினில் உருவான போது
பாவத்தில் உருவானதால்
நன்மை செய்பவரில்லையே
ஒருவராகிலும் இல்லையே

2. உந்தனின் பாவ பழக்கங்கள்
முழுமையாக உன்னை ஆள்வதால்
வேண்டாம் என்று நீ தள்ளினும்
உன்னை விடுவதாயில்லையே

3. உள்ளம் திறந்து நீ கூறிடு
மன்னிப்பை நீயும் கோரிடு
சிலுவை நாதரின் புண்ணியங்கள்
பாவம் அற உன்னை விடுவிக்கும்

4. பிசாசின் தந்திர பிடியிலும்
மூடப்பழக்கத்தின் தளையிலும்
சிக்குண்ட நம் ஜனங்களை
விடுவிக்க இன்றே விரைந்து வா

109

1. என் இதயக் கதவினில் ஓர் சத்தம்
நான் கேட்டேன் திறந்திட்டேன்
உள்ளே வந்தார் என் உள்ளம் வந்தார்
கள்ளனாம் எந்தன் உள்ளம் வந்தார்

விருந்தை அளித்திட்டார்
அருந்தி மகிழ்ந்திட்டேன்.

2. உன் இதயக் கதவினை தட்டிடும் ஓர்
அன்பருண்டு அறியாயோ நீ!
உன்னதர் இயேசு உள்ளே வந்தால்
உந்தனின் உள்ளம் இன்புறுமே
இன்றைக்கே திறந்திடுவாய்
என்றென்றும் மனம் மகிழ்வாய்.

110

ஏமாறாதே! ஏமாறாதே!
அன்பு என்று ஏமாறாதே!
ஏமாற்றாதே! ஏமாற்றாதே!
அன்பு என்று ஏமாற்றாதே!

1. வேண்டாத அன்பு எல்லாம்
விபரீதமாகிவிடும்
அழகான அன்பு எல்லாம்
ஆபத்தாய் முடிந்து விடும். - ஏமாறாதே

2. திரைப்பட அன்பிற்கெல்லாம்
வரைமுறை இல்லையம்மா
நாவல்கள் சொல்வதெல்லாம்
நடைமுறைக்காகாதப்பா - ஏமாறாதே

3. இயேசுவின் அன்பைப் பாரு
அவசியம் அதை நீ நம்பு
உள்ளத்தை திறந்து கொடு - அந்த
அன்பிற்காய் வாழ்ந்து விடு.- ஏமாறாதே

111

முன்னேறி செல்வோம் செயல்வீரரே
விசுவாசம் தான் நம் ஜெயமே

1. சாத்தானின் அம்புகள் சீறினாலும்
சதிகார வம்புகள் மீறினாலும்
அதிகாரம் எல்லாமே இயேசுவுக்கே
அவர் பின்னே செல்லுவோம் வெற்றி
நமக்கே.

2. பரிசுத்தர் பாசறை நிரம்பட்டுமே
பரலோக ராஜ்யம் வளரட்டுமே
மானிட யுக்திகள் மறையட்டுமே
பரிசுத்த சந்ததி பெருகட்டுமே.

3. தேசத்தின் தேவையை தெரிந்து கொண்டோம்
இயேசுவின் நேசத்தால் நெருக்கப்பட்டோம்
விசுவாச கேடகம் சாய்வதில்லை
துளி ரத்தம் உள்ளவரை ஓய்வதில்லை

112

தெரிந்து கொண்டார் - என்னை
தெரிந்து கொண்டார்
பரிசுத்தத்திற்காக தெரிந்து கொண்டார்
தெரிந்து கொண்டார் - என்னை
தெரிந்து கொண்டார்
கிறிஸ்து இயேசுவில் தெரிந்து கொண்டார்

1. உலகம் தோன்றிடுமுன்னே என்னைப்
பரிசுத்தத்திற்காக தெரிந்து கொண்டார்
அன்பிலே பரிசுத்தம் பண்பிலே பரிசுத்தம்
வாழ்வெங்கும் பரிசுத்தமே.

2. அழைத்தவர் பரிசுத்த தேவனன்றோ
அழைப்பினைப் பெற்ற நாம் அவர்போலாவோம்
உள்ளத்தில் பரிசுத்தம் இல்லத்தில் பரிசுத்தம்
ஊழியம் பரிசுத்தமே

3. புதுவாழ்வு பெற்று நாம் வாழ்ந்திடுவோம்
பொதுவாழ்வில் பரிசுத்தராக வாழ்வோம்
தூசியை உதறி நாம் தூய்மையாய் வாழ்வோம்
தூயாவி துணையுடனே

113

பாகாலுக்கு மண்டியிடாத
பரிசுத்தர் வேண்டும் இந்நாளில்
பொற் சிலைக்குத் தலைகுனியா
பரிசுத்தர் வேண்டும் இந்நாளில்.

1. கொக்கரிக்கும் கோலியாத்துக்கள்
கொதித்தெழுந்து கர்ச்சித்திடினும்
கூழாங்கல்லும் கவணும் போதுமே
வீழ்த்தியே சாய்த்திடலாமே.

2. சுற்றி வந்து சீறும் சிங்கங்கள்
பதிவிருந்து பாய்ந்து வந்தாலும்
கூப்பிடும் உன் குரலினைக் கேட்டே
வாய்களை அடைத்துப் போடுவார்.

3. எரி நெருப்பு ஏழு மடங்காய்
எரியச் செய்து எதிரி வந்தாலும்
எரியும் தீயில் உன்னுடனே
இருக்கும் தேவன் உண்டல்லவோ.

4. குந்தி குந்தி நடக்கும் கூட்டமே
குதித்தெழுந்து இயேசுவண்டை வா
முந்தி அவர் அன்பு கூர்ந்தாரே
நொந்து ஜீவன் உனக்காய் ஈந்தாரே.

5. முத்தத்தினால் காட்டி கொடுக்கவோ
முத்திரை மோதிரம் ஆக்கினார்
இரத்தம் சிந்தி உன்னை மீட்டதும்
நித்தம் சேவை செய்வதற்கன்றோ?

114

கால்மிதிக்கும் தேசமெல்லாம் - என்
கர்த்தருக்கு சொந்தமாகும்
கண்பார்க்கும் பூமியெல்லாம்
கல்வாரி கொடிபறக்கும்

1. பறக்கட்டும் பறக்கட்டும்
சிலுவையின் ஜெயக்கொடி - *அல்லேலூயா*
உயரட்டும் உயரட்டும்
இயேசுவின் திருநாமம் - *அல்லேலூயா*

2. எழும்பட்டும் எழும்பட்டும்
கிதியோனின் சேனைகள்
முழங்கட்டும் முழங்கட்டும்
இயேசுதான் வழியென்று

3. செல்லட்டும் செல்லட்டும்
ஜெபசேனை துதிசேனை
வெல்லட்டும் வெல்லட்டும்
எதிரியின் எரிகோவை

4. திறக்கட்டும் திறக்கட்டும்
சுவிசேஷ வாசல்கள்
வளரட்டும் வளரட்டும்
அபிஷேக திருச்சபைகள்

115

1. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
நானில மெங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்

தேவ கிருபை எங்கும் பெருக
தேவனை ஸ்தோத்தரிப்போம்
பாவ இருள் அகல
தேவ ஒளி அடைந்தோம்

2. அவரை நோக்கி கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா
எத்தனையோ பதிலளித்தார்

3. பதறிப்போன பாவிகளாக
சிதறி எங்குமே அலைந்தோம்
அவரை நாம் தெரிந்தறியோமே
அவர் நம்மை தெரிந்தெடுத்தார்

4. பலத்த ஜாதி ஆயிரமாக
படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான
எமக்கவர் அருள் புரிவார்

5. நமது கால்கள் மான்களை போல
நடந்து ஓடி பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில் ஏற்றுகின்றாரே
உன்னதமான ஊழியத்தில்

6. பரமனேசு வந்திடும்போது
பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம்

116

1. கரை ஏறி உமதண்டை
நிற்கும் போது ரட்சகா
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டு போவேனோ?

ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா!
வெறுங்கையனாக உம்மைக்
கண்டு கொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்க்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நிர்ப்பந்தராய்

3. தேவரீர் கைதாங்க சற்றும்
சாவுக்கஞ்சிக் கலங்கேன்
ஆயினும் நான் பலன் காண
உழைக்காமற் போயினேன்

4. வாழ்நாள் எல்லாம் வீணாளாகச்
சென்று போயிற்றே! ஐயோ!
மோசம் போனேன் விட்ட நன்மை
அழுதாலும் வருமோ?

5. பக்தரே உற்சாகத்தோடு
எழும்பிப் பிரகாசிப்பீர்
ஆத்துமாக்கள் இயேசுவண்டை
வந்து சேர உழைப்பீர்

117

அன்பின் ஆண்டவர் வருகை
வேகம் நெருங்குதே
ஆத்தும ஆதாயம் செய்வோம்
வேகம் வேகமே

1. அழிவுக்கு நேராய் விரைந்திங்கு செல்வோர்
ஆயிரம் ஆயிரமாய் நம்முன் காணுதே
அறியாதவர் போல் அமைதியாய் இருந்தாலோ
ஆக்கினை நம்மேல் வருமே வேகம் வேகமே

2. நோவாவின் காலம் போலவே மக்கள்
விற்பதும் கொள்வதுமாகவே இன்றே
ஆக்கினைக்கு நேராகவே விரைந்து
செல்கின்றார்
ஆவன செய்வீர் அதற்காய் வேகம் வேகமே

3. கெர்ச்சிக்கும் சிங்கம் போலவே சாத்தான்
யார் யாரை விழுங்கலாமோ என்று
நிற்கின்றான்
அவன் தன் வலையில் சேர்க்கும்
லோக மாந்தரை
அன்பரின் ஆட்சியில் சேர்ப்போம்
வேகம் வேகமே

4. அந்தகாரத்தின் நாள் நெருங்குமுன்
அண்டிக்கொள் அன்பரின் இன்ப கரத்தை
என்று நாம் கூறியே அவர்க்காய் மக்களை
ஆதாயப்படுத்துவோம் வேகம் வேகமே

5. எக்காள சத்தம் தொனித்திடும் வேளை
ஏகமாய் யாவரும் ஏகிடுவோமே
ஏசுவுக்காய் ஜீவிக்காதோர் அந்த நாளிலே
ஏற்றுக் கொள்ளப்படார் என்போம்
வேகம் வேகமே

118

வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும்
நேசர் இயேசுவுக்குன் உள்ளம் திறவாயோ

பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே

1. ஆதரிப்பார் ஆருமில்லை யென் றெண்ணி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயோ?
காணாத ஆட்டை தேடி வந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார்

2. அற்ப வாழ்வை நித்ய வாழ்வு என்றெண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமோ?
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய்?

3. பாவத்தினால் சாபரோகத்தால் தொய்ந்து
மாயையில் ஆழ்ந்து மடிந்திடுவானேன்
பாவத்தைப் போக்கிடும் தூய உதிரத்தின்
ஜீவ ஊற்றில் மூழ்கி மீட்புறாயோ?

4. மனம்மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்ஜியம் காணக்கூடுமோ
பிறந்தாலோ ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யாய்
பிரவேசிப்பாய் தேவராஜ்ஜியத்தில்

5. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசு அல்லால் வேறு
இரட்சிப்பில்லையே இரட்சண்ய நாள்
இன்றே வந்திடாயோ?

119

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் இதோ

1. பாவத்தை யேற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில்
கண்கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும் - பாவ பாரம் நீங்கிடும்

2. துன்பம் சகித்தவர் துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே அண்ணல் யேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே - துரிதமாய் நீ வாராயோ

3. அந்தக் கேடடைந்தார் அழகற்று தோன்றினார்
சொந்தமாகச் சேர்த்திட இந்தப் பாடடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ

4. கல்லறை திறக்கக் காவலர் நடுங்க
கஸ்திகளடைந்தாரே - கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார் ஜெயித்தார் உண்டு மீட்புனக்குமே

5. சாந்த சொரூபனே சத்திய வாசனே
வஞ்சமற்ற வாயனே வந்தணைக்கும் நேயனே
தஞ்சமே தன்னையே
தந்துனையழைக்கிறார்

120

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் யேசு உன்னை அழைக்கிறாரே

1. பார் திருமேனி வாரடி யேற்றவர்
பாரச் சிலுவைதனை சுமந்து சென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்
பயமின்றி வந்திடுவாய்

2. மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உந்தனை நாசமாக்கிடுதே
உணர்ந்திதையுடனே உன்னதரண்டை
சரண் புகுவாய் இத்தருணம்

3. கிருபையின் வாசல் அடைத்திடும் முன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவாயே
உருவாக்கியே புது சிருஷ்டியில் வளர
கிருபையும் அளித்திடுவார்

4. பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினை
பகர்ந்திடுவாருந்தன் இருதயந் தனிலே
மறுரூப நாளின் அச்சாரமதுவே
மகிமையும் அடைந்திடுவாய்

5. இயேசுவல்லாது இரட்சிப்புத்தரவோர்
இரட்சகர் வேறு இகமதிலுண்டோ
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே உன் நாயகரே

121

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லா திரு இரத்தத்தினால்?
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்?

மாசில்லா - சுத்தமா
திருப்புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிட குணம் மாறிற்றா?
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால்

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்?
மறு ஜென்ம குணமடைந்தீர்களா
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால்?

3. மணவாளன் வரக்களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்?
மோட்சகரை ஏறிச் சுகிப்பீர்களா
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால்?

4. மாசு கறை நீங்கும், நீசப்பாவியே!
சுத்த இரத்தத்தின் சக்தியினால்
முக்தி பேறுண்டாகும் குற்றவாளியே!
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால்

122

1. இரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம்
லோகம் நடுங்க
நரகாக்கினையைச் சொல்வோம்
பாவ மடங்க
பூர்வ கால தேவ தாசர்
விஸ்தரித்தாப் போல்
மோட்ச லோகம் போகுமுன்னே

பல்லவி

செல்வோம் செல்வோம் ஆர்ப்பரிப்புடனே
செய்வோம் செய்வோம் போர் பலத்துடனே
நானா ஜாதி பாஷைக்காரர் இரட்சிப்படைய
மோட்ச லோகம் போகுமுன்னே

2. இயேசு வீரர் யுத்த சத்தம்
பூமியெங்கும் கேள்
மீட்படைந்த பேதைகளின்
சாட்சிகளுங் கேள்
முழு லோகத்தையும் வெல்ல
இன்னும் கொஞ்ச நாள்
மோட்ச லோகம் போகு முன்னே

3. தீதாய்ச் சத்துருக்க ளென்ன
சொன்ன போதிலும்
சுத்த ஆவியின் பலத்தை
பெற்று யாவிலும்
உண்மையாகப் போர் புரிந்தால்
வெல்வோம் சாவிலும்
மோட்ச லோகம் போகு முன்னே

123

1. உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூருவாயா?
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயா?
உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்?

2. உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தினின்று கூறுவாயா?
ஊழியம் செய்ய வருவாயா?

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேய்கிறார் பாவப் புல்வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுகின்றாயோ?

4. இயேசு என்றால் என்ன விலை?
என்றே கேட்டிடும் எத்தனை பேர்
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா?

5. ஐந்து சகோதரர் அழிகின்றாரே
யாரையாவது அனுப்பிடுமே
யாரை நான் அனுப்பிடுவேன்?
யார்தான் போவார் எனக்காக?

124

சத்திய வேதத்தைத் தினம்தியானி
சகல பேர்க்கும் அதபிமானி

அனுபல்லவி

உத்தம ஜீவிய வழிகாட்டும்
உயர்வானுலகிலுனைக் கூட்டும்

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும்
வயோதிபர்க்கும் அதுணவாகும்
பாலகர்கினிய பாலும் அதாம்
படிமீ தாத்ம பசி தணிக்கும்

2. சத்துரு பேயோடமர் புரியும்
தருணம் அது நல் ஆயுதமாம்
புத்திரர் மித்திரரோடு மகிழும்
பொழுதும் அது நல் உறவாகும்

3. புலைமேவிய மானிடரிதயம்
புனிதம் பெறுதற் கது மருந்தாம்
நிலையா நரர் வாணாள் நிலைக்க
நேய காய கற்பம் அதாம்

4. கதியின் வழி காணாதவர்கள்
கண்ணுக்கரிய கலிக்கம் அது
புதிய எருசலேம் பதிக்கு
போகும் பயணத் துணையும் அது

5. மாந்தர் ரஷிப்படையும் வழி
வழுத்தும் தேவ வார்த்தை அது
வேந்தர் அமைச்சர் முதலெவர்க்கும்
விதித்த பிரமாணமும் அதுவே

125

காலத்தின் அருமையை அறிந்து
வாழாவிடில் கண்ணீர் விடுவாயே

ஞாலத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தை
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்

1. மதியையிழந்து தீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் ரஷண்ய வாழ்வை கண்டு
நீ மகிழ்ந்திட காலம் இதுவே நல்ல
காலமென்றறியாயோ?

2. இகத்தினில் ஊழியம் அகத்தியம் நிறைவேற
இயேசுன்னை அழைத்தாரல்லோ?
மகத்துவ வேலையை மறந்து
தூங்குவாயானால் பகற்கால முடியும்
ராக்காலத்தில் என்ன செய்வாய்?

126

1. நல்ல செய்தி யேசுவை
நோக்கிப்பார் ரட்சிப்பார்
நம்பி வந்து அவரை
நோக்கிப்பார் ரட்சிப்பார்
எந்தப் பாவியாயினும்
தள்ள மாட்டேன் என்கிறார்
துரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார் ரட்சிப்பார்

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார் ரட்சிப்பார்
தேசாதேசம் கூறுவோம்
நோக்கிப்பார் ரட்சிப்பார்
எந்த நாடு தீவிலும்
இயேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார் ரட்சிப்பார்

3. இன்னும் கேள் மா நேசராம்
யேசுவே காக்கிறார்
நம்பும் பக்தரையெல்லாம்
யேசுவே காக்கிறார்
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக் கொள்வார்
கேடு பாடில்லாமலும்
யேசுவே காக்கிறார்

4. சுவிசேஷம் இதுவே
இயேசுவே ரட்சகர்
பாவம் நீக்கி பின்னுமே
இயேசுவே காக்கிறார்
மோட்சஞ் சேருமளவும்
தாங்கி கொண்டே இருப்பார்
தீமையை செய்யாமலும்
இயேசுவே காக்கிறார்

127

அன்பே பிரதானம் சகோதர
அன்பே பிரதானம்

1. பண்புறு ஞானம் - பரம நம்பிக்கை
இன்ப விஸ்வாசம் இவைகளிலெல்லாம்

2. பல பல பாஷை படித்தறிந்தாலும்
கலகல வென்னும் கைம்மணியாமே

3. என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பிலையானால் அதிற் பயனில்லை

4. துணிவுடனுடலைச் சுடக் கொடுத்தாலும்
பணியவன்பிலாற் பயனதிலில்லை

5. சாந்தமும் தயவும் சகல நற்குணமும்
போன்ற சத்தியமும் பொறுமையுமுள்ள

6. புகழிறுமாப்பு பொழிவு பொறாமை
பகை அநியாயம் பாவமுஞ் செய்யா

7. சினமடையாது தீங்கு முன்னாது
தினமழியாது தீமை தராது

8. சகலமுந் தாங்கும் - சகலமும் நம்பும்
மிகைபடவென்றும் மேன்மை பெற்றோங்கும்

128

இயேசு என்னும் நாமமே, நமக்கு
மீட்பை அருளும் நாமமே.

1. வார்த்தையினாலே சகலமும் படைத்த
வல்லமையான நாமம் - சருவ
2. தரணியின் மீது மனிதனாய் பிறந்து
தாகத்தை தீர்த்த நாமம் - ஆத்தும
3. பாவத்தின் சாபத்தை தன்மேல் ஏற்று
மரணத்தை வென்ற நாமம்- சிலுவையில்
4. சத்திய வேத வாக்கின்படி நித்ய
ஜீவனை ஈந்த நாமம் - நித்திய
5. வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களுக்கு
ஆறுதல் அளிக்கும் நாமம் - உலகில்
6. ஆவியின் கனிகளின் பரிபூரணமே
எம்மையும் மாற்றிடுமே- உம்மைப்போல்

129

கேளுங்கள் நல்ல நண்பா - மேசியா
எந்தன் உள்ளத்தில் வந்தார்.

1. உள்ளத்தில் வந்தார் இரட்சிப்பை தந்தார்
பாவியை இரட்சிக்க வந்தார் வந்தாரே
உலகத்தில் வந்தார். [- இயேசு
2. பாவியை மீட்க பரனோடு சேர்க்க
சிலுவையில் ஜீவனைத் தந்தார் தந்தாரே
தம்மையே தந்தார். [- இயேசு
3. குருடர்க்கு பார்வை ஊமைக்கு பேச்சும்
முடவர்க்கு கால்களை தந்தார் தந்தாரே
சகலமும் தந்தார். [- இயேசு

130

எந்தன் ஜெபவேளை உம்மைத்தேடி
வந்தேன் தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

1. சோராது ஜெபித்திட
ஜெப ஆவி வரம் தாருமே
தடையாவும் அகற்றிடுமே
தயைகேட்டு உம்பாதம் வந்தேன்
2. உம்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை
கேட்டிட காத்திருப்பேனே.
3. நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா
4. நாளெல்லாம் பாதத்தில்
கர்த்தாவே அமர்ந்திடுவேன்
கண்ணீரின் ஜெபம் கேளுமே
கருணையின் பிரவாகம் நீரே
5. சகாயம் பெற்றிட
கிருபாசனம் வந்தேனே
இரக்கங்கள் ஈந்திடுமே
என்றென்றும் தயைகாட்டும் தேவா

131

திருக்கரத்தால் தாங்கியென்னை
திருச்சித்தம்போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழிநடத்தும்.
2. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்
3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்ப கானான் தேசமதை

132

1. குயவனே குயவனே
படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையுமே
கண்ணோக்கிப் பார்த்திடுமே
வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்து தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய்
விளங்கச் செய்யுமே
வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம்
இயேசுவை போற்றிடுதே
என்னையும் அவ்விதப் பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே

2. இறைவனே இறைவனே
இணையில்லாதவனே
குறை நிறைந்த என்னையுமே
கண்ணோக்கி பார்த்திடுமே
விலைபோகாத பாத்திரம் நான்
விரும்புவாரில்லையே
விலையில்லா உம் கிருபையால்
உகந்ததாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கி என்னை
தம்மைப் போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே
உடைமையாக்கிடுமே

3. மேய்ப்பனே மேய்ப்பனே
மந்தையைக் காப்பவனே
மார்க்கம் அகன்ற என்னையுமே
கண்ணோக்கிப் பாருமே
மண்ணாசையில் நான் மயங்கியே
மெய்வழி விட்டகன்றேன்
கண்போன போக்கைப் பின்பற்றியே
கண்டேனில்லை இன்பமே
காணாமற்போன பாத்திரம் என்னைத்
தேடி வந்த தெய்வமே
வாழ்நாளெல்லாம் உம் பாதம் செல்லும்
பாதையில் நடத்திடுமே

133

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே

அனுபல்லவி

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர், என்றும் காப்பீர்

சரணங்கள்

1. தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாயிருக்கிறதே
தேவனின் சன்னிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்துப் போற்றிடுவேன்.

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறுமலைகளிலிருந்தும் உம்மை
தினமும் நினைக்கின்றேன்

4. தேவரீர் பகற்காலத்தில்
கிருபையைத் தருகின்றீர்
இரவில் பாடும் பாட்டு எந்தன்
வாயினிலிருக்கிறது.

134

ஜெபமே ஜெயமே - என் வாழ்வில்
ஜெபமே ஜெயமே - உன் வாழ்வில்
ஜெபமே ஜெயமே - நம் வாழ்வில்
ஜெபம் ஜெயம் என்றுமே

1. அனுதினம் அவரிடம் ஜெபிப்பதால்
அனுதின ஆகாரம் பெற்றிடலாம்
அன்னாளைப் போல நீ ஜெபித்திட்டால்
ஆண்டவர் அருள் அடைந்திடலாம்

2. அன்றொரு நாள் இயேசு ஜெபித்திட்டார்
அங்கலாய்த்தே வியர்வை இரத்தமாக
அந்நாளில் அவர் சிந்தி செய்த ஜெபம்
அழியும் நம் ஆத்மாவை மீட்டிடவே

3. அனுதினம் இயேசுவின் பாதம் பற்றி
அங்கலாய்த்தே நாமும்
ஜெபித்திடுவோம்
அழியும் நம் சகோதரர் மீட்கப்பட
அன்பரேசு நம்மால் மனம் மகிழ

இந்திய அருட்பணி இயக்கம்

அறியப்படாதோர்

புதிய இடங்களை சந்தித்தல்

புதிய சபைகளை ஸ்தாபித்தல்

விடுதி ஊழியங்கள்

மருத்துவ ஊழியங்கள்

அருட்ப்பணியாளர்களை உருவாக்குதல்

தையல்ப் பயிற்சி

கன்வென்ஷன் கூட்டங்கள்

135

ஜெபத்தை கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச்செய்யும்

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

1. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர்

2. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்

3. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம்

136

பரிசுத்தாவி எங்கள் மீதிலே
பொழியும் இந்த வேளையிலே
பிரசன்னத்தால் நிரப்பி எம்மை
புது சக்தியை அளித்திடுமே

1. இம்மண்டலம் முழுவதையும்
உம் ஆவியால் நிரப்பிவிடும்
அனுப்பியே தாரும் பரிசுத்த அக்கினி
அந்தகாரத்தை நீக்கிவிடும்

2. தேவ செய்தி அளிக்கவிருக்கும்
தேவ பிள்ளையை பெலப்படுத்தும்
தேவ லோகத்தின் இரகசியங்களை
தேவா எங்கட்கு வெளிப்படுத்தும்

3. பேயின் சக்தி தகர்த்திடவே
நோயின் சாபம் அகற்றிடவே
வல்லமை தாரும் பெலன் அருளும்
வரம் தந்தெம்மை அபிஷேகியும்

4. பரலோகத்தின் அதிபதியே
பரலோகத்தின் பலகணிகள்
திறந்தே கொட்டிடும் கிருபை சொரியும்
திருப்திப் படுத்தி அனுப்பும்

137

இரட்டிப்பான நன்மைகள் தந்திட
இயேசு வாக்களித்தாரே
முன்மாரிமேல் பின்மாரி மழையே
உன்னதத்தினின்று வந்திறங்குதே

1. பெலத்தின் மேலே மா பெலனே
புதுபெலன் நாம் பெற்றிட
சால்வைதனை எலிசா அடைந்தாற் போல்
சோர்வின்றி பெலன் என்றும் நாடுவோம்

2. கிருபையின் மேல் மா கிருபை
கர்த்தரிடம் நாம் பெற்றிட
ஸ்திரீகளுக்குள் மரியாள் பெற்ற பாக்யம்
ஸ்தோத்திரம் பாடி என்றும் தேடுவோம்

3. ஜெயத்தின் மேலே மா ஜெயமே
ஜெய தொனியாய் பெற்றிட
போர் முனையில் சிறு தாவீது போல
போர் வீரராக என்றும் ஜெயிப்போம்

4. நம்பிக்கையின் மேல் நம்பிக்கை
நல் விசுவாசம் பெற்றிட
ஆதி அப்போஸ்தலர் காலம் நடந்த
அற்புதங்கள் நாம் என்றும் காணுவோம்

5. பரிசுத்தம் மேல் பரிசுத்தம்
பங்கமில்லாமல் பெற்றிட
நீதியின் சூரியன் ஏசுவுடனே
நீதி அணிந்து என்றும் ஆளுவோம்

6. மகிமையின் மேல் மா மகிமை
மறுரூபம் நாம் பெற்றிட
கண்ணிமை நேரத்திலே பறந்தேகி
கர்த்தருடன் நாம் என்றும் வாழுவோம்

138

விந்தைக் கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை

அனுபல்லவி

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்

1. திரண்ட ஆஸ்தி உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிகவிருப்பினும்,
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்து மேன்மையாகினேன்

3. சென்னி, விலா, கை காலின்று
சிந்துவதோ தூயரோடன்பு
மன்னா இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்

4. இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும்
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்

139

பலி பீடத்தில் என்னை பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருசித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

1. நீரன்றி என்னால் இப்பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி

2. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர்வதித்தருளும்

3. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர்

4. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தில் கண்டதால்

140

இயேசுவின் மார்பினில் சாருவேனே
சாருவேனே, சாருவேனே,
துன்பம் துக்கம் கண்ணீர் மறப்பேனே
மறப்பேனே, மறப்பேனே.

1. நீசச் சிலுவை மீதினிலே
என் பாவம் போக்கத் தொங்கினீரே
ஆருயிர் நாதனே இத்தனை வாதைகள்
என்னை நின் மந்தையில் சேர்த்திடவே
சேர்த்திடவே - இயேசு

2. கல்வாரி நாதா நின் இரத்தத்தை
சிந்தினீரே இப்பாவிக்காக
கைகால்கள் ஆணிகள் கடாவப் பட்டதே
முள்முடி சூட்டியே நின் சிரசில்
நின் சிரசில் - இயேசு

3. ஜீவனைவிட்ட என் நேசரே
ஒப்புவித்தேன் என்னை உமக்காய்
கரத்தில் ஏந்தியே பொற்கிரீடம் சூட்டியே
விண்ணிலும் சேர்ப்பீரே பாவி என்னை,
பாவி என்னை - இயேசு

4. காரிருள் மூடும் நேரத்தினில்
கர்த்தா உம் பாதம் அண்டி நின்றேன்
எந்தனை மீட்டிட உந்தனை ஈந்தீரே
அன்பின் சொரூபி, என் இயேசு நாதா
இயேசு நாதா- இயேசு

141

என்னத்தியாகம் என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ!

1. விண் தூதர் போற்றிடும் - உம்
பிதாவையும் விட்டிறங்கி வந்தீரே,
மாட்டுக் கொட்டிலை வாஞ்சித்தீரையா
மானிடர் மேல் அன்பினால்!

2. ஜெநித்த நாள் முதலாய் - கல்வாரியில்
ஜீவனை ஈயும் வரை,
பாடுகள் யாவையும் பட்டீரையா
பாவியை மீட்பதற்காய்

3. தலையை சாய்த்திடவோ - உமக்கு ஓர்
ஸ்தலமோ எங்குமில்லை!
உம் அடிச்சுவட்டில் நான் செல்லவோ
முன்பாதை காட்டினீரே

4. தாய், தந்தை, வீடும், நாடும் - தனக்குள்ள
இஷ்டத்தையும் வெறுத்து,
அப்போஸ்தலர், சீஷரும் குருசை
அனுதினம் சுமந்தாரல்லோ!

5. பாடுகளெல்லாம் உம்மை - மகிமையில்
பூரணமாய் சேர்த்ததே:
உம்மோடு நானும் பாடு சகிக்க
என்ன தடையுமுண்டோ?

6. பொய் இன்பம் எனக்கினியேன் - என்னருமை
இயேசுதான் என் பங்கல்லோ!
நேசரின் பின்னே போகத் துணிந்தேன்
நேச வலிமையினால்

142

1. கல்வாரியின் கருணையிதே
காயங்களில் காணுதே
கர்த்தன் இயேசு பார் உனக்காய்
கஷ்டங்கள் சகித்தாரே

விலையேறப் பெற்ற திருரத்தமே -அவர்
விலாவினின்று பாயுதே
விலையேறப் பெற்றோனாய் உன்னை மாற்ற
விலையாக ஈந்தனரே.

2. பொன் வெள்ளியோ மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக் கிணையாகுமோ!
அன்னையினும் அன்பு வைத்தே
தம் ஜீவனை ஈந்தாரே.

3. சிந்தையிலே பாரங்களும்
நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகிறார் பாதகன் போல்
மங்கா வாழ்வளிக்கவே.

4. எந்தனுக்காய் கல்வாரியில்
இந்தப் பாடுகள் பட்டீர்
தந்தையே உம் அன்பதையே
சிந்தித்தே சேவை செய்வேன்.

5. மனுஷனை நீர் நினைக்கவும்
அவனை விசாரிக்கவும்
மண்ணனிலவன் எம்மாத்திரம்!
மன்னவா உம் தயவே.

143

என்னை நேசிக்கின்றாயா?
என்னை நேசிக்கின்றாயா?
கல்வாரி காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயா?

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பினதால்
ஓடி வந்தேன் மானிடனாய்.

2. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப்பார்
பரிகாச சின்னமாம் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய்

3. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கிறேன் பார்
உன் பாவம் யாவையும் சுமப்பேன் என்றேன்
பாதம் தன்னில் இளைப்பாறவா.

உம்மை நேசிக்கின்றேன் நான்
உம்மை நேசிக்கின்றேன் நான்
கல்வாரி காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ!

144

அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்கினார்

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமை குருசைத் தெரிந்தெடுத்தாரே
மாயலோகத் தோடழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே

3. முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்கினார்
வருந்தி மடிவோரையும் மீட்டிடவே

4. அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதிலும் இன்பம் அன்பரின் தியானம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே

5. சிலுவைக் காட்சியைக் கண்டு முன்னேறி
சேவையே புரிவேன் ஜீவனும் வைத்தே
என்னைச் சேர்த்திட வருவேனென்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன்

145

1. உருகாயோ நெஞ்சமே
குருசினில் அந்தோ பார்!
கரங்கால்கள் ஆணியேறித்
திருமேனி நையுதே!

2. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னர்தாம்
இந்த நிலமெல்லாம் புரக்க
ஈன குருசேறினார்

3. தாக மிஞ்சி நாவறண்டு
தங்கமேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து
எத்தனையாய் ஏங்குகிறார்

4. மூவுலகை தாங்கும் தேவன்
மூன்றாணி தாங்கிடவோ
சாவு வேளை வந்தபோது
சிலுவையில் தொங்கினார்

5. வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்த தெய்வம் பாராய்
புல்லர் இதோ நன்றி கெட்டு
புறம்பாக்கினார் அன்றோ

146

1. கல்வாரி மா மலைமேல்
கை கால்கள் ஆணிகளால்
கடாவப்பட்டவராய்க்
கர்த்தர் தொங்கக் கண்டேன்
குருசின் வேதனையும்
சிரசின் முள் முடியும்
குருதி சிந்துவதும்
உருக்கிற் றென் மனதை

2. அஞ்சாதே என் மகனே
மிஞ்சும் உன் பாவமதால்
நெஞ்சம் கலங்காதே
தஞ்சம் நானே உனக்கு
எனக்கேன் இப்பாடு
உனக்காகத் தானே
ஈனக்கோல மடைந்தேன்
உன்னை ரட்சித்தேன் என்றார்

3. கர்த்தரின் சத்தமதை
சத்தியம் என்று நம்பி
பக்தியுடன் விழுந்து
முத்தம் செய்தேன் அவரை
என் பாவம் நீங்கியதே
எக்கேடும் ஓடியதே
சந்தேகம் மாறியதே
சந்தோஷம் பொங்கியதே

147

சிலுவையின் நிழலில்
அனுதினம் அடியாள்
சாய்ந் திளைப்பாறிடுவேன் ஆ...ஆ

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில்

1. பாவபார சுமையதால் சோர்ந்து
தளர்ந்த என் ஜீவியமே ஆ...ஆ
சிலுவையண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷங் கண்டதினால்
இளைப்படையாது மேலோகம்
ஏகுவேன் பறந்தே வேகம்

2. எவ்வித கொடிய இடருக்கும் அஞ்சேன்
ஏசுவை சார்ந்து நிற்பேன் ஆ...ஆ
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக்கொண்டால்
அலைமிக மோதிடும் அந்நாள்
ஆறுதல் அளிப்பதாய்ச் சொன்னார்

3. இன்பம் சுரந்திடும் திருமொழிகேட்டு
இன்னல்கள் மறந்திடுவேன் ஆ...ஆ
திருமறை இன்னிசை நாதம்
தேனிலுமினிய வேதம்
தருமெனக்கானந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம்

148

1. உள்ளமெல்லாம் உருகுதையா
உத்தமனை நினைக்கையிலே
உம்மையல்லால் வேறே தெய்வம்
உண்மையாய் இங்கில்லையே
கள்ளனென்று தள்ளிடாமல்
அள்ளி என்னை அணைத்தவா
சொல்லடங்கா நேசத்தாலே உம்
சொந்தமாக்கிக் கொண்டீரே

1. எத்தன் என்னை உத்தமனாக்க
சித்தம் கொண்டீர் என் ஏசையா
எத்தனையோ துரோகம் நான் செய்தேன்
அத்தனையும் நீர் மன்னித்தீர்
இரத்தம் சிந்த வைத்தேனே நான்
அத்தனையும் என் பாவமன்றோ?
கர்த்தனே உம் அன்புக்கீடாய்
நித்தம் செய்வேன் உம் சேவையே

2. மேக மீதில் இயேசு ராஜன்
வேகம் தோன்றும் நாளென்றோ?
லோக மீதில் காத்திருப்போர்
ஏக்கமெல்லாம் தீர்ந்திட
தியாக ராஜன் ஏசுவை நான்
முக முகமாய் தரிசிக்க
ஆவலோடு ஏங்கும் தாசன்
சோகம் நீங்கும் நாள் என்றோ?

149

1. மாறிடார் எம்மா நேசரே ஆ
மாறாதவர் அன்பெந்நாளுமே
கல்வாரிச் சிலுவை மீதிலே
காணுதே இம்மா அன்பிதே

ஆ! இயேசுவின் மகா அன்பிதே
அதின் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணையேதும் வேறில்லையே
இணையேதும் வேறில்லையே

2. பாவியாக இருக்கையிலே அன்பால்
பாரில் என்னைத்தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் தம்
உள்ளம் போல நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே

4. ஆவியால் அன்பை பகர்ந்திட தூய
தேவனின் விண்சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரை சந்திக்க

5. நியாய விதி தினமதிலே நீயும்
நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்பு வல்லதே

6. பயமதை நீக்கிடுமே யாவும்
பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே

150

1. நான் உம்மைப்பற்றி ரட்சகா
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்

சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்
பாவபாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ! உந்தன் நல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்
நீர் கைவிடா இவ்வேழையை
காப்பீர் தேவாவியால்

3. மாவல்ல வாக்கின் உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய்ப் பாக்யம் அடைவேன்

151

1. என் மீட்பர் சென்ற பாதையில்
போக ஆயத்தமா?
கல்வாரி மலைபாதையில்
பங்கை பெறுவாயா?

சிலுவையை நான் விடேன்
சிலுவையை நான் விடேன்

2. ஊரார் இனத்தார் மத்தியில்
துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவில்
திடனாய் நிற்பாயா?

3. தாகத்தாலும் பசியாலும்
தோய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும்
சிலுவை சுமப்பாயா?

4. பாவாத்துமாக் குணப்பட
நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடப்பட
மெய் யுத்தம் செய்வாயா?

5. வாழ்நாள் எல்லாம் நிலை நின்று
சிலுவையை சுமப்பேன்
தேவ அருளினால் வென்று
மேல் வீட்டைச் சேருவேன்

152

கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
சிலுவையின் மா நிழலில்
கன்மலை வெடிப்பதனில்
புகலிடம் கண்டுகொண்டோம்

1. கர்ச்சிக்கும் சிங்கங்களும்
ஓநாயின் கூட்டங்களும்
ஆடிடைக் குடிலினில்
மந்தைகள் நடுவினில்
நெருங்கவும் முடியாது - நாம்

2. இரட்சிப்பின் கீதங்களும்
மகிழ்ச்சியின் சப்தங்களும்
கார் மேக இருட்டினில்
தீபமாய் இலங்கிடும்
கர்த்தரால் இசை வளரும் - நாம்

3. தேவனின் இராஜ்ஜியத்தை
திசை எங்கும் விரிவாக்கிடும்
ஆசையில் ஜெபித்திடும்
அதற்கென்றே வாழ்ந்திடும்
யாருக்கும் கலக்கம் இல்லை - நாம்

4. பொல்லோனின் பொறாமைகளும்
மறைவான சதி பலவும்
வல்லோனின் கரத்தினில்
வரைபடமாயுள்ள
யாரையும் அணுகாது - நாம்

153

பாரீர் கெத்சமனே
பூங்காவிலென் நேசரையே
பாவியெனக்காய் வேண்டுதல்
செய்திடும் சத்தம் தொனித்திடுதே

1. தேகமெல்லாம் வருந்தி
சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன் படும்
பாடுகள் எனக்காக

2. அப்பா இப்பாத்திரமே
நீக்கும் நின் சித்தமானால்
எப்படியும் உம் சித்தம் செய்ய
என்னை தத்தம் செய்தேன் என்றாரே

3. இரத்தத்தின் வேர்வையாலே
மெத்தவுமே நனைந்தே
இம்மானுவேலன் உள்ளமுருகியே
வேண்டுதல் செய்தனரே

4. மும்முறை தரைமீதே
தாங்கொண்ணா வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து
ஜெபித்தாரே பாதகர் மீட்புறவே

5. அன்பின் அருள் மொழியால்
ஆறுதல் அளிப்பவர்
துன்பவேளையில் தேற்றுவாரின்றியே
நொந்து அலறுகின்றார்

6. என்னையும் தம்மைப்போல
மாற்றும் இம்மா நேசத்தை
எண்ணி எண்ணியே உள்ளம் கனிந்து
நான் என்றும் புகழ்ந்திடுவேன்

154

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே - கர்த்தா
உம்பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமனே பூங்காவினில்
கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

2. சிலுவையில் மாட்டி வதைத்தனரே
உம்மை செந்நிறம் ஆக்கினரே
அப்போதும் அவர்க்காய் வேண்டினீரே
அன்போடு அவர்களை கண்டீரன்றோ
அப்பா உம் மனம் பெரிதே

3. எம்மையும் உம்மைப்போல மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ
எங்களை தரை மட்டும் தாழ்த்துகின்றோம்
தந்துவிட்டோம் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

155

1. கொடுங் கொல்கதாவின் கொடுமுடியில்
கடுங்காயப்பட்ட நேசரைக் கண்டேன்
அகப் பாரத்தால் நான் பணிந்து நின்றேன்
மகனே இது உனக்காய் என்றார்

பல்லவி

ஆஹா! இன்பம் இன்பம் இனிஎன்றும்
துன்பமில்லை எந்தன் மகா இன்பராம்
என் இயேசு வரும் நாளதனிலே

2. இனி நான் என்ன செய்ய என்றேன்
கனி தா என்று கனிவாய் சொன்னார்
இனி தாமதமோ நாதா என்றேன்
தொனி கேட்கும் காலம் சமீபம் என்றார்

3. அங்கி வெள்ளையாக நிற்கும் ஜனம்
தங்கி தாபரிக்கும் காட்சி கண்டேன்
இந்த சேனையெல்லாம் எங்கிருந்தென்றேன்
வந்த உபத்திரவத்தில் நிலைத்தோர் என்றார்

4. துதி பாடிடும் தூதர் கணம்
துயர் நீக்கும் பின் மறுகணம்
துங்கன் இயேசுவின் தூய பிரசன்னம்
தங்க மாளிகையில் எங்கும் ஜொலிக்கும்

5. நல் நேசருக்காய் கொடி பிடிப்பேன்
கல்வாரி அன்பை விளம்பிடுவேன்
நொடி நேரமதில் என்னை சந்திப்பார்
முடிசூடி என்றும் ஆளுகை செய்வேன்

156

1. உன்னையும் என்னையும் இரட்சிக்கவே
இயேசு தம் ஜீவனை ஈந்தனரே
குருசில் கண்டேன் - 3 என் இயேசுவை

2. பாவத்தின் தோஷத்தை மன்னிக்கவே
பரன் தம் இரத்தத்தை சிந்தினாரே
குருசில் கண்டேன் - 3 என் இயேசுவை

3. மன்னிப்பும் மோட்சமும் அடைந்திட
நானே வழி சத்தியம் ஜீவன் என்றார்
சோர்ந்திடாதே நம்பியே வா
நிச்சயம் இயேசு ஏற்றுக் கொள்வார்

4. இயேசு உன்னை அன்பாய் அழைக்கிறார்
அவரை நீ இன்று ஏற்றுக்கொள்வாய்
அழைக்கிறார் - 3 - அன்புடனே

5. இரட்சகர் பாதம் நீ பற்றிக் கொண்டால்
நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்
அல்லேலூயா - 3 - ஆமென்

157

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்சக் கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
கிருபை இழாது காரும் இயேசு நாயகா

4. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே, இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
இனி நான் அல்ல நீரே, இயேசு நாயகா

158

1. எனக்கின்பம் ஏதென கேளு, நான்
காரணம் சொல்வேன்
என் பாவம் நீங்கிற்றே;
வம்பன் வந்தென்னை நோக்கி
எங்கே நீங்கிற்றென்றால்
குருசில் நீங்கிற்றென்பேன்!

பல்லவி

அதைக் கல்வாரியின் இரத்தத்தாலே
மூடியாச்சுதே
அவை வானம் பூமி தூரம் நீங்கிற்றே!
அன்பர் குருதிக் கடலுள்ளே ஆழ்ந்து
போனேனே
ஆமென் சுத்தமானேன்!!

2. அன்றொரு நாளில் இயேசு என்உள்ளத்தில்
வந்தார்
என் பாவம் நீங்கிற்றே,
கர்த்தர் ஆட்கொண்டதாலே, பிசாசோடிப்
போனான்
அன்றே சுகமானேன்!

3. சாத்தான் என்னிடம் வந்து சந்தேக மூட்டினால்
ஆமாம், நீங்கிற்றென்பேன்
நீ துன்பத்துள் ஆக்கிட்டாய் என்
இயேசென்னை மீட்டார்
நேசர் இன்பம் தந்தார்

4. எப்போதும் நேசருடன் என்
நாளெல்லாம் வாழ்வேன்,
அப்போதென் பாக்கியமாம்;
தப்பாது பாட்டுப்பாடி ஜெபித்துப் போற்றுவேன்
ஆஹா பேரின்பமே!

5. இயேசுவுக்காய் உழைப்பேன் இராப்பகல்
களிப்பேன்,
என் பாவம் நீங்கிற்றே;
என் உள்ளம் கீதத்தாலே நிறைந்து வருதே!
அறிவேன் சுத்தமானேன்!

159

கர்த்தர் என் மேய்ப்பரே
குறை எனக்கில்லையே
அனுதினம் நல்மேய்ச்சல்
அன்புடன் அளித்திடுவார்

சரணங்கள்

1. மரணத்தின் இருள் தன்னில்
நடந்திட நேர்ந்தாலும்
மீட்பரின் துணையுடனே
மகிழ்வுடன் நடந்திடுவேன்.

2. பகைவரின் கண்களின் முன்
பரமன் எனக்கோர் விருந்தை
பாங்குடன் அருளுகின்றார்
பரவசம் கொள்ளுகிறேன்

3. எண்ணெயால் என் தலையை
இன்பமாய் அபிஷேகம்
செய்கிறார் என் தேவன்
உள்ளமும் பொங்கிடுதே

4. ஜீவனின் நாட்களெல்லாம்
நன்மையும் கிருபையுமே
தொடர்ந்திட வாழ்ந்திடுவேன்
கர்த்தரின் வீட்டினிலே

160

விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்
விதவிதமாய் பாவத்திலே ஜீவித்த நானே
இந்த நாளில் எந்தன் இயேசு சொந்த
இரத்தத்தால்
தந்திட்டாரே எந்தன் ஆத்ம மீட்பின் விடுதலை

1. தடுக்கும் பாவத்தளைகளில் விடுதலை,
கெடுக்கும் தீய பழக்கத்தில் விடுதலை,
என்ன சந்தோஷம் இந்த விடுதலை
எந்தன் இயேசு இலவசமாய்த் தந்தசந்தோஷம்

2. எரிக்கும் கோபப் பிடியினில் விடுதலை
வதைக்கும் தீய பொறாமையில் விடுதலை
அன்பர் இயேசுவே தந்த விடுதலை
இன்பக் கானான் சேரும்வரை உண்டே விடுதலை

3. அடுக்காய்ப் பேசும் பொய்யினில் விடுதலை
மிடுக்காய் வீசும் பெருமையில் விடுதலை
ஏழ்மை ரூபமே கொண்ட இயேசுவே
தாழ்மை கொள்ள உண்மை பேச ஈந்தார்
சக்தியே

161

1. எலியாவின் தேவன் நம் தேவன்
வல்லமையின் தேவன் நம் தேவன்
தாசர்களின் ஜெபம் கேட்பார்
வல்ல பெரும் காரியம் செய்திடுவார்

கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
என்றே ஆர்ப்பரிப்போம்

2. வேண்டிடும் பக்தர்களின் ஜெபம் கேட்டே
பனிமழை நிறுத்தினார் வல்ல தேவன்
பஞ்ச காலத்தில் விதவை வீட்டில்
பாத்திரங்களை அவர் ஆசீர்வதித்தார்

3. சத்துருக்கள் முன்னிலையில் தேவ மனிதன்
வீரமுடன் முழங்கினான் தேவ மனிதன்
அக்கினியால் பதிலளிக்கும்
தேவனே தேவன் என்றார் தேவ மனிதன்

4. தேவ ஜனம் கூட்டிச் சேர்த்தே தேவ மனிதன்
பலிபீடம் செப்பனிட்டுப் பலியுமீந்தார்
கேட்டருளும் கேட்டருளும்
என்றே கதறினார் தேவ மனிதன்

5. வானங்களை திறந்தே வல்ல தேவன்
அக்கினியால் பதில் தந்தார் ஜீவ தேவன்
கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
என்றே பணிந்தனர் தேவ ஜனங்கள்

162

இலேசான காரியம் எதுவும் இலேசான காரியம்
பெலமுள்ளவன் பெலனற்றவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
இலேசான காரியம்
உமக்கது இலேசான காரியம்

1. மண்ணைப் பிசைந்து மனிதனை
படைப்பது இலேசான காரியம்
மண்ணான மனிதர்க்கு மன்னாவை
தருவதும் இலேசான காரியம்

2. பெருமழை பெய்தும் பேழையை
காப்பது இலேசான காரியம்
பெருங்கடல் பிளந்து பாதையை
வகுப்பதும் இலேசான காரியம்

3. கூழாங்கல்லாலே கோலியாத்
வீழ்ந்தது இலேசான காரியம்
ஆழ்கடல் மீன் அதில் வரிப்பணம்
பெறுவதும் இலேசான காரியம்

4. கற்பாறை போலே கடல்மேல்
நடப்பது இலேசான காரியம்
கற்சாடி நீரை கனிரசமாக்குதல்
இலேசான காரியம் - இயேசுவுக்கு

163

கூடாதது ஒன்றுமில்லையே
தேவனால் கூடாதது
கூடாதது ஒன்றுமில்லையே

1. ஒரே ஒரு வார்த்தை சொன்னாரே
வேலைக்காரன் சொஸ்தமானானே
சுத்தமாகு என்று சொன்னாரே
குஷ்டரோகி சொஸ்தமானானே

2. லாசருவே வா என்றாரே
மரித்தவன் பிழைத்தானே
எழுந்திரு என்று சொன்னாரே
யவீரு மகள் பிழைத்தாளே

3. வஸ்திரத்தை தொட்டாளே
வல்லமை புறப்பட்டதே
எப்பத்தா என்று சொன்னாரே
செவிட்டு ஊமையன் பேசினானே

4. கடல் மேல் நடந்தாரே
கடும்புயல் அதட்டினாரே
பாடையைத் தொட்டாரே
வாலிபன் பிழைத்தானே

164

குதூகலம் நிறைந்த நன்னாள்
நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்

சரணங்கள்

1. தளகர்த்தனாம் இயேசு நின்று
யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புது பெலனடைந்து
ஜெயகீதங்கள் பாடிடுவோம்

2. புவிமீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என ஏங்கும்
மன மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மணவாட்டியாய்ச் சேர்த்திடவே

3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர்நோக்கி
நவஎருசலேமாய் தூயலங்கிர்தமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம்

4. ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க
அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம்

5. தேவ தூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார்

165

1. தேவசேனை வானமீது கோடி
கோடியாக தோன்றும்
பல கோடித் திரள் கூடி
குகைதேடி வேகம் ஓடும்
விண்மீன்கள் இடமாறி
பாரெங்கும் வந்து கொட்டும்
நானோ ஆடி மிகப்பாடி
என் நேசருடன் சேர்வேன்

அல்லேலூயா அல்லேலூயா - 4

2. ஐந்து கண்டம் தனில் ஆளும்
ஆட்சி யாவும் அற்றுப் போகும்
இருள் சூழும் இடிமுழங்கும்
கூச்சல் கேட்டு கண்ணீர் சிந்தும்
தூயர் கூட்டம் சுத்த உள்ளம்
சாட்சிப் பாடல் எங்கும் கேட்கும்
நானும் ஆடி மிகப்பாடி
என் நேசருடன் சேர்வேன்

3. கடல் குமுறும் கரை உடையும்
கப்பல் கவிழும் பெரும் நாசம்
போக்குவரத்து யாவும் நிற்கும்
இனி உலகம் என்பதில்லை
வாக்குமாறா வேதம் கூறும்
வார்த்தை யாவும் நிறைவேறும்
நானோ ஆடி மிகப்பாடி
என் நேசருடன் சேர்வேன்

166

1. மேகங்கள் நடுவே வழி பிறக்கும்
பூதங்கள் கடந்து கடந்து போகும்
தூதர்கள் கூட்டங்கள் சூழ்ந்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

வானத்தில் வானத்தில் நடுவானத்தில்
இயேசுவின் கைகளில் நானிருப்பேன்
பரமன் இயேசுவின் புன்னகை முகம்
என் கண்களில் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்

2. நாற்றிசையினின்றும் கூடிடுவார்
நாதனின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
தோத்திர கீதமே தொனித்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

3. கண்ணீரும் துன்பமும் கடந்து போகும்
கண்ணிமைப் பொழுதில் நடந்துவிடும்
கர்த்தரின் வருகை நாளின் போது
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

4. திருடன் வருகை போலிருக்கும்
தீவிரம் அவர் நாள் வெகு சமீபம்
காலையோ மாலையோ நள்ளிரவிலோ
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

167

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி
தேவனே வாசஞ் செய்கிறாரே

சரணங்கள்

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவநதியும் அவரே

3. மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே

சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடுமிச் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உனையே

முன்னோடியாய் இயேசு பரன்
மூலைக் கல்லாகி சீயோனிலே
வாசம் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம்

168

கூடி மீட்பர் நாமத்தில்
அவர் பாதம் பணிவோம்
யேசுவை இந்நேரத்தில்
கண்டானந்தம் அடைவோம்

பல்லவி

ஆ இன்ப இன்ப ஆலயம்
நல்மீட்பர் கிருபாசனம்
கண்டடைவோம் தரிசனம்
இன்ப இன்ப ஆலயம்!

1. இரண்டு மூன்று பேர் ஒன்றாக
கெஞ்சும் போது வருவார்
வாக்குப் போல தயவாய்
ஆசீர்வாதம் தருவார்

2. உண்மையாக கூப்பிட்டால்
கேட்பதெல்லாம் தருவார்
வாக்குப்படி என்றைக்கும்
இயேசு நம்மோடிருப்பார்

169

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு

சரணங்கள்

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வும் இல்லை
ஏழை இல்லை பணக்காரனில்லை
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார்

2. பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதி இல்லை, கடும் பசியுமில்லை
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார்

3. இன்பம் உண்டு சமாதான முண்டு
வெற்றி உண்டு துதிபாடல் உண்டு
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார்

170

அதிசயமான ஒளிமய நாடாம்
நேசரின் நாடாம் நான் வாஞ்சிக்கும் நாடாம்

சரணங்கள்

1. பாவம் இல்லாத நாடு
ஒரு சாபமும் காணா நாடு
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம்
உன்னதத்தில் ஓசன்னா - அல்லேலூயா

2. சந்திர சூரியன் இல்லை
ஆனால் இருள் ஏதும் காணவில்லை
தேவ குமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமாவார் - என்றும் பகல்

3. வித விதக் கொள்கையில்லை
பல பிரிவுள்ள பலகை இல்லை
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்பு மயம் - அன்புள்ளோர்செல்லும்

4. பிரச்சனை ஏதும் இல்லை
வீண் குழப்பங்கள் ஒன்றும் இல்லை
மொழி நிறம் ஜாதி பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை - அன்பே மொழி

5. பல பல திட்டம் இல்லை
ஆளும் சட்டங்கள் ஏதும் இல்லை
காவல் துறையில்லை கண்டிப்பும் இல்லை
மனிதனின் ஆட்சியில்லை - பேரானந்தமே

6. கடைத்தெரு ஏதும் இல்லை
தொழிற்சாலைகள் ஒன்றுமில்லை
தரித்திரர் செல்வர் சிறியவர் பெரியோர்
ஆகிய சிறப்பும் இல்லை - எல்லாம் சமம்

7. இயேசுவின் இரத்தத்தினால்
பாவம் கழுவினால் செல்லலாமே
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
இப்பூமியில் எவரும் வேண்டாம் - இன்றே வாரீர்

171

1. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் என்னைக் காக்க வல்லோர்

பல்லவி

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு (3)
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

2. ஐயம் இருந்ததோர் காலத்தில்
ஆவிக் குறைந்ததால்
மீட்பர் உதிர பெலத்தால்
சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்றே
இயேசு கை தூக்கினார்
முற்றும் என் உள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்க வல்லோர்

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின்செல்வேன்
எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய்
எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
அவர் என்னைக் கைவிடமாட்டார்

172

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே

அனுபல்லவி

ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

சரணங்கள்

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்குக் கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்

173

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனைத் தலைவராம் இயேசுவின்
பொற்தளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

1. எல்லா ஜாதியார் எல்லா கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தோர்

2. வெள்ளை அங்கியை தரித்துக் கொண்டு
வெள்ளை குருத்தாம் ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் பிதாவின் முன்பு
ஆட்டுக் குட்டிக்கே மகிமையென்றும்

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தை காத்தவர்கள்

4. ஆட்டுக்குட்டிதான் இவர்கள் கண்ணீரை
அற அகற்றி துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளிப்பருக இயேசுதாமே

5. ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ
ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்
சிறிதானதோ பெரிதானதோ
பெற்ற பணி செய்து முடித்தோர்

6. இனி இவர்கள் பசி அடையார்
இனி இவர்கள் தாகமடையார்
வெயிலாகிலும் அனலாகிலும்
வேதனையை அளிப்பதில்லை

174

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு.

1. என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்னசொன்னாலும்
நான் சோர்ந்து போகமாட்டேன்

2. என் ராஜா முன்னே செல்கிறார்
வெற்றிப் பவனி செல்கிறார்
குருத்தோலை கையிலெடுத்து
நான் ஓசன்னா பாடிடுவேன்.

3. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் நேசர் பறித்துக்கொண்டார்
சிலுவையில் அறைந்துவிட்டார்
காலாலே மிதித்து விட்டார்.

4. பாவங்கள் போக்கிவிட்டார்
சாபங்கள் நீக்கிவிட்டார்
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன்.

5. மேகங்கள் நடுவினிலே
என் நேசர் வரப்போகிறார்
கரம்பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்.

175

என் இரட்சகா என் இயேசுவே
என்னை அழைத்த நல் மீட்பரே
என் உள்ளத்தில் சந்தோஷத்தை
தந்தவா உம்மை ஸ்தோத்தரிப்பேன்.

சரணங்கள்

1. தூரமாய் நானும் சென்ற போது
அன்பாய் என்னை அழைத்தீரே
காலமெல்லாம் நான் உந்தன் ஒளியில்
என்றும் நிலைத்து வாழ்ந்து சுகிப்பேன்
பாக்கிய நாள் பாக்கியநாள்
இயேசு என் பாவம் தீர்த்த நாள்

2. சத்தியம் ஜீவன் வழியும் நீரே
கிருபை கூர்ந்து தெரிந்தீரே
தேவனே உம்மில் இணைந்து இருக்க
இன்றும் என்றும் அருள் செய்வீரே.

3. இருளினின்று ஒளியினிடமாய்
அழைத்த தேவனைப் போற்றுவேன்
உந்தனின் புண்ணியம் யாவும் சொல்லி
சாட்சியாக பூவில் திகழ்வேன்.

176

1. கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் வாழ்ந்திடவே
சுதனருள் புரிந்தனரே

பல்லவி

விசுவாசியே நீ பதறாதே;
விசுவாசியே நீ கலங்காதே!!
விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான்

2. பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம்

3. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் யேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார்

4. மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன்னேறிடுவாய்

177

என்னை மறவா இயேசுநாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே

2. பயப்படாதே வலங்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலாதெவரு மென்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே

4. திக்கற்றோராய் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்
நீர் அறியா யாதும் நேரிடா
என் தலை முடியும் எண்ணினீரே

5. உன்னைத் தொடுவோன் என் கண்மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே

178

கர்த்தனே எம் துணையானீர்
நித்தமும் என் நிழலானீர்
கர்த்தனே எம் துணையானீர்

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கலமாயினார்
மனு மக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர்.

2. பாவி என்றெனைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார்
இராஜா உம் அன்பு என்னைக் கண்டது
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார்
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா, உம்மைப்போல் நான் எங்கும்
கண்டதில்லை

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
இராஜனே, உம்மைப் பாடக் கூடுமோ?
ஜீவனை உமக்களிக்கின்றேனே
உம்மைப்போல் ஐயா, எங்கும்
கண்டதில்லை

179

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே.

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே.

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரண பள்ளத்தாக்கில் காத்திடுவார்.

4. மனிதர் என்னைக் கை விட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும்

180

1. உன்னதமானவரின்
உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே.

அவர் செட்டையின்கீழ்
அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

2. தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே

3. இரவின் பயங்கரத்திற்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்,
இருளில் நடமாடும் கொள்ளை
நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன்

4. ஆயிரம் பதினாயிரம்
பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை
அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே

5. தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னை சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார்

6. உன் வழிகளிலெல்லாம்
உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார்

7. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார்

8. ஆபத்திலும் அவரை நான்
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னை தப்புவித்தே முற்றும்
இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர்

181

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனாந்தரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார்

2. கானக பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே

3. இப்புவியாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே

4. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைதனை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக் கொள்வார்

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்

182

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடாக் காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

1. ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும்

2. நீதிமானின் சிரசினில்
நித்திய ஆசீர்வந்திறங்குமே
கிருபை நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே

3. அன்புமிகும் அண்ணலிவர்
அருமை இயேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரைத் தள்ளிடாரே
தாங்கி அரவணைப்பார்

4. உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார்

5. இம்மைக்கேற்ற இன்பங்களை
நம்மைவிட்டே முற்றும் அகற்றுவோம்
மாறாத சந்தோஷம் தேடிடுவோம்
மறுமை ராஜ்ஜியத்தில்

183

ஒரு தாய் தேற்றுவது போல்
என் நேசர் தேற்றுவார்
- அல்லேலூயா (4)

1. மார்போடு அணைப்பாரே
மனக்கவலை தீர்ப்பாரே - ஒரு தாய்

2. கரம் பிடித்து நடத்துவார்
கன்மலை மேல் நிறுத்துவார்- ஒரு தாய்

3. எனக்காக மரித்தாரே
என்பாவம் சுமந்தாரே - ஒரு தாய்

4. ஒரு போதும் கைவிடார்
ஒரு நாளும் விலகிடார் - ஒரு தாய்

184

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே.

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரை தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்.

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மனவேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்.

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே.

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே.

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே.

185

அன்பு இயேசுவின் அன்பு
எந்தன் பாவத்தை நீக்கியதால் - அந்த
அன்பை நான் என்றும் விடேன்

1. பாவியாக இருக்கையிலே
பாரிலென்னை தேடி வந்த
பரிசுத்த தேவ அன்பு - அல்லேலூயா

2. நேசரென்னை அன்பால் இழுத்தார்
பாசமாய் அவரோடிணைத்தார்
மாபெரும் அன்பிதுவே - அல்லேலூயா

3. எந்தன் வாஞ்சை இயேசுதாமே
எந்தன் ஜீவனும் இயேசுதாமே
அவரென்னை அறிகின்றார்
- அல்லேலூயா

4. எக்காளம் தொனிக்கையிலே
ஏகிடுவேன் இயேசுவுடனே
வாழுவேன் அன்பருடன் - அல்லேலூயா

5. ஆவியின் அச்சாரமீந்தார்
ஆவியோடே அவரைத் துதிக்க
ஆச்சரியமான அன்பு - அல்லேலூயா

186

ஓ! இயேசு உமதன்பு எத்தனை பெரியது
ஆகாயம் பூமி மலை
ஆழிகளுக்கெல்லாம் பெரியது

சரணங்கள்

1. அளவில்லா ஆனந்தத்தால் அகம்
நிறைந்தது
ஆண்டவர் காரியங்கள் அதிகம் சிறந்தது
அன்றாடம் காலை மாலைகளிலும்
துதிக்க உயர்ந்தது துதிக்க உயர்ந்தது

2. சங்கட சமயங்களில் மங்கியே
வாடுகிறேன்
துங்கனே இரங்குமென ஏங்கியே
நாடுகிறேன்
பங்கமில்லாமல் பதிலளிப்பேன்
என்றதால் பாடுகிறேன் என்றதால்
பாடுகிறேன்

3. இருளாம் பள்ளத்தாக்கில் மருகியே
நடந்தாலும்
அருமெந்தன் மேய்ப்பராய்
அருகிலிருப்பதாலும்
கருணையா யென்னைக் கரம் பிடித்தே
கர்த்தரே காப்பதாலும், கர்த்தரே
காப்பதாலும்

4. குறைவுள்ளவனானாலும் கூடவே
இருக்கிறீர்
நிறைவாம் புல்தரைகளில் மெதுவாய்
நடத்துகிறீர்
இறைவனாம் இயேசு எல்லாவற்றாலும்
திருப்தியாக்குகிறீர் திருப்தியாக்குகிறீர்

5. தேவனுடைய வீட்டில் சித்தப்படி
துதிப்பேன்
ஏக இதயத்துடனே என்றுமதை
மதிப்பேன்
ஆராதிக்க அருகராம் இயேசு
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
ஆமென்

187

வனாந்திர யாத்திரையில் களைத்து
நான் சோர்ந்து போகும் நேரங்களில்
நேசரின் சத்தம் என்னில் கேட்டிடும்
என் வாழ்வு செழித்திடுமே

1. செங்கடல் எதிர்த்து வந்தும்
பங்கம் வந்திடாமல் அங்கு
பாதை ஒன்று கண்ணில் தெரியுதே
விடுவிப்பார் ஆண்டவர்
நல்குவார் புதுபெலன்
தடுத்திடும் சத்துருக்கள்
அழிந்து மாளுவார்

2. தேவனை மறக்கச் செய்யும்
வேதனை நிறைந்த வாழ்வை
சத்துரு விதைத்திடும் போது
மாராவின் கசந்த நீர்
மதுரமாக மாறிடும்
காரிருள் நீங்கிட
வெளிச்சம் தோன்றுமே

3. இனிமையற்ற வாழ்வினில் நான்
தனிமையென்று எண்ணும்போது
மகிமை தேவன் தாங்கிடுவாரே
இனிமையாம் மன்னாவை
வருஷிக்கப் பண்ணுவார்
இனியெனக் கென்றுமே
தாழ்வு இல்லையே

188

1. இயேசு மீட்பர் உந்தன் நெஞ்சில்
வாசம் பண்ண விடாயோ?
உந்தன் பாரம் சுமந்தோரை
இன்று ஏற்றுக் கொள்ளாயோ?

இயேசு மகா இராஜனிதோ
வாசலண்டை நிற்கிறார்
பாவி நீ இவ்வன்பை எண்ணி
வாசலைத் திறக்காயோ?

2. பாவம் லோகம் ஆசா பாசம்
யாவும் இடம் பெற்றதோ?
நீசச் சிலுவையில் மாண்ட
நேசர்க்கிடமில்லையோ?

3. இன்னுமே நீ தாமதித்தால்
பின்பு மோசம் வருமே,
இப்போதே இரட்சண்ய காலம்
அப்பால் பிந்திப் போகுமே.

4. கூவி நிற்கும் மீட்பர் சத்தம்
பாவிகேட்டுத் திறப்பாய்,
உந்தன் ஜீவன் பெலன் யாவும்
இன்றே தத்தம் செய்குவாய்.

5. நாளையென்று சொல்லி நின்றால்
நஷ்டமென்று மடைவாய்,
வேளை இதை வீணாய் விட்டால்
வெகு கஷ்டப்படுவாய்.

189

துக்கம் மாற வேண்டும்
துயரம் தீர வேண்டும்
பாவ பாரம் நீங்கிடவே
இயேசுவிடம் நீ வா

ஜீவ அப்பம் இயேசுவே
ஜீவ தண்ணீர் இயேசுவே
ஜீவ வழி இயேசுவே ஜீவ ஒளி இயேசுவே
ஜீவன் இயேசுவே - அல்லேலூயா
ஜீவன் இயேசுவே

1. கனியில்லாத அத்திமரம் போல்
வாழ்ந்தது போதும் வா
மழையில்லாத மேகம் போல
அலைந்தது போதும் வா

2. வெளியே இன்பம் உள்ளே துன்பம்
வாழ்க்கை இதுதானா?
வேஷம் வேண்டாம் உண்மை
வேண்டும் உணர்ந்திட மாட்டாயா?

3. மற்றவர்களையே குற்றம் சொல்லி
வாழ்ந்தது போதும் வா
வெற்றி வாழ்க்கை வாழ்ந்தவர் இயேசு
அவரையே நோக்கிப்பார்

190

இந்த நாளில் இயேசு எங்கள்
வாழ்வின் சொந்தமாயினார்
அந்தகார பாவம் நீக்கி
ஆத்ம பந்தமாயினார்

சொந்தமும் அவர் பந்தமும் அவர்
வாழ்க்கை ஒருமுறை தான்
வாழ்வோம் இயேசுவுக்காய்
வாருங்கள் வாலிபரே

1. நீ போகும் பாதைதான்
வான் வீடு சேர்க்குமோ?
நீ தேடும் இன்பந்தான்
நாள்தோறும் நிற்குமா?
வா இயேசுவிடம் நீ
தா வாழ்வை அவர்க்கே
வாழ்வெல்லாம் புதிதாகுமே
நாளெல்லாம் இனிதாகுமே

2. பார் உனது ரட்சகர்
ஆம் காத்திருக்கிறார்
சேர் மீட்பர் பாதத்தை
தாம் சேர்த்துக் கொள்ளுவார்
வா இயேசுவிடம் நீ
தா வாழ்வை அவர்க்கே
வாழ்வெல்லாம் புதிதாகுமே
நாளெல்லாம் இனிதாகுமே.

3. நாம் வாழும் மண்ணிலே
ஏராளம் அழிகிறார்
வா உன்னை அனுப்புவேன்
நம் இயேசு அழைக்கிறார்
பார் அறுவடை இங்கே
சேர் அவர் பணியிலே
தயங்காமல் புறப்படுவாய்
தாமதம் இனியும் வேண்டாம்.

191

அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்
இந்த லேசான உபத்திரவம்
சோர்ந்து போகாதே நீ - 2

1. உள்ளான மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்கப்படுகின்ற நேரமிது.

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே.

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாத பரலோகம் நாடுகிறோம்

4. கிறிஸ்துவின் பொருட்டு நெருக்கப்பட்டால்
பாக்கியம் நமக்கு பாக்கியமே.

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களிகூருவோம்.

6. மகிமையின் தேவ ஆவிதாமே
மண்ணான் நமக்குள் வாழ்கின்றார்.

192

1. சேனையதிபன் நம் கர்த்தருக்கே
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கு
அதை அறிந்தே அகமகிழ்வோம்.

ஜெய கிறிஸ்து முன் செல்கிறார்
ஜெயமாக நடத்திடுவார்
ஜெய கீதங்கள் நாம் பாடியே
ஜெயக்கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே.

2. தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டு விடேன்
என்றுரைத்தெம்மை தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே.

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகட்கு
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம்
இன்ப பாதை காட்டிடுவார்.

4. சத்துரு கோட்டை தகர்ந்தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே
துதிசாற்றி ஆர்ப்பரிப்போம்.

5. கறை திரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மை கழுவிடுவார்
வருகையில் நம்மை சேர்க்கும் வரை
வழுவாமல் காத்துக் கொள்வார்

193

நானே வழி சத்தியம் ஜீவன் என்ற
நாதா உம் பாதையில் நடந்திடவே
தேனிலும் இனிய உம் சத்திய வேதம்
தெளிவாக்கும் பாதையில் நடத்திடுமே

1. உள்ளத்தில் உண்மையை விரும்புகின்றீர்
உள்ளத்தின் ஆழத்தில் ஞானம் தாரும்
கள்ளத்தில் காலங்கள் கழித்துவிட்டேன்
உள்ளத்தை உம்மிடம் ஒப்படைத்தேன்

2. உண்மை நான் பேசிட விரும்பிடினும்
உண்மையைப் போல தான் பேசுகின்றேன்
உண்மையில் என்னிலே
உண்மையில்லை
உண்மையாய் நடந்திட உதவி செய்யும்.

3. வாலிப நாட்களின் சூழ்நிலையில்
பலவித பொய்பேசும் சந்தர்ப்பத்தில்
சத்தியம் பரிசையும் கேடகமும்
நித்தமும் என் இடைக் கச்சையாகும்.

194

ஆனந்தமாய் இன்ப கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்.

அனுபல்லவி

நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத்
தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்.

1. சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன்

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத் தேடி வந்தார்
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன்

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்பூவில் வேறே
இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே

4. உம்மை பின் சென்று ஊழியம் செய்து
உம்பாதம் சேர்ந்திட வாஞ்சிக்கிறேன்
தாரும் தேவா ஏழைக்கும் மாறாத உம் கிருபை
கண் பாரும் என்றும் நான் உம் அடிமை

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உந்தன் சமூகமே
பெலத்தின் மேல் பெலனடைந்து நான்
சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடவே

195

1. ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்.

இயேசுவே நீர் பெரியவர்
இயேசுவே நீர் பரிசுத்தர்
இயேசுவே நீர் நல்லவர்
இயேசுவே நீர் வல்லவர்.

2. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே
பாதகர் போல் தொங்கினீரல்லோ.

3. ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீச செய்குவீர்.

4. வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர்.

5. நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வர காலமாகுதே
மாயலோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ.

196

உம்மைப்போல் யாருண்டு
எந்தன் இயேசு நாதா
இந்தப் பார்தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு?

அனுபல்லவி

பாவப் பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்.

சரணங்கள்

1. உலகம் மாமிசம் பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான்
ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை
மறந்தேன்
மனம்போல் நடந்தேன் ஏமாற்றம்
அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயாஇயேசுநாதா
அடிமை உமக்கே இனி நான்

2. இன்றைக்கு நான்செய்யும் இந்த
தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால்
நிரப்பும்
நொறுக்கும், உருக்கும்,
உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்.

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க, வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்.

197

பரிசுத்தர் கூட்டம் நடுவில்
ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே இவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ!

1. மீன் கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ?
கல் தின்ன கொடுக்கும் பெற்றோர் உண்டோ?
பொல்லாதோர் கூட செய்திடார்
நற்பிதா நலம் அருள்வார்

2. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் நீக்குமே
பாவி நீச பாவி நானையா
தேவா இரக்கம் செய்ய மாட்டீரோ!

3. பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உள் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகின்றேன்
பரிசுத்தம் கெஞ்சுகின்றேன்

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லை எங்கிலும்
பரிசுத்தம் என எழுதும்

198

1. மனதுருகும் தெய்வமே இயேசய்யா
மனதாரத் துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்

நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம் இரக்கத்திற்கு முடிவே இல்லை
உம் அன்பிற்கு அளவே இல்லை
அவை காலைதோறும் புதிதாயிருக்கும்

2. மெய்யாக எங்களது
பாடுகளை ஏற்றுக் கொண்டு
துக்கங்களை சுமந்து கொண்டீர் - ஐயா

3. எங்களுக்கு சமாதானம்
உண்டு பண்ணும் தண்டனையோ
உம்மேலே விழுந்ததையா - ஐயா

4. எங்களது மீறுதலால்
காயப்பட்டீர் நொறுக்கப்பட்டீர்
தழும்புகளால் சுகமானோம் - உந்தன்

5. தேடிவந்த மனிதர்களின்
தேவைகளை அறிந்தவராய்
தினம் தினம் அற்புதம் செய்தீர் - ஐயா

199

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மா ராஜனே வந்திடுவார்

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனை சந்திப்போமே

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்குதாம் மாறிடாதே
தேவதூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார்

4. கர்த்தரின் வேளையை நாமறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம்

200

1. பாவத்தின் பலன் நரகம் நரகம்
ஓ! பாவி நடுங்கிடாயோ
கண் காண்பதெல்லாம் அழியும் அழியும்
காணாததல்லோ நித்தியம்

பல்லவி

இயேசு ராஜா வருவார்
இன்னும் கொஞ்சங் காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே நம்பாதே
அதன் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே நாளிலே
ஓர் காசும் கூட வராதே -இயேசு

3. உன் காலமெல்லாம் போகுதே போகுதே
உலக மாய்கையிலே
ஓ! தேவகோபம் வருமுன், வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ -இயேசு

4. மாபாவியான என்னையும், என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ! பாவி நீயும் ஓடிவா, ஓடிவா
தேவா சீர்வாதம் பெறுவாய் -இயேசு

201

மேகமீதில் இயேசுராஜன்
வேகம் வாராரே

அனுபல்லவி

ஆயத்தமுள்ளோரை ஆகாயம்சேர்க்க
அவரே வாராரே

சரணங்கள்

1. ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே
அவனியில் வாராரே
மீண்டவரோ மேலோகமே செல்ல
மேதினியை விடுவார் -மேக

2. கிறிஸ்துவுக்குள்ளே மரித்தோரெல்லாம்
கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம்
மறைந்தே போவாரே -மேக

3. பாடுபட்டோர்க்கு பலனளிப்பாரே
பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோர் குறைவில்லா பலனையே
கூவியே கொடுத்திடுவார் -மேக

4. அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே
அவர் வரும் வேளையை எவருமேயறியார்
ஆண்டவரே அறிவார் -மேக

5. ஆயிரமாயிரம் அவரது வசனங்கள்
அதை அறிவிக்கின்றன
அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளெல்லாரும்
அதையே அறிவிக்கிறார் -மேக

6. ஆயிரவருஷ ஆளுகை செய்வார்
ஆண்டவர் யேசு தாமே
நீதி சமாதானம் நிறைந்தே இருக்கும்
ஜோதியின் ஆளுகையில் -மேக

202

என்ன என் ஆனந்தம் (2)
சொல்லக் கூடாதே
மன்னன் கிறிஸ்து என்
பாவத்தையெல்லாம்
மன்னித்து விட்டாரே

1. கூடுவோம், ஆடுவோம், பாடுவோம், நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்

2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே;
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்கு
அருளினதாலே,
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம்
மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே,
மண்ணுலகில் வந்து விண்ணுலகில்
சென்ற
மன்னனைத் தோத்தரிப்போம்

203

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போவாரும் இறங்கிவாரும்
எங்கள் மத்தியிலே

1. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும்
இந்த வேளையிலே -ஆவி

2. பத்மு தீவினிலே பக்தனை தேற்றினீரே
என்னையும் தேற்றி ஆற்ற வாரும்
இந்த வேளையிலே -ஆவி

3. சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்கவாரும் இந்த
வேளையிலே -ஆவி

4. நேசரின் மார்பினிலே இனிதாய் சாய்ந்திடவே
ஏக்கமுற்றேன் விரும்பி வந்தேன்
உந்தன் பாதத்திலே -ஆவி

5. ஆவியின் வரங்களினால் என்னையும்
நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும்
இந்த வேளையிலே -ஆவி

204

1. காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்;
வேறொளியில்லை: வீடும் தூரமே,
நடத்துமேன்;
நீர் தாங்கின், தூர காட்சி ஆசியேன்,
ஓர் அடி மட்டும் என்முன் காட்டுமேன்.

2. என் இஷ்டப்படி நடந்தேன். ஐயா!
முன்னாளிலே.
ஒத்தாசை தேடவில்லை; இப்போதோ
நடத்துமேன்
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்பு கொண்டேன், அன்பாக மன்னியும்

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்,
இனிமேலும்
காடாறு சேறு குன்றில் தேவரீர் நடத்திடும்
உதய நேரம் வரக் களிப்பேன்
மறைந்துபோன நேசரைக் காண்பேன்

205

அன்பே அன்பே அன்பே
ஆருயிர் உறவே!
ஆனந்தம் ஆனந்தமே

1. ஒரு நாளுந் தயை கண்டேனையா,
அந்நாளெனை வெறுத்தேனையா;
உம் தயை பெரிதையா - என்மேல்
உம் தயை பெரிதையா -அன்பே

2. பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரி லன்பேனையா
ஆழம் அறிவேனோ அன்பின்
ஆழம் அறிவேனோ -அன்பே

3. அலைந்தேன் பலநாள் உம்மையறியா
மறந்தே திரிந்த துரோகியாம் என்னை
அணைத்தீர் அன்பாலே - என்னையும்
அணைத்தீர் அன்பாலே -அன்பே

4. பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல்
வாடாதே ஐயா - அன்பு
வாடாதே ஐயா -அன்பே

206

அழகானவர் அருமையானவர்
இனிமையானவர்
மகிமையானவர் மீட்பரானவர்
அவர் இயேசு, இயேசு, இயேசு

1. சேனைகளின் கர்த்தர் நம் மகிமையின் ராஜா
என்றும் நம்மோடிருக்கும் இம்மானுவேலர்
இம்மட்டும் இனிமேலும் எந்தன் நேசர்
என்னுடையவர் என் ஆத்தும நேசரே

2. கன்மலையும் கோட்டையும் துணையுமானவர்
ஆற்றித்தேற்றிக் காத்திடும் தாயுமானவர்
என்றென்றும் நடத்திடும் எந்தன் ராஜா
என்னுடையவர் என் நேசக்கர்த்தரே

3. கல்வாரி மேட்டிலே கொல்கதாவிலே
நேச இரத்தம் சிந்தியே என்னை மீட்டார்
பாசத்தின் எல்லைதான் இயேசு ராஜா
என்னுடையவர் என் அன்பு இரட்சகர்

207

1. இயேசுவைப் போல் அழகுள்ளோர்
யாருமில்லை பூவினில்
இதுவரை கண்டதில்லை
காண்பதுமில்லை

பூரண அழகுள்ளவரே
பூவில் எந்தன் வாழ்க்கையதில்
நீரே போதும் வேறே வேண்டாம்
எந்தன் அன்பர் இயேசுவே
மண்ணுக்காக மாணிக்கத்தை
விட்டிடமாட்டேன் - வெறும்

2. சம்பூரண அழகுள்ளோர் என்னை
மீட்டுக்கொண்டீரே
சம்பூரணமாக என்னை
உன்றனுக்கீந்தேன்

3. லோக சுகம் மேன்மை எல்லாம்
எந்தனைக் கவர்ச்சித்தால்
பாவ சோதனைகளெல்லாம் என்னை
சோதித்தால்

4. நீர் மேல் மோதும் குமிழி போல்
மின்னும் ஜடா மோகமே
என் மேல் வந்து வேகமாக
மோதியடித்தால்

5. தினம்தோறும் உம்மிலுள்ள அன்பு
என்னில் பொங்குதே
நேசரே நீர் வேகம் வந்து என்னைச்
சேருமே

208

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்

1. பாவத்தை போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்

2. பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

5. முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

209

ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
என்னுள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என்நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார்

1. செங்கடல் அவர் சொல்ல
இரண்டாய் நின்றது
பெரும் கோட்டை ஒன்று
தரைமட்டமானது
அவர் சொல்ல குருடனின் கண் திறந்தது
அவர் தொடக் குஷ்டரோகி சொஸ்தமாயினான்

2. உம்மை என்றும் விடாமல்
நான் தொடரவே
என்னை என்றும் விடாமல்
நீர் பிடிக்கவே
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டை காட்டும் நல்ல மேய்ப்பரே

210

1. இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால்
போதும்
மகிமையில் அவரோடு நான் வாழ்ந்தால்
போதும்
நித்யமாம் மோட்ச வீட்டில் சேர்ந்தால்
போதும்
பரிசுத்தர் கூட்டத்தில் நான் மகிழ்ந்தால்
போதும்

2. இயேசுவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டு
வசனமாம் வேலியாலே காக்கப்பட்டு
கறை திரையற்ற பரிசுத்தரோடு
ஏழையான் பொன்வீதியில் உலாவிடுவேன்

3. தூதர்கள் வீணைகளை மீட்டும் போது
நிறைவான ஜெயகோஷம் முழங்கும்போது
அல்லேலூயா கீதம் பாடிக்கொண்டு
அன்பராம் இயேசுவோடு அகமகிழ்வேன்

4. முட்கிரீடம் சூட்டப்பட்ட தலையைப்
பார்ப்பேன்
பொற்கிரீடம் சூட்டி நானும் புகழ்ந்திடுவேன்
வாரினால் அடிப்பட்ட முதுகைப் பார்த்து
காயங்கள் ஒவ்வொன்றாக முத்தம் செய்வேன்

5. எனதுள்ளம் நன்றியால் நிறைந்திடுதே
எந்தனின் பாக்கிய வீட்டை நினைக்கையிலே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
ஆவலாய் ஏங்கிடுதே எனதுள்ளமே

211

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

1. வாழ்நாளை எல்லாம் வீண்நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார்

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை

3. வானத்தின் கீழே பூமி மேலே
வானவர் இயேசு நாமமல்லால்
இரட்சிப்படைய வழி இல்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே

4. தீராத பாவம் வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய

5. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன்பேரை ஜீவ புஸ்தகத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார்

212

1. நான் பாவிதான் - ஆனாலும் நீர்
மாசற்ற ரத்தம் சிந்தினீர்
வா என்று என்னைக் கூப்பிட்டீர்
என் மீட்பரே; வந்தேன்

2. நான் பாவிதான் - என் நெஞ்சிலே
கறை பிடித்திருக்குதே;
என் கறை நீங்க; இப்போதே
என் மீட்பரே, வந்தேன்

3. நான் பாவிதான் பயத்தினால்
அலைந்து பாவ பாரத்தால்
அழிந்து மாண்டு போவதால்
என் மீட்பரே, வந்தேன்

4. நான் பாவிதான் - மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
உம்மாலே பெற்று வாழவும்
என் மீட்பரே, வந்தேன்

213

1. பரிசுத்தமான பரமனே என்னை
பாத்திரன் ஆக்கிடுமே
பரமதரிசனம் தாருமே தேவா
பரிசுத்த மாக்கிடுமே

பல்லவி

கர்த்தருக்குப் பரிசுத்தம்
கருத்துடன் நெற்றியிலே
பதித்திட உதவி செய்யும்
பரமனே சுத்தமாக்கும்

2. அந்தரங்க வாழ்க்கையில் பரிசுத்தம் காண
அடிமைக்கு உதவி செய்யும்
இரகசிய பாவங்கள் வெறுத்திட எனக்கு
இரங்கிடும் இந் நேரமே

3. பொது வாழ்வில் என்னை பரிசுத்தமாக
காத்திட உதவி செய்யும்
நாள்தோறும் என் வாழ்வில் உம்மையே
உயர்த்த
பரிசுத்தம் தந்திடுமே

4. தூசியை உதறிவிட்டெழுந்திட எனக்கு
தூயனே துணை செய்வீர்
வல்லமை தரித்து நான் வாழ்ந்திட இன்று
உம் ஆவி தந்திடுமே

214

வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது மகனே
பொல்லாப்பு நேரிடாது நேரிடாது மகளே

1. உன்னதமான கர்த்தரையே
உறைவிடமாக்கிக் கொண்டாய்
அடைக்கலமான ஆண்டவரை
ஆதாயமாக்கிக் கொண்டாய்

2. ஆட்டுக்குட்டி இரத்தத்தினால்
சாத்தானை ஜெயித்து விட்டோம்
ஆவி உண்டு வசனம் உண்டு
அன்றாடம் வெற்றி உண்டு

3. கர்த்தருக்குள் நம்பாடுகள்
ஒரு நாளும் வீணாகாது
அசையாமல் உறுதியுடன்
அதிகமாய் செயல்படுவோம்

4. அழைத்தவரோ உண்மையுள்ளவர்
பரிசுத்தமாக்கிடுவார்
ஆவி ஆத்துமா சரீரமெல்லாம்
குற்றமின்றி காத்திடுவார்

5. நம்முடைய குடியிருப்பு
பரலோகத்தில் உண்டு
வரப்போகும் இரட்சகரை
எதிர்நோக்கி காத்திருப்போம்

6. அற்பமான ஆரம்பத்தை
அசட்டை பண்ணாதே
தொடங்கினவர் முடித்திடுவார்
சொன்னதை செய்திடுவார்

215

வெற்றிக்கொடி பிடித்திடுவோம் நாம்
வீரநடை நடந்திடுவோம்

1. வெள்ளம்போல சாத்தான் வந்தாலும்
ஆவிதாமே கொடி பிடிப்பார்
அஞ்சாதே என் மகனே
நீ அஞ்சாதே என் மகளே

2. ஆயிரம்தான் துன்பம் வந்தாலும்
அணுகாது அணுகாது
ஆவியின் பட்டயம் உண்டு - நாம்
அலகை வென்று விட்டோம்

3. காடானாலும் மேடானாலும்
கர்த்தருக்கு பின்நடப்போம்
கலப்பையில் கை வைத்திட்டோம்
நாம் திரும்பி பார்க்கமாட்டோம்

4. கோலியாத்தை முறியடிப்போம்
இயேசுவின் நாமத்தினால்
விசுவாச கேடயத்தால்
பிசாசை வென்றிடுவோம்

216

கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
கலங்கித் தவிக்காதே
அவரே உன்னை ஆதரிப்பார்
அதிசயம் செய்வார்

1. நீதிமான் தள்ளாட விடமாட்டார்
நித்தமும் காத்து நடத்திடுவார்

2. நம்மைக் காக்கும் தேவனவர்
நமது நிழலாய் இருக்கின்றவர்

3. தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
அவரே நம்மை அணைத்துக் கொள்வார்

4. கர்த்தர் நம் சார்பில் இருக்கும்போது
நமக்கு எதிராய் நிற்பவன் யார்?

5. வாழ்வை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போம்
அவரே எல்லாம் வாய்க்கச் செய்வார்

6. என்றும் அவரில் மகிழ்ந்திருப்போம்
இதய விருப்பம் நிறைவேற்றுவார்

217

இரத்தக் கோட்டைக்குள்ளே
நான் நுழைந்து விட்டேன்
இனி எதுவும் அணுகாது
எந்தத் தீங்கும் தீண்டாது

1. நேசரின் இரத்தம் என்மேலே
நெருங்காது சாத்தான்
பாசமாய் சிலுவையில் பலியானார்
பாவத்தை வென்று விட்டார்

2. இம்மட்டும் உதவின எபினேசரே
இனியும் காத்திடுவார்
உலகிலே இருக்கும் அவனைவிட
என் தேவன் பெரியவரே

3. தேவனே ஒளியும் மீட்புமானார்
யாருக்கு அஞ்சிடுவேன்
அவரே என் வாழ்வின் பெலனானார்
யாருக்கு பயப்படுவேன்

4. தாய் தன் பிள்ளையை மறந்தாலும்
மறவாத என் நேசரே
ஆயனைப் போல நடத்துகிறீர்
அபிஷேகம் செய்கின்றீர் - என்னை

5. மலைகள் குன்றுகள் விலகினாலும்
மாறாது உம் கிருபை
அனாதி சிநேகத்தால் இழுத்துக் கொண்டீர்
அணைத்து சேர்த்துக் கொண்டீர்

218

அப்பா பிதாவே அன்பான தேவா
அருமை இரட்சகரே ஆவியானவரே

1. எங்கோ நான் வாழ்ந்தேன் அறியாமல் அலைந்தேன்
என் நேசர் தேடி வந்தீர்
நெஞ்சார அணைத்து முத்தங்கள் கொடுத்து
நிழலாய் மாறி விட்டீர்
நன்றி உமக்கு நன்றி (அப்பா)

2. தாழ்மையில் இருந்தேன் தள்ளாடி நடந்தேன்
தயவாய் நினைவு கூர்ந்தீர்
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
கரம் பற்றி நடத்துகிறீர்

3. உளையான சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்தீரே
கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
கழுவி அணைத்தீரே

4. இரவும் பகலும் ஐயாகூட இருந்து
எந்நாளும் காப்பவரே
மறவாத தெய்வம் மாறாத நேசர்
மகிமைக்குப் பாத்திரரே

5. ஒன்றை நான் கேட்டேன்
அதையே நான் தேடி ஆர்வமாய் நாடுகிறேன்
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்
உம்பணி செய்திடுவேன் - நன்றி

219

பிரியமானவனே - உன்
ஆத்துமா வாழ்வது போல் - நீ
எல்லாவற்றிலும் வாழ்ந்து
சுகமாய் இரு மகனே (மகளே)

1. வாழ்க்கை என்பது போராட்டமே
நல்லதொரு போராட்டமே
ஆவிதரும் பட்டயத்தை
எடுத்துப் போராடி வெற்றி பெறு

2. பிரயாணத்தில் மேடு உண்டு
பள்ளங்களும் உண்டு
மிதித்திடுவாய் தாண்டிடுவாய்
மான் கால்கள் உனக்குண்டு மறவாதே

3. ஓட்டப்பந்தயம் நீ ஓடுகிறாய்
ஒழுங்கின்படி ஓடு மகனே
நெருங்கிவரும் பாவங்களை
உதறித் தள்ளிவிட்டு ஓடு மகனே

220

நேசரே உம் திரு பாதம் அமர்ந்தேன்
நிம்மதி நிம்மதியே
ஆர்வமுடனே பாடித் துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே
அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

1. உம் வல்ல செயல்கள்
நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதையா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா
நல்லவரே வல்லவரே
ஆராதனை ஆராதனை

2. பலியான செம்மறி
பாவங்கள் எல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே
பரிசுத்தரே படைத்தவரே
ஆராதனை ஆராதனை

3. எத்தனை இன்னல்கள்
என் வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் ஐயா
இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம் நிச்சயமே
இரட்சகரே இயேசு நாதா
ஆராதனை ஆராதனை

221

அசைவாடும் ஆவியே தூய்மையின் ஆவியே
இடம் அசைய உள்ளம் நிரம்ப
இறங்கி வாருமே

1. பெலனடைய நிரப்பிடுமே
பெலத்தின் ஆவியே
கனமடைய ஊற்றிடுமே
ஞானத்தின் ஆவியே -அசைவாடும்

2. தேற்றிடுமே உள்ளங்களை
இயேசுவின் நாமத்தினால்
ஆற்றிடுமே காயங்களை
அபிஷேக தைலத்தினால் -அசைவாடும்

3. துடைத்திடுமே கண்ணீரெல்லாம்
கிருபையின் பொற்கரத்தால்
நிறைத்திடுமே ஆனந்தத்தால்
மகிழ்வுடன் துதித்திடவே-அசைவாடும்

222

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா

பொழிந்திடும் வல்லமை
உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை
அக்கினியின் வல்லமை

1. மாம்சமான யாவர் மீதும்
ஆவியை ஊற்றுவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்கதரிசனம் சொல்வாரே

2. பெந்தேகொஸ்தே நாளில் போல
பெரிதான முழக்கத்தோடு
வல்லமையாக இறங்கி
வரங்களினாலே நிரப்பும்

3. மீட்கப்படும் நாளுக்கென்று
முத்திரையான ஆவியை தாரும்
பிதாவே என்று அழைக்க
புத்திர சுவிகாரம் ஈந்திடும்

223

என்னை உண்டாக்கிய என் தேவாதி தேவன்
அவர் தூங்குவதுமில்லை
உறங்குவதுமில்லை

1. என் மேல் அவர் கண்ணை வைத்து
ஆலோசனை சொல்லுவார்
சத்தியத்தின் பாதையிலே நித்தமும் நடத்துவார்
பரிசுத்த ஆவியால் உள்ளத்தை நிரப்புவார்
பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பெயரே

2. பெலவீன நாட்களிலே பெலன் தந்து
தாங்குவார்
பலவித சோதனையில் ஜெயம்
நமக்களிப்பார்
ஆபத்து காலத்தில் அரணான கோட்டையும்
கேடகமும் துருகமும் பெலனவரே

3. ஆவியான தேவனுக்கு ரூபமொன்றுமில்லையே
ரூபமில்லை ஆகையால் சொரூபமொன்று
மில்லையே
வாஞ்சையுள்ள ஆத்துமாவின்
இருதயந்தன்னிலே
வார்த்தையாலே பேசுகின்ற ஆண்டவர் இவர்

224

கண்களை ஏறெடுப்பேன் - மாமேருநேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்

அனுபல்லவி

விண்மண் உண்டாக்கிய வித்தகரிடமிருந்து
எண்ணில்லா வொத்தாசை
என்றனுக்கே வரும்

1. காலைத் தள்ளாட வொட்டார் - உறங்காது காப்பவர்
காலைத் தள்ளாட வொட்டார்
வேலையில் நின்றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காதவர்

2. பக்தர் நிழல் அவரே - என்னை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே
எக்கால நிலமையில் என்னைச் சேதப்படுத்தாது
அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே

3. எல்லா தீமைகட்கும் - என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்து மாவையும் நாடோறும் காப்பவர்

225

உம்மை நம்பி உந்தன் பாதம்
உறுதியாய்ப் பற்றிக் கொண்டோம்
ஒரு போதும் கைவிடமாட்டீர் - 2

1. கண்ணீரைத் துடைத்து கரங்களைப் பிடித்து
காலமெல்லாம் காத்துக்
கொண்டீர் - என்னை

2. மகனாக மகளாக
அப்பா என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தீர் - ஐயா

3. அச்சாரமாய் முத்திரையாய்
அபிஷேக வல்லமையை
அடிமைக்குத் தந்தீரே - ஐயா

4. குருடர்கள் பார்த்தார்கள்
செவிடர்கள் கேட்டார்கள்
முடவர்கள் நடந்தார்கள் - ஐயா

226

நான் இயேசுவின் பிள்ளை
பயமே இல்லை
எந்நாளும் சந்தோஷமே

1. தெரிந்து கொண்டார் தெரிந்து கொண்டார்
மகனாக மகளாக தெரிந்து கொண்டார்

2. கழுவப்பட்டேன் கழுவப்பட்டேன்
இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டேன்

3. வென்று விட்டேன் வென்று விட்டேன்
எதிரியின் தடைகளை வென்று விட்டேன்

4. நிரப்பப்பட்டேன் நிரப்பப்பட்டேன்
ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டேன்

5. சுகமானேன் சுகமானேன்
இயேசுவின் காயங்களால் சுகமானேன்

6. முறியடிப்பேன் முறியடிப்பேன்
எதிரான ஆயுதத்தை முறியடிப்பேன்

227

உதவி வரும் கன்மலை
நோக்கிப் பார்க்கின்றேன்
வானமும் வையமும் படைத்தவரை
நான் பார்க்கின்றேன்

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலைக் காக்கிறவர்
எந்நாளும் தூங்கமாட்டார்

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும் இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. கர்த்தர் எல்லாத் தீங்கிற்கும்
விலக்கி என்னைக் காத்திடுவார்
அவர் எனது ஆத்துமாவை
அனுதினம் காத்திடுவார்

4. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும்போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும்
எந்நாளும் காக்கின்றார்

228

தேவனின் ஆலயமே, பரிசுத்த ஆலயமே
மகிமையின் ஆலயமே நாமே அவ்வாலயமே

1. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
அவருக்காய் கிரயமாய் கொள்ளப்பட்டோம்
தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டோமே நாம்
தேவப்பிள்ளைகளானோம், அவர்
சொந்த ஜனமானோம்

2. நாம் இனி நம்முடையவர்களல்ல
அவரே நம் சரீரத்தின் சொந்தமானோர்
வஞ்சிக்கப்படாமல் தீட்டுப்படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக் கொள்வோம்
பரிசுத்த ஜாதியாக

3. கர்த்தருடன் என்றும் இசைந்திருப்போம்
அவருடன் ஒரே ஆவியாயிருப்போம்
ஆவியினாலும் சரீரத்தாலும்
மகிமை செலுத்திடுவோம்
கர்த்தருக்கே என்றும்

4. கறை திரை இல்லா சபையாக
கற்புள்ள கன்னிகையைப் போல
இயேசுவுக்காக ஜீவிப்போமே என்றும்
அவர் சித்தம் செய்திடுவோம்
மணவாட்டியாகிடுவோம்

5. இயேசுவின் வருகை நெருங்கிடுதே
அவர் பிரசன்னம் விரைந்தேகிடுதே
மகிமை மேல் மகிமை அடைந்திடுவோம் நாம்
மறுரூபமாகிடுவோம்
மகிமையில் சேர்ந்திடுவோம்

229

1. நல்ல போராட்டம் போராடு
எல்லையை நாடு
அல்லல் தொல்லை அணுகிடாமல்
நில்லாமல் ஓடு

அனுபல்லவி

பாரம் பாவம் தள்ளி இலக்கை நோக்கி
நேராய் ஓடு தேவன் நியமித்த ஓட்டம்

2. பின்னானவை மறந்தே முன்நோக்கியே ஓடு
கன்மலைக் கிறிஸ்துவின் மேல்
கண்பதித்தோடு

3. இச்சையடக்கி ஓடிடுவாய் இங்கு யாவிலும்
உச்சிதமான அழியாக் கிரீடம் உனக்குண்டு

4. காடு மேடு கண்டு அஞ்சி களைத்து நில்லாதே
கூடுதல் பெலனளிப்பார் குதித்தே ஓடுவாய்

5. அக்கம் பக்கம் பார்த்திட்டாலோ
அடைவாய் தோல்வியை
எக்காளம் தொனிக்கும் வரை
எதிர் நோக்கி ஓடு

230

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவிய பாதையிலே - இயேசு பரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெனக்காருமில்லை

3. அன்பின் அகலமும் நீளம் உயரம்
ஆழமும் அறிந்துணர அனுகிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய்

4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் பெற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினைக் காத்துக்
கொள்வோம்

5. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கின்றாரே வாரு மென்பீர்
சீயோனே நீ பார் உனக்காய்
நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார்

231

தம் கிருபை பெரிதல்லோ
எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக்கொண்டேன்
காத்துக்கொள்ள கிருபை தாருமே

3. தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்
பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே

4. ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெபவரம் கிருபை தாருமே

232

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூரு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்

1. பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமம் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வலக்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார்

3. கசந்த மாரா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார்

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய்

5. மாமிசமான யாவர் மீதும்
உன்னத ஆவியை பொழியுவார்
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடவே

233

சோர்ந்து போகாதே! மனமே
சோர்ந்து போகாதே!
கண்டுனை அழைத்த தேவன்
கைவிடுவாரோ

1. துன்பங்கள் தொல்லைகள் உன்னை
சூழ்ந்துகொண்டாலும்
அன்பர் உன்னைத் தேற்றும் நேரம்
ஆனந்தம் அல்லோ

2. சோதனைகளை சகிப்போன்
பாக்கியவான் அல்லோ
ஜீவ கிரீடம் சூடும் நேரம்
என்ன பேரின்பம்

3. வாக்களித்த தேவனை நீ
பாடிக் கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னைத்
தாங்க மன்றாடு

234

1. இருள் சூழ்ந்த லோகத்தில்
இமைப்பொழுதும் தூங்காமல்
கண்மணி போல என்னை
கர்த்தர் இயேசு காத்தாரே
கானங்களால் நிறைந்து
காலமெல்லாம் பாடுவேன்

அஞ்சிடேன் அஞ்சிடேன்
என் இயேசு என்னோடிருப்பதால் (2)

2. மரணப் பள்ளத்தாக்கில்
நான் நடந்த வேளைகளில்
கர்த்தரே என்னோடிருந்து
தேற்றினார் தம் கோலினால்
பாத்திரம் நிரம்பி வழிய
ஆவியால் அபிஷேகித்தார்

3. அலைகள் படகின் மேல்
மோதியே ஆழ்த்தினாலும்
கடல்மேல் நடந்து வந்து
கர்த்தரே என்னைத் தூக்கினார்
அடல் நீக்கியவர்
அமைதிப்படுத்தினார்

235

1. கர்த்தர் உன் வீட்டைக் கட்டாராகில்
அதைக்கட்டும் உந்தன் பாடு விருதா
கர்த்தர் நகரத்தைக் காவல் செய்யாவிடில்
உன் கண் விழிப்பும் விருதா

ஆதலால் உன் உள்ளமே
சதா அவர் சமூகம்
நிதம் நேசரையே துதித்திட்டும்
கர்த்தருக்குப் பயந்து அவர் வழிநடந்தால்
நீ பாக்கியம் கண்டடைவாய்

2. உன் வழிகளிலெல்லாம்
உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார்

3. இரவின் பயங்கரத்திற்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நீ பயப்படவே மாட்டாய்

4. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்து காத்திடுவார்

5. ஆபத்திலும் அவரை நீ
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
உன்னைத் தப்புவித்தே முற்றும்
இரட்சிப்பாரே
உன் ஆத்தும நேசரவர்

6. கர்த்தருக்குப் பயப்பட்டவன்
இவ்வித ஆசீர்வாதம் பெறுவான்
கர்த்தர் சீயோனில் இருந்து உன்னை
கடைசி மட்டும் ஆசீர்வதிப்பார்

236

இன்ப துன்ப நேரத்திலும்
உன் அன்புள்ள இயேசுவைப்பார்

1. இன்பத்தினால் அகமகிழ்ந்து
கிலேசத்தினால் துக்கித்து
சிற்றின்ப பேருலகில்
சிக்கிக் கொண்டிருக்கும்போதும்

2. சோதனையால் பிடிபட்டு
இடுக்கணில் இருக்கும்போதும்
சாத்தான் உன்னை மேற்கொள்ளும் போதும்
அக்கினி அஸ்திரம் எறியும் போதும்

3. அவர் தாமே சோதிக்கப்பட்டு
பாடு நமக்காய் பட்டதினால்
அவர் சோதிக்கப்படும் நமக்கு
உதவி செய்ய வல்லவராம்

4. வறுமையினால் யாசித்து
பாடுமிகப் படும்போதும்
சாத்தான் உன்னை பகடிபண்ணவே
உன் விசுவாசத்தைக் குறைக்கும் போதும்

5. கடுநோயால் பெலன் குன்றி
பெலவீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்குக் கசப்பாகி
சாவை நீ விரும்பும்போதும்

6. பகைஞரால் கல்லெறியுண்டு
மரணநேரம் கிட்டும்போதும்
பக்தன் ஸ்தேவானைப்போல
தைரியமாய் உன் யேசுவைப்பார்

237

ஆனந்தமே பரமானந்தமே - யேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

1. இந்தப்புவி ஒரு சொந்தமல்லவென்று
ஏசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டு துன்பமும் யேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும்

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்தி
மேவியே சுக்கான் பிடித்திடுமே

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெய கீதம் பாடி மகிழ்ந்திடலாம்

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
கைவேலையில்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் என்ச் சொல்லிப் போகலையோ

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்திலும் ஈயே அனுப்பிடுவார்

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன்
என் நேசர் தம்முக ஜோதியே யல்லாமல்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை

238

தேவா நான் எதினால் விசேஷித்தவன்
ராஜா நான் அதை தினம் யோசிப்பவன்
எதினால்? இது எதினால்?
நீர் என்னோடு வருவதினால்

1. மேகஸ்தம்பம் மேலிருந்து பாதுகாக்குது
பாதை காட்ட பகலெல்லாம் கூட செல்லுது
அன்பான தேவன் என்னோடு வருவார்
அதுபோதும் என் வாழ்விலே

2. தாகம் கொண்ட தேவஜனம் வானம் பாக்குது
ஆவல் கொண்ட கன்மலையும் கூட செல்லுது
என் ஏக்கமெல்லாம் என்தேவன் தீர்ப்பார்
சந்தோஷம் நான் காணுவேன்

3. வாழ்க்கையிலே கசப்புகள் கலந்திட்டாலும்
பாசமுள்ள ஒரு மரம் கூட வருது
மாராவின் நீரை தேனாக மாற்றும்
என் நேசர் என்னோடு உண்டு

239

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவனுக் கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
அன்பர் இயேசென்னை ஏற்றுக்கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்துக் காத்திடுவார்
என்னை கன்மலையின்மேல் உயர்த்திடுவார்

2. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
தேவன் அருகில் வந்து என்னைக் காத்திடுவார்
என்னைப் பகைத்தவர்கள் இடறி
விழுந்தார்கள்

240

இயேசுவை நாம் எங்கே காணலாம்?
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்?

பனி படர்ந்த மலையின் மேலே பார்க்க முடியுமா?
கனி நிறைந்த சோலை நடுவே காண முடியுமா?

1. ஓடுகின்ற அருவியெல்லாம் தேடி
அலைந்தேனே
ஆடுகின்ற அலை கடலில் நாடி அயர்ந்தேனே
தேடுகின்ற என் எதிரே தெய்வத்தைக்
காணேனே
பாடுபடும் ஏழை நான் அழுது வாடினேனே

2. வானமதில் பவனிவரும் கார்முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே காட்டிட
மாட்டாயோ?
காலமெல்லாம் அவனியின் மேல்
வீசிடும் காற்றே நீ
கர்த்தன் இயேசு வாழுமிடம் கூறிடமாட்டாயோ?

3. கண்ணிரண்டும் புனலாக நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான்
திருமறை முன்பாக
விண்ணரசர் அன்புடனே
கண்விழிப்பாய் என்றார்
கண்விழித்தேன் என் முன்னே
கர்த்தன் இயேசு நின்றார்

241

பிரதான தூதன் எக்காளம் முழங்க
பரமன் இயேசு வருவார்

சாயங்காலத்திலோ நடுராவினிலோ
சேவல் கூவிடும் நேரத்திலோ
அதிகாலையிலோ எந்த வேளையிலோ
பரமன் இயேசு வருவார்

1. இருவர் வயலில் இருப்பார்
இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைப்பார்
ஒருவர் கைவிடப்படுவார்
ஏற்றுக்கொள்ளப்படுவார் ஒருவர்

2. நோவா காலத்தின் சம்பவம் போல்
நடந்திடும் அந்த நாட்களிலே
புசித்தும் குடித்தும் பெண்கொண்டும்
பலர் அசந்து வெறித்திருப்பார்

3. லவுகீக கவலைகளினாலும்
இலச்சை மிகுந்த வெறியினாலும்
எம் இதயம் பாரம் அடையாமல்
எச்சரிக்கையுடன் காத்திருப்போம்

4. இரவும் பகலும் விழிப்பாய்
இருதயம் நொறுங்கி ஜெபிப்போம்
கற்புள்ள கன்னிகையாக நாமும்
கர்த்தர் வருகைக்குக் காத்திருப்போம்

242

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம்பிதா அழைக்கும்பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

பல்லவி

இன்பராம் ஈற்றிலே
மோட்சக்கரையில் நாம்
சந்திப்போம் - அல்லேலூயா

2. அந்தவான்கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம்

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம் - இன்ப
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கி துதிப்போம்

4. அங்கே நம் ரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்

243

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ

1. வருத்தம் பசிதாகம் - மனத்துயரம்
அங்கே இல்லை
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன்

2. சிலுவையில் அறையுண்டேன் - இனி
நானல்ல இயேசுவே
அவர் மகிமையே எனது இலட்சியமே

3. இயேசு என் நம்பிக்கையாம் - இந்த
பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன் இயேசுவை
பின்பற்றுவேன்

4. ஓட்டத்தை ஜெயமுடன் - நானும்
ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில் சோராது ஓடிடுவேன்

5. பரமசுகம் காண்பேன் - பரன்
தேசம் அதில் சேர்வேன்
இராபகல் இல்லையே இரட்சகர் வெளிச்சமே

6. அழைப்பின் சத்தம் கேட்டு - நானும்
ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே

7. பளிங்கு நதியோரம் - சுத்தர்
தாகம் தீர்த்திடுவார்
தூதர்கள் பாடிட தூயனை தரிசிப்பேன்

244

இயேசு அழைக்கிறார் (2)
ஆவலாய் உன்னை தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார்

1. எத்துன்ப நேரத்திலும் ஆறுதல்
உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை
நோக்கினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய்

2. கண்ணீரெல்லாம் துடைப்பார்
கண்மணி போல் காப்பார்
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் சூழ்ந்தாலும்
கருத்துடன் உன்னை காத்திடவே

3. சோர்வடையும் நேரத்தில்
பெலன் உனக்களிப்பார்
அவர் உன்வெளிச்சம் ரட்சிப்புமானவர்
தாமதமின்றி நீ வந்திடுவாய்

4. சகல வியாதியையும்
குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே

245

கட்டடம் கட்டிடும் சிற்பிகள் நாம்
கட்டிடுவோம் கிறிஸ்தேசுவுக்காய்
சுத்தியல் வைத்து அடித்தல்ல
ரம்பத்தால் மரத்தை அறுத்தல்ல

1. ஒவ்வொரு நாளும் கட்டிடுவோம்
ஒவ்வொரு செயலாம் கற்களாலே
உத்தமர் இயேசுவின் அஸ்திபாரம்
பத்திரமாக தாங்கிடுவார்

2. கைவேலை அல்லா வீடொன்றை
கடவுளின் பூரண சித்தப்படி
கட்டிடும் சிறிய சிற்பிகள் நாம்
கட்டிடுவோமே நித்யத்துக்காய்

3. பாவமாம் மணலில் கட்டப்பட்ட
பற்பல வீடுகள் விழ்ந்திடுமே
ஆவலாய் இயேசுவின் வார்த்தை கேட்போம்
அவரே மூலைக்கல்லாகிடுவார்

246

தேன் இனிமையிலும் இயேசுவின்
நாமம் திவ்ய மதுரமாமே - அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர்
திருச்சபையானோரே

1. காசினிதனிலே நேசமதாக கஷ்டத்தை
உத்தரித்தே - பாவக்
கசடதை அறுத்து சாபத்தைத்
தொலைத்தார் கண்டுணர் நீ மனமே

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம் - பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு
நிதம் துதி என் மனமே

3. காலையில் பனிபோல் மாயமாய்
உலகம் உபாயமாய் நீங்கி விடும் - என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ மனமே

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில்
நல்ல துணைவராம் நேசரிடம் - நீ
அன்பதாய்ச் சேர்ந்தால்
அணைத்துனைக் காப்பார்
ஆசைகொள் நீ மனமே

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றும் நாமம் - அதைப்
பிடித்துக் கொண்டால்தான் பேரின்ப
வாழ்வைப் பெறுவாய் நீ மனமே

247

1. சின்னஞ் சிட்டுக் குருவியே (2)
உன்னை சந்தோஷமாய் படைச்சது யாரு?
அங்கு மிங்கும் பறந்துகிட்டு
ஆனந்தமாக பாடுறேயே - உன்னை
அழகாக படைச்சது யாரு?

2. ஐயோ ஐயோ இது தெரியாதா? - ஒரு
ஆண்டவர் எனக்கு மேலே இருக்கிறார்
உண்ண உணவும் கொடுக்கிறார்
உறங்க இடமும் கொடுக்கிறார் - இந்த
உலகத்தையே படைச்சும் இருக்கிறார்

3. சின்னஞ் சிட்டுக் குருவியே (2) உன்
சிறகை எனக்குத் தந்திடுவாயா?
உன்னைப் போல பாடிக்கிட்டு
உல்லாசமாய் பறப்பதற்கு - இந்த
உதவி எனக்கு செய்திடுவாயா?

4. ஐயோ இனிமே அப்படிக் கேட்காதே
அந்த ஆண்டவர் கேட்டா கோபிச்சுக்குவாரு
எங்களைக் காக்கிற ஆண்டவர்
உங்களைக் காப்பது இல்லையா - அட
உங்களைத்தானே ரொம்பவும் நேசிக்கிறார்

5. ஆமாம் சிட்டுக் குருவியே (2)
இதுவும் எனக்கு புரியவில்லையே
உங்களைக் காக்கிற ஆண்டவர்
எங்களைக் காக்க மாட்டாரோ
இந்த உண்மையும் ஏனோ
தெரியவில்லையே - ல...ல...ல...ல

248

தேவனே நான் உமதண்டையில்
இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்
மா வலிய கோரமாக வன்
சிலுவை மீதினில் நான்
கோவே! தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

1. யாக்கோபைப் போல் போகும்
பாதையில் - பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூட
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து
தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன்
வாக்கடங்கா நல்ல நாதா

2. பரத்திற்கேறும் படிகள் போலவே
என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா என்றன் தேவனே
கிருபையாக நீர் எனக்கு
தருவதெல்லாம் உமதன்பை
அருமையாய் என்னை அழைத்து
அன்பின் தூதனாகச் செய்யும்

3. நித்திரையினின்று விழித்து
காலை எழுந்து கர்த்தாவே!
நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய் என்
துயர் கல் நாட்டுவேனே
என்றன் துன்பத்தின் வழியாய்
இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்

4. ஆனந்தமாம் செட்டை விரித்து - பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங்கடந்து
பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான்
மருவியும்மை கிட்டிச் சேர்வேன்

249

1. பாவ தோஷம் நீக்கிட
மீட்பரின் ரத்தம் தானே
தீய குணம் மாற்றிட
மீட்பரின் ரத்தம் தானே

பல்லவி

மெய்யாம் ஜீவ நதி
பாவம் போக்கும் நதி
வேறே நதியை அறியேன்
மீட்பரின் ரத்தம் தானே

2. என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் ரத்தம் தானே
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் ரத்தம் தானே

3. வேறெந்த நம்பிக்கையில்லையே
மீட்பரின் ரத்தம் தானே
புண்ணிய கிரியை செய்யாமலே
மீட்பரின் ரத்தம் தானே

4. மோட்ச மார்க்கம் இதுவே
மீட்பரின் ரத்தம் தானே
ஒரு சுத்த தீர்த்தமே
மீட்பரின் ரத்தம் தானே

250

1. பூமியின் நம்பிக்கை நீங்கி சோதனையாகிலும்
நல்ல நண்பர் ஒழிந்து பள்ளத்தாக்கிலேயும்
இயேசுநாதர் பின்சென்றேதான் மோட்சம்
நாடுவேன்
விண்ணவர் சூழும் கிரீடம் நோக்கி
ஓடுவேன்

பின் செல்வேனே மீட்பர் பின்செல்வேனே
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்
பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
இயேசு காட்டும் பாதை எல்லாம் செல்லுவேன்

2. கார்மேகம் மேலே மூடும்
பள்ளமெங்கிலும்
காற்றுகோரமாக மோதும்
சமுத்திரத்திலும்
யேசு பாதைகாட்ட சற்றும் அஞ்சவே
மாட்டேன்
ரட்சகர் கைதாங்க தைரியம்
கொள்ளுவேன்

3. நாள்தோறும் இயேசுநாதர் கிட்டச்
சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின்னே
செல்லுவேன்
மீட்பர் என்னை மோசமின்றிக் கடைசி
காப்பார்
விண்ணவர் நாசரோடு சேர்த்து
வாழ்விப்பார்

251

இயேசுவின் தோட்டத்தில் வேலைக்காரன்
ஆகிட உனக்கு மனதுண்டோ? (2)
என் நண்பனே ஓடி வா நீ
இயேசு உன்னை அழைக்கிறார்

1. உலகத்தின் பாவங்கள் விட்டுவிட்டு
இயேசுவின் சத்தம் நீ கேட்டிடுவாய்
அவர் உனக்காய் சிலுவைதனில்
அடைந்திட்ட பாடுகள் நினைத்திடுவாய்

2. நீ காணும் வாலிபம் மாயையன்றோ
நீ காணும் காட்சிகள் மறைந்திடுமே
இன்றைக்கே நீ உந்தன் வாழ்வை
இயேசுவின் சொந்தமாய் நல்கிடுவாய்

3. இயேசுவின் பெயர்தனை அறிந்திடாதோர்
தேசத்தில் ஆயிரம் ஆயிரமே
காசினியில் இயேசு நாமம்
கூறிட இன்றே நீ வந்திடுவாய்

252

உம்மிடத்தில் சொல்லி விட்டேன் - இனி
உம்மையே நம்பி இருப்பேன் (2) - ஐயா

1. வருத்தப்பட்டு பாரம் சுமப்பவரே
வாருங்கள் என்னண்டை என்றவரே
நெருங்கி நிற்கும் சிங்கங்களின்
வருந்திக் கண்ணீர் சிந்தி நிற்கின்றேன்

2. விசாரங்கள் பெருகி நான் வருந்துகையில்
விசாரிப்பாரின்றித் தியங்குகையில்
விசாரிக்கின்றவர் நீர் ஆனபடியால்
விசுவாசத்தோடே நான் வருகின்றேன்

3. நெருப்பு என்னை மிக நெருக்கிடினும்
நெருங்கி நிற்கும் நண்பர் இயேசு உண்டு
இருப்புச்சிறை என்னை வருத்திடினும்
இருளகற்றும் அன்பர் இயேசு உண்டு

253

கனி தேடி வந்தேன், கனி காணவில்லை
கனி தரமாட்டாயோ, அத்திமரமே (2)

1. ஆண்டாண்டு காலம் காத்திருந்தேன்
இந்த ஓர் ஆண்டு கொடுத்து விட்டேன்
ஆனாலும் கனி ஒன்றும் காணவில்லை
கனி தரமாட்டாயோ அத்திமரமே

2. வெட்டி விடலாமோ என்று எண்ணினேன்
எரு போட்டு தேற்ற காலம் கொடுத்தேன்
கிருபையின் காலத்தைத் தள்ளி விடாதே
கனி தந்து ஜீவிப்பாயோ அத்திமரமே

254

முன்னேறி முன்னேறிச் சென்றிடுவோம்
விசுவாசத்தால் தானே
பாரெங்கும் நற்செய்தி கூறிடுவோம்
விசுவாசத்தால் தானே
விசுவாசத்தால் மாத்திரமே (4)

1. விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு
பிரியமாய் இருப்பது கூடாதது
வேதத்தில் இல்லாதது (2)

2. விசுவாசம் இல்லாத ஊழியமோ
நங்கூரம் இல்லாத கப்பலன்றோ
ஆபத்தில் அழிந்துவிடும் (2)

3. கிரியைகள் இல்லாத விசுவாசத்தில்
உயிரில்லை பயனில்லை பரிதாபமே
விசுவாசம் செயல்படுத்தும் (2)

255

கூடுவோம் நாம் ஓடுவோம்
கிறிஸ்துவை நோக்கி ஓடுவோம்
அருமையாய் மிகப் பொறுமையாய்
ஜீவ கிரீடம் தேவ மகிமை சூடி மகிழ்வோம்

1. சாபம் சூழும் பாவம் நீங்க வேண்டுமே
பாரம் தள்ளி தூரம் எறிய வேண்டுமே
கறை போக்கிடும் நம் சாட்சியே
நிறைவாகட்டும் இறை மாட்சியே

2. வெற்றிகாண விசுவாசத்தைப் பேணுவோம்
கற்றுதரும் குரு இயேசுவை காணுவோம்
இனிதாகவே பணிவாகவே
அணியாகவே துணிவாகவே

3. ஓடுகளத்தில் சோர்ந்து பின்னே தங்கிடோம்
நாடு கண்டு நகையாட நாம் விடோம்
உரம் கூடவே திறம் ஏறவே
வரம் காணவே பரம் சேரவே

256

நற்செய்தி ஊழியம் பெருகிடவே
துர்ச்செய்தி தேசத்தில் அகன்றிடவே
உழைத்திடுவோம், உரைத்திடுவோம், ஊரெங்கும்
தேவ அன்பை பகிர்ந்தளிப்போம்
இயேசு கிறிஸ்துவுக்காய் எழும்பிப் பிரகாசிக்க
நற்செய்தி ஊழியம் செய்திடுவோம்

1. அன்பின் நற்செய்தியை அறிவிக்கவே - பாரில்
அன்பராம் இயேசுன்னை அழைக்கிறாரே
அவசரமாக! அவசியமாக! அர்ப்பணிப்போடு
நாம் உழைத்திடுவோம்

2. சிலுவையின் சுவிசேஷம் அறிவிக்கவே - தேவ
கிருபையுள்ளோரை இயேசு அழைக்கிறாரே
சிலுவையின் ரத்தம், தரும் பரிசுத்தம் சிலுவையின்
மீட்பை நாளும் உரைத்திடுவோம்

3. நாடுகள் நற்செய்தியால் நிரம்பிடவே - எல்லா
வீடுகள் சபைகளாய் மாறிடவே
முழங்கால்கள் யாவும், முடங்கிடும் நேரம், நாவுகள்
இயேசுவை அறிக்கை செய்யும்

257

1. அறுப்பு மிகுதி இராஜாவே
ஊழியர் தந்திடும்
வெறுப்பில் அலையும் ஜனத்தின்மேல் - எம்
பொறுப்பை உணர்த்திடும்

இந்தியாவில் கோடி கோடி
உம்மை அறியாரே
என்னை அனுப்பும் இராஜாவே - நீர்
என்னை அனுப்பிடும்

2. பாதாள சேனை இன்னும் இன்னும்
ஜெயிக்க விடாதிரும்
சேனை வீரராய் வாலிபர் பலர்
எழும்பச் செய்திடும் - இந்தியா

3. யாரை அனுப்ப யார் போவார்
என்றழைக்கும் இயேசுவே
என்னை உந்தன் கண்கள் காண
உம் முன் நிற்கிறேன் - இந்தியா

4. மெய்வீரனாக இராஜாவே
நான் எழுந்து வருகிறேன்
கோதுமை மணியாக மாற
என்னைப் படைக்கிறேன் - இந்தியா

258

ஜீவ வசனங் கூறுவோம் - சகோதரரே!
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்

பாவிகள் மேலுருகிப் பாடுப்பட்டு மரித்த
ஜீவாதி பதி யேசு சிந்தை மகிழ்ந்திடவே

1. பாதகப் பேயின் வலையில் - ஐயோ! திரள்பேர்
பட்டு மடியும் வேளையில்
பேதமையோடு பிடிவாத மருள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதி பெறவே

2. காடுதனிலே அலைந்தோம் கிறிஸ்துவினால்
கர்த்தன் ஊழியம் அமர்ந்தோம்
நாடு, நகர், கிராமந் தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய

3. பூலோகம் எங்கும் நமையே - கிறிஸ்து நாதர்
போகச் சொல்லி விதித்தாரே
காலா காலங்களிலும் கூடி இருப்போம் என்ற
கர்த்தன் வாக்கை நினைத்து எத்தேசமும் திரிந்து

4. விண்ணின் மகிமை துறந்தார் கிறிஸ்து நமையே
மீட்க குருசில் இறந்தார்
மண்ணின் புகழ் பெருமை எல்லாம் தூசுகுப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியோடு

Chorus

1

Have thine own way Lord
Have thine own way
Thou art the Potter, I am the clay
Mould me and make me after thy will
While I am waiting, yielded and still.

உம் சித்தம் தேவா என் பாக்கியம்!
குயவன் நீர்தாமே, களிமண் நானே;
உம் சித்தம்போல ஆக்கும் என்னை
ஒப்புவித்தேனே பூரணமாய்

2

என் தேவனை நான் என்றும் பாடுவேன்
என்ன வந்தாலும் பற்றிக்கொள்ளுவேன்

1. சிங்கக் கெபியில் தானியேலைக்
காத்த ஆண்டவர்
பங்கமின்றி என்னைக் காத்து
மீட்டுக் கொள்ளுவார்

2. கடலில் வீழ்ந்த யோனாவையும்
காத்துக்கொண்டார்ரே
கீழ்ப்படிந்து நானும் அவர் ஒளியில்
வாழ்வேனே

3. சிறையிலிருந்த பவுல் சீலாவும்
பாடி துதித்தனர்
துன்பம் உன்னை சூழ்ந்திடாமல்
பாட்டுப் பாடிடு

3

இயேசு என்னை முற்றிலும் மீட்டார்
சிலுவையில் மாண்டார்
விடுதலை ஈந்தார்
இயேசு என்னை முற்றிலும் மீட்டார்
அல்லேலூயா

நான் ஆடிப்பாடி மகிழ்வேன்
என்நேசரை நான் போற்றுவேன்
பாவ மன்னிப்பை அடைந்து
மோட்சப் பாதை செல்கிறேன்
நான் ஆடிப்பாடி மகிழ்வேன்.

4

ஆராதிக்கின்றோம் - 3
ஆராதிக்கிறோம்
பிதாவே உம்மையே ஆராதிக்கிறோம்
உம்மையே துதித்து ஆராதிக்கிறோம்

இயேசுவே உம்மையே ஆராதிக்கிறோம்
உம்மையே புகழ்ந்து ஆராதிக்கிறோம்

ஆவியே உம்மையே ஆராதிக்கிறோம்
உம்மிலே புகழ்ந்து ஆராதிக்கிறோம்

5

ஆஹா (3) கல்லறை திறக்க
ஓ ஹோ (3) காவலர் நடுங்க
யூத இராஜ சிங்கம் இயேசு
உயிர்த்தெழுந்தாரே

பாடுவோம் அல்லேலூயா
வானதூதர் சேனையோடு
யூத இராஜ சிங்கம் இயேசு
உயிர்த்தெழுந்தாரே.

6

சுவிகார புத்திரராய் முன்குறித்தார்
நம்மை
சுவிசேஷம் சொல்லிடவே
தெரிந்துகொண்டார்
சுகவாழ்வு சந்தோஷம் தந்தருளினார்
சுவிசேஷம் சதாகாலம் சொல்லி
வருவோம்
இரட்சகர் இயேசு மீட்பரானவர்
கிருபையுள்ளவர் என்று (எங்கும்)
கூறுவோம்.

7

Let the beauty of Jesus be seen in me
All His wondrous compassion and purity
Oh Thou Spirit divine all my nature
refined
Till the beauty of Jesus be seen in me.

இயேசுவின் அழகென்னில் காணட்டுமே
அவர் அன்பும் இரக்கமும் தூய்மையும்
ஆவியானவரே என்னை சுத்தம் செய்யும்
இயேசுவின் அழகென்னில் காணும் வரை.

8

For I'm building a people of power
And I'm making a people of praise
Who will move through this land by
my Spirit
And will glorify my precious name
Oh build your Church Lord!
Make it Strong Lord!
Join our hearts Lord! Through Your Son
Make us one Lord in your body
In the Kingdom of your Son!

9

I'm happy today (2)
In Jesus Christ
I'm happy today
He has taken all my sins away
And that's why I'm happy today.
I'm singing today...
I'm praying today...
I'm sharing today...

I'm happy today
I'am singing today
In Jesus Christ I'm praying today
He has taken all my sins away
And that's why I'm sharing today.

10

He is my everything
He is my all
He is my everything, both great and
small
He makes my life complete, makes
everything new
He is my everything but how about you

எல்லாம் என் இயேசுவே எல்லாம் அவ
சிறிதும் பெரிதாயினும் எல்லாம் அவ
புதிதாய் என் ஜீவியம் மாற்றுகின்றா
எனக்கெல்லாம் இயேசுவே
என்றென்று

11

Thou hast turned my mourning int
dancing for m
Thou hast put off my sack cloth
Thou hast turned my mourning int
dancing for m
And girded me with gladness
To the end my glory may sing praise
unto Thee
And not be silent
O Lord my God, I will give thanks
unto Thee for ever

எந்தன் துக்கம் மாற்றி ஆடிப்பாடச் செய்தீ
நிந்தையின் வஸ்திரம் களைந்தீர்
எந்தன் துக்கம் மாற்றி ஆடிப்பாடச் செய்தீ
சந்தோஷத்தால் இடைகட்டினீர்
உள்ளளவும் புகழ்ந்தும்மை
ஸ்தோத்தரிப்பேன்
அமர்ந்திரேன் அவனியில் நானே
எந்தன் ஆண்டவரே
என்றென்றும் துதிகளை ஏறெடுப்பேனே

12

Lord I lift your name on high
Lord I love to sing your praises
I am so glad you're in my life
I am so glad you came to save us
You came from heaven to earth
To show the way
From the earth to the cross
My debts to pay
From the cross to the grave
From the grave to the sky
Lord I lift your name on high.

உந்தன் நாமம் உயர்த்துவேனே
துதிகள் பாடி மகிழ்ந்திடுவேனே
எந்தன் வாழ்வை நிறைத்தவரே
மீட்க வந்தீர் மகிழ்ந்திடுவேனே
பாதை காட்டிடவே பூவில் வந்தீரே
சிலுவை சென்றவரே நாடி வந்தேனே
சாவை வென்றவரே உயிர்த்தெழுந்தவரே
உந்தன் நாமம் உயர்த்துவேன்

13

Sing unto the Lord a new song
Sing unto the Lord all the earth
The Lord is great
Greatly to be praised

கர்த்தருக்குப் புதுப்பாட்டு பாடு
கர்த்தருக்குப் புதுப்பாட்டு
கர்த்தர் பெரியவர், மகிமையுள்ளவர்

14

I will enter His gates with thanks giving in my heart
I will enter His courts with praise
I will say, 'This is the day that the Lord has made'

I will rejoice for He has made me glad
He has made me glad, He has made me glad
I will rejoice for He has made me glad

He has made me glad, He has made me glad
I will rejoice for He has made me glad

உள்ளம் நன்றியால் பொங்கி
கர்த்தர் வாசல் செல்லுவேன்
எல்லைதோறும் துதிகள் சொல்லுவேன்
கர்த்தர் தந்த நன்னாள் அது
இந்நாள் என்பேன்
என்றும் மகிழ்வேன் சந்தோஷம்நல்கினார்
என்றும் மகிழ்வேன் சந்தோஷம் நல்கினார்
தேவன் என்னில் சந்தோஷம் நல்கினார்
என்றும் மகிழ்வேன் சந்தோஷம் நல்கினார்
தேவன் என்னில் சந்தோஷம் நல்கினார்

15

He poured in the oil and the wine
The kind that restoreth my soul
He found me bleeding and dying
On the Jericho road
And He poured in the oil and the wine
Jesus, Jesus, Jesus I've got him on my mind (3)
I have Jesus on my mind.

எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே
திராட்சை ரசத்தால் என் உள்ளம் தேற்றியே
மரணத்தருவாயில் என்னை அவர்
கண்டார் அன்பால்
எரிகோ நகர் வீதி தனிலே
எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை நிறைந்தார் } 2
என்றென்றும் என் சிந்தை நிறைந்தார்.

16

சுத்திகரியும் நாதா - என்னை
சுத்திகரியும் நாதா
நின் திருரத்தத்தால் உள்ளும் புறமாக
என்னை சுத்திகரித்திடுமே - (2)

பொன்னாக மாற்றும் நாதா -என்னைப்
பொன்னாக மாற்றும் நாதா
அக்கினி தழலால் சோதித்த பின்னாலே
நானும் பொன்னாக மாறுவேனே - (2)

17

If you believe and I believe and
We together pray
The Holy Spirit will come down and
India will be saved (3)

நீயும் நானும் விசுவாசித்து
சேர்ந்து ஜெபித்தால்

தூய ஆவி இறங்கி வருவார்
பாரதம் மீட்கப்படும் (3)
தூய ஆவி இறங்கி வருவார்
பாரதம் மீட்கப்படும்.

18

This is the day, this is the day
That the Lord hath made (2)
We will rejoice (2)
And be glad in it (2)
This is the day that the Lord hath made
We will rejoice and be glad in it
This is the day (2)
That the Lord hath made

இன்றைய நாள் (2)
கர்த்தர் தந்திட்டாரே (2)
மகிழுவோம் களிகூர்ந்திடுவோம்
கர்த்தர் தந்திட்டாரே (2)
இன்றைய நாள் கர்த்தர் தந்திட்டாரே
மகிழுவோம் களிகூர்ந்திடுவோம்
இன்றைய நாள் (2)
கர்த்தர் தந்திட்டாரே.

19

Celebrate Celebrate
Celebrate the Victory of the Lord
He has done mighty things yet again
Celebrate the Victory of the Lord

கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுவோம்
இன்னும் அவர் வல்லமை செய்திட்டார்
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுவோம்

20

நன்றி சொல்லும் நாவை எனக்குத் தாருமே
நல்ல இயேசு சுவாமி என் நாவில் வாருமே
நன்றியோடு வாழும் வாழ்வைத் தாருமே
நல்ல இயேசு சுவாமி என் வாழ்வில் வாருமே

21

He is Lord, He is Lord
He has risen from the dead and He is Lord
Every knee shall bow every tongue confess
That Jesus Christ is Lord

இயேசுவே ஆண்டவர்
மரணத்தினின்று உயிர்த்தெழுந்தார்
கால்கள் யாவும் முடங்கும்,
நாவு அறிக்கை செய்யும்
இந்த இயேசுவே ஆண்டவர்.

22

அதிசய இயேசுவை போற்றிடுவோம்
அனுதினம் அவரன்பை கூறிடுவோம்

ஆனந்தமே பேரானந்தமே
அதிசயமே அவர் செயல்களே

கானாவில் கனிரசம் தந்தவராம்
காற்றையும் கடலையும் அதட்டினோராம்

நோய்களை தீர்த்திட்ட நல்லவராம்
பேய்களை விரட்டிட்ட வல்லவராம்

23

Come bless the Lord
All ye servants of the Lord
Who stand by night
In the house of the Lord
Lift up your hands in Thy Holy place
And bless the Lord! (2)

Oh taste and see
That the Lord is good - 3
Blessed is the man who trusts in Him

He lifted me up
From the miry clay
And set my feet
On the rock to stay

He put a song
In my mouth to sing
A song of praise (2)

ஆராதிப்போம் இயேசு ராஜனை
இராக்காலத்தில் நிற்கும் ஊழியரே
நம் கைகளை உயர்த்தி நேராய்
ஆராதிப்போம் இயேசு ராஜனை

ருசித்துப்பார் இயேசு நல்லவர் (3)
ஆராதிப்போம் இயேசு ராஜனை

தூக்கினாரே சேற்றினின்றே
நிறுத்தினாரே கன்மலைமேல்
புதுப்பாட்டை என் நாவில் தந்தார்
துதிபாடிடுவேன், துதிபாடிடுவேன்

24

This Land is your Land
This Land is my Land
From the Himalayas
Down to Cape Comorin
From Mumbai City
To old Kolkotha
This Land was made for you and me

This Land for Jesus
He is the answer
This land needs Jesus
We youth must tell her
Tell of the Saviour
His saving power
Stand and Declare his love to all

25

Majesty, Worship His Majesty
Unto Jesus be all glory
Honour and praise
Majesty, Kingdom, authority
Flows from His throne
Unto His own
His anthem raise!
So exalt, lift up on high
The name of Jesus
Magnify, come glorify
Christ Jesus the King
Majesty, worship His Majesty,
Jesus who died, now glorified
King of all kings.

மாட்சிமை தொழுவோம் அவர் மாட்சிமை
துதி மகிமை வல்லமையாம் இயேசுவுக்கே
மாட்சிமை ராஜ்ஜியம் அதிகாரம்
பாய்கின்றதே தம் மக்கட்கே கீதத்தோடே
இயேசு நாமம் மேலாகவே
உயர்த்திடுவோம்
வாருங்கள் உயர்த்திடுங்கள்
இயேசு ராஜனை
மாட்சிமை தொழுவோம் அவர் மாட்சிமை
மரித்தார் அவர், மகிமை நிறை
ராஜா இன்றே - (2)

26

Ah Lord God thou has made the Heavens
And the earth by thy great power
Ah Lord God thou has made the heavens
And the earth by thy outstretched arms
Nothing is too difficult for Thee
Nothing is too difficult for Thee
Oh! great and mighty God
Great in counsel & mighty in deed.
Nothing (2) absolutely nothing
Nothing is too difficult for thee!

அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவரே சிருஷ்டித்தீரே
உந்தன் வல்ல கரத்தினாலே
ஆகாதது ஒன்றுமில்லை
உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை
சர்வ வல்லவரே, கனம் மகிமைக்கு பாத்திரரே
ஆகாதது என்று ஒன்றுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை.

27

எத்தனை நல்லவர் இயேசு
எந்தன் வாழ்வில் இயேசு இயேசு
எத்தனை நன்மைகள் செய்தார்
எந்தன் தாழ்வில் இயேசு இயேசு
காத்திட்டவர் என்னை கைவிடமாட்டார்
கரம்பிடித்தே செல்வார் - எத்தனை

28

What shall I do dear Lord?
What shall I say
Harvest is ripe throughout the world
Labourers are few
I must work the works of Jesus
While yet its day
What must I do dear Lord
Help me to know thy way

என்ன செய்யவேண்டும்?
என் இயேசுவே
உலகெங்கும் அறுவடை ஆயத்தம்
ஆட்கள் கொஞ்சம்
பகல் காலம் இருக்கும்போது
பணிசெய்யவேண்டும்
நான் என்ன செய்ய வேண்டும் நாதா
உம் வழி காட்டிடும்

29

காலையோ மாலையோ
எவ்வேளையாயினும்
இயேசுவுக்கு நன்றி பாடிடு
துதி கீதம் பாடிடு, அதிகாலை பாடிடு
துதி கீதம் பாடிடு அந்தி சந்தி பாடிடு
துதி கீதம் பாடிடு எல்லா நேரம் பாடிடு
இயேசுவுக்கு நன்றி பாடிடு.

30

Hossanna, Hossanna
Hossanna in the highest
Lord we lift up your name
With our hearts full of praise
Be exalted oh Lord our God
Hossanna in the Highest

Glory, Glory
Glory to the King of Kings
Lord, we lift up your name
with our hearts full of praise
Be exalted, O Lord, Our God
Glory to the King of Kings

ஓசன்னா, ஓசன்னா
உன்னதத்தில் ஓசன்னா
உம்மை உயர்த்திடுவோம்
துதி நிறைவுடனே
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்
உன்னதத்தில் ஓசன்னா

மகிமை மகிமை
மகிமை இராஜராஜனுக்கே
உம்மை உயர்த்திடுவோம்
துதி நிறைவுடனே
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்
மகிமை இராஜ இராஜனே

31

Oh! Glory to God He has lifted me up
He has lifted me up I know
He reached out His hand
And he lifted me up
And that's why I love him so

I love him more and more - 2
And when I stand upon the other shore
I'll praise Him Ever more

ஓ! தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ! தேவனுக்கு மகிமை
இயேசுவை நேசிக்கிறேன்

மென்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நான் நின்று அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

32

சகேயு ஆயக்காரன்
மிக குள்ளமானவன்
ஒரு நாளில் இயேசு
வருவதை அறிந்தான்
எரிகோவின் மாந்தர்
எல்லாம் திரண்டு கூடவே
ஏறினானே குள்ள சகேயு
காட்டத்தி மரத்தில்
இறைவன் இயேசு வருகையில்
மரத்தில் அவனைக் காணவே
இறங்கி வா, நான் உந்தன்
வீட்டில் தங்குவேன் என்றார்

33

கோழி தன் குஞ்சுகளை
கூட்டிச் சேர்ப்பது போல - 2
கூவி அழைக்கிறாரே ஜீவன் தந்த
இரட்சகர் - 2
சாக்குப்போக்குச் சொல்லாமல்
ஜல்தியாய் ஓடிவந்து
காக்கும் செட்டைகளின் கீழே
கண்டடைவாய் இரட்சிப்பு
தினமும் ஜெபிப்பதாலும் வேதம்
வாசிப்பதாலும்
நிச்சயமாய் இயேசுநாதர்
செட்டைகளின் கீழிருப்பாய் - 2

34

துதி கனம் மகிமை உமக்கே
ஓ! எல்லாமுமே - 2
துதி கனம் மகிமை உமக்கே
ஓ! நீரே இராஜாவே
அல்லேலூயா ஸ்தோத்ரம், ஸ்தோத்ரம்
ஸ்தோத்ரம் மிக ஸ்தோத்ரம்
ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம்
ஓ! நீரே இராஜாவே - அல்லேலூயா -துதி

35

ஆடுகளே ஆடுகளே என் பின்னே
வாங்க
சொன்ன பேச்சைக் கேக்காட்டா
தொலைஞ்சி போவீங்க
முள்ளுகளுக்குள்ளே மாட்டிச் சிக்காதீங்க
கல்லு கரடு பாதையிலே செல்லாதீங்க

செம்மையான பாதையிலே நடந்து வாங்க
திசை தவறி எங்கேயும் போகாதீங்க

36

குட்டி நானையா, கழுதைக் குட்டி
நானையா
இயேசு ராஜா ஏறிச்செல்லும் குட்டி
நானையா
இயேசு ராஜா செல்கையில் ஓசன்னா
ஓசன்னா
என்ற தொனி கேட்குதே
துள்ளி துள்ளி ஓடி வருவேன் நான்
எந்தன் உள்ளம் பொங்கி வழிவதால்

37

மின்னி மின்னித் துலங்கிடும் -2
ஜொலித்திடும் பொன்னாலான நகரம்
அற்புத கின்னர வீணைகளால்
என்றும் இன்ப கீதங்கள் முழங்குவேன்
இயேசுவோடு நான் என்றென்றும்
வாழுவேன்-2

38

நான் ஆடிப்பாடி மகிழுவேன் -3
என் பாவம் நீங்கிற்றே
என் இயேசு ரத்தமே விடுதலை அதே
என் பாவம் புரண்டோடி
என் பாவம் உருண்டு ஓடி
அது மறைந்து போனதே

39

இயேசு மேய்ப்பர் சிறு மந்தைக்
குட்டிகள் நாங்கள் (3)
பயப்படவே மாட்டோம் (2)

சிங்கம் புலி கரடி ஓநாய்
சேர்ந்து வந்தாலும்
பங்கமில்லை பயமுமில்லை
எங்கள் மந்தையில்
துங்கன் இயேசு எங்கள் மேய்ப்பர்
அஞ்சவே மாட்டோம் (2)
இயேசு ராஜா செல்ல வீட்டுப்
பிள்ளைகள் நாங்கள்
ராஜன் இயேசு தங்க வீட்டுப்
பிள்ளைகள் நாங்கள்
அப்பா அவரோடு சேர்ந்து
அரசாளுவோம்
அல்லேலூயா ஜே! ஜே! ஜே! (2)

40

இயேசு என்னைக் கைவிடமாட்டார்
இயேசு என்னைக் கைவிடமாட்டார்
கடும் புயல் வரினும் பெருங்
காற்று வீசினும்
இயேசு என்னைக் கைவிடமாட்டார்

இயேசு என்னைக் கைவிடவில்லை
இயேசு என்னைக் கைவிடவில்லை
கடும் புயல் வந்தது, பெருங்
காற்று வீசிற்று
இயேசு என்னைக் கைவிடவில்லை

41

வேதத்திலே வேதத்திலே
விலை மதியாத முத்துக்கள் உண்டு
தினந்தோறும் நீ அம்முத்துக்களைப் பார்
உண்மையாகவே நீ ஒரு முத்தாய்
மாறுவாய்

42

என்னுள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே
இயேசென்னை இரட்சித்தார்
நான் ஆடிப் பாடுவேன்
எவரும் அறியாரே என் உள்ளம்
பொங்குதே
என்னுள்ளம் பொங்கி (5) வழியுதே

43

ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
இயேசு தேவனை
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம்
ஸ்தோத்தரிப்பேனே

1. பாவக்கறை நீங்க என்னை முற்றிலுமாக
உம் சுத்தமுள்ள இரத்தத்திற்குள்
தோய்த்ததினாலே

2. என்னுடைய காயங்களை
உம் காயங்களாலே
என்றைக்குமாய்த் தீர்த்ததினால்
ஸ்தோத்தரிப்பேன் நான்

3. சீக்கிரமாய் வருவேன் என்று
வாக்குரைத்தீரே
நீர் சீக்கிரமாய் வருவதினால்
ஸ்தோத்தரிப்பேன் நான்

44

நான் இயேசுவை நேசிக்கிறேன் (2)
நான் அவர் அருகில்
நித்தம் தங்கியிருப்பேன்
நான் இயேசுவை நேசிக்கிறேன்

45

ஜிங் ஜிங் ஜிங் ஜிங் ஜாலரா
டம் டும் டம் டும் டமாரம்
கீங் கீங் கின்னரம்
பூம் பூம் எக்காளம்
ஆனந்தமாகப் பாலர்கள் யாவரும்
அல்லேலூயாப் பாடிடுவோம்

46

எழுப்புதல் அனுப்பும் (2)
எங்கள் உள்ளத்திலே - அல்லேலூயா
எழுப்புதல் அனுப்பும் (2) இந்த வேளையிலே
வியாதியை நீக்கும், பிசாசை துரத்தும்
இயேசுவின் நாமத்திலே - அல்லேலூயா
பாவத்தை மன்னியும்
ஆவியைத் தாரும்
இரட்சகரின் நாமத்திலே - அல்லேலூயா

47

எப்படிப் பாடுவேன் நானே
ஏராளமாய் பாட்டுத்தானே
எப்படிப் பாடினும் ஆடினும்
அவர் அன்பை சொல்ல முடியாதப்பா (2)
பத்து லட்ச கிண்ணரங்கள் போதா
பத்து லட்ச மத்தளங்கள் போதா
எப்படிப் பாடினும் ஆடினும்
அவர் அன்பை சொல்ல முடியாதப்பா (2)

48

வேத புஸ்தகம், எனக்கு
ஏற்ற புஸ்தகம் - நான்
நிற்கும் வேத வாக்குத்தானே
வேத புஸ்தகம் -2

49

ஒரு வெண்ணங்கி
ஒரு பொன் முடி
ஒரு வாத்தியம்
ஒரு மேல் வீடு
ஒரு ஜெயக்கொடி
ஓயா இன்பம்
எனக்குண்டு மோட்சத்தில் - அல்லேலூயா

50

இயேசுவின் பின்னே
போகத் துணிந்தேன் -3
பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் -2

உலகம் என்பின்னே,
சிலுவை என் முன்னே -3
பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் -2

சாத்தான் என் பின்னே,
இயேசு என் முன்னே -3
பின்னோக்கேன் நான்,
பின்னோக்கேன் நான் -2

51

இயேசு கிறிஸ்து மாறாதவரே
ஆமென் இயேசுகிறிஸ்து மாறாதவரே
நித்ய நித்தியமாய்
அல்லேலூயா (6)

52

இயேசென்னும் நாமத்தில் -2
ஜெயம் நமக்குண்டு
இயேசென்னும் நாமத்தில் -2
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிர் நிற்பாரே
இயேசு, இயேசு நாமத்தினில்
ஜெயம் நமக்குண்டு

53

With my hands lifted up
And my mouth filled with praise
With a heart of thanks giving
I will bless you Oh Lord
I will bless you Oh Lord
With a heart of thanks giving
I will bless you Oh Lord.

கைகளை உயர்த்தி
நாவினால் துதிப்பேன்
நன்றியுள்ள இதயத்தால்
உம்மை ஸ்தோத்தரிப்பேன் (3)

54

Sweep over my soul
Sweet spirit sweep over my soul
My rest is complete
As I sit at your feet
Sweet spirit sweep over my soul

என் மேல் அசைவாடிடும்
முற்றும் ஆட்கொண்டிடும்
நல் தேவ ஆவியானவரே
உந்தன் பாதத்தண்டையில்
இளைப்பாறுதல் உண்டே
ஆட்கொள்ளும் ஆவியானவரே

55

Blessing and honour glory and power
Be unto the Ancient of days
From every nation all of creation
Bow before the Ancient of days.

Every tongue in heaven and earth
Shall declare your glory
Every Knee shall bow at your throne
in worship
You will be exalted O God
And your Kingdom shall not pass away
O Ancient of Days.

Your Kingdom shall reign over all
the earth
Sing unto the Ancient of Days
For none can compare to your
matchless worth
Sing unto the Ancient of Days.

துதி மகிமை கனம் வல்லமை
அநாதி தேவனுக்கே
எல்லா தேசமும் சர்வ சிருஷ்டியும்
உம்மைப் பணிந்திடுமே

பூமியின் சகல நாவும்
உம் மகிமை சொல்லும்
முழங்கால் யாவும் முடங்கிடும் - பணிவாய்
நீரே உயர்ந்திருப்பீர்
உந்தன் ராஜ்யம் நிலைத்திருக்கும்
அநாதி கர்த்தா

உம் ராஜ்யம் பூமியெங்கும் ஆளுமே
மாட்சிமை நிறைந்தவரே
உம்மைப் போல் வேறொருவர்
இல்லையே
போற்றுவோம் அநாதி கர்த்தா

56

Hail Jesus you're my King
your life frees me to sing
I will praise you all my days
You're perfect in all your ways.

Hail Jesus you're my Lord
I will obey your word
I wanna see your Kindgom come
Not my will but yours be done.

Glory Glory to the Lamb
You will take me into the Land
We will conquer in your Name
And proclaim that Jesus reigns

Hail Hail O Lion of Judah
How wonderful you are.

வாழ்க! இயேசு ராஜாவே
புது கானத்தால் நிறைத்தீரே
எந்நாளும் உம்மை போற்றிடுவேன்
உந்தன் வழிகள் பூரணமே

வாழ்க! இயேசு ராஜாவே
கீழ்ப்படிவேன் உம் வார்த்தைக்கு
உம் ராஜ்யம் வர வாஞ்சிக்கிறேன்
உம் சித்தம் நிறைவேற்றிடுமே

மகிமை! ஆட்டுக்குட்டிக்கே
மகிமையில் எம்மை சேர்ப்பீரே
உம்மால் ஜெயம் எடுத்திடுவோம்
உந்தன் ஆட்சியை நாட்டிடுவோம்

வாழ்க! யூத சிங்கமே
அற்புதமானவர் நீரே

Rev. **Milton Robert**
1049 (247), K.P. Road,
Near Canara Bank,
Nagercoil - 629 001.
Cell: 8012038310

Dr. **Robert Samraj**
'Melody', No. 19 D/6A,
Benjamin Street,
Nesamony Nagar,
Nagercoil-629 001.
Cell: 7639361230

Mr. **H. Chellaiah**
Mission Compound,
Kottaram,
K.K. Dist.-629 703.
Cell: 8903166799

Miss. **Indra Jacquline**
Viswasapuram,
Thovalai Post,
K.K. Dist.-629 302.
Cell: 9488324256

Mr. **John Sekhar**
200, Joshua St.,
Nagercoil-629 001.
Cell: 9486864393

Mr. **Ebanezer**
Anapilavilai,
Aattoor Post,
K.K. Dist.-629 191.
Cell: 9790396387

Mr. **S. Vincent Rtd.**
South Street,
Santhapuram,
Asaripallam (via),
K.K. Dist.-629 201.
Cell: 9865743281

Mr. **Jeyasingh**
Baghavathyapuram,
James Town P.O.,
K.K. Dist.-629 504.
Cell: 9865683872

Mr. **Y. Solomon**
Sarvothayagramam,
Kottaram-629 703.
Cell: 7598688842

Mr. **David Paulraj**
19/92-18, 'EL Bethel',
Thituvilai-629 852.
Ph: 04652-281216

Rev. D. Jeyasekaran
No.15, K L N Colony,
Perumalpuram,
Tirunelveli-627 007.
Cell: 9965802420

Mr. G. Isaac
4-A/1, Jebamaligai St.,
Melakulavanigarpuram,
Melapalayam Post,
Tirunelveli-627 005.
Cell: 9894018920

Mr. Stephen Ponniah
B-119, NGO "B" Colony,
Perumalpuram P.O.,
Tirunelveli-627 007.
Cell: 7708704250

Mr. N. Daniel
58, Teacher's Colony,
Tucker Ammalpuram,
Tirunelveli-627 007.
Cell: 9489158377

Mr. Jebaraj Samuel
54-B/5, St. Peter's St.,
Perumalpuram,
Tirunelveli-627 007.
Cell: 9487855448

Mr. D. Chandra Sekar
101, Church Street,
Idaiyankulam-627502,
Padmaneri (via),
Nanguneri T.K.
Cell: 9954571754

Mr. K. Harris
H-51, Kamarajar St.,
Perumalpuram,
Tirunelveli-627 007.

Mr. Paul Premkumar
174, Barathiar Street,
Agusthiarpatti-627416,
Tirunelveli Dt.

Mr. T. Philip
21, R.K. Street,
Puliangudi,
Tirunelveli-627 855.
Cell: 8122457698

Rev. Vethanayagam
H.No. 2E/ 2nd Street,
Briyant Nagar-West,
Tuticorin-628 008.
Cell: 9487724617

Mrs. Saramma Jose
Plot No. 55,
Sundar Nagar 3rd St.,
Muthiapuram.
Tuticorin-628 005.
Ph: 0461-6453788

Miss. R. Jeba
No.10/1A, 2nd Street,
Middle Briyant Nagar,
Tuticorin-628 008.
Cell: 9442886440

Mr. Edwin Paulraj
13, SPG Church St.,
Keela Sanmugapuram,
Tuticorin-628 002.

Mr. Kanagaraj Gnanam
10 C/2, Selvanayagapuram,
Tuticorin-628 002.
Cell: 9487080902

Mr. P. Amos Silva
19G, Market Road,
Nazareth-628 617,
Cell: 9865644808

Mr. V. Alponce
Gethzamane Prayer
Fellowship,
S.S. Nagar,
Kovilpatti-628 501,
Cell: 9442964474

Mrs. G. Padmini
4, Simon St.,
Sawyerpuram,
Tuticorin-628 251.
Cell: 9360319705

Mrs. Gnana Selvam
42-A, 1st Street,
Tooveypuram
Tuticorin-628 003.

Rev. K. Duraisingh
23, Gokhale Road,
Chinna Chokkikulam,
Madurai-625 002.
Cell : 9944255721

Mr. Santhosam Dharmaraj
John Villa,
Singarathope,
Ramnad-623 501.
Ph : 0456-7220196

Mr. K.G. Nalaventhan
148, Masilamanipuram,
Dindugal-624 005.
Cell : 9443301817

Mr. S. Peter Jeyaraj
2C, Singarayar Colony
North St. Extn. 1st St.,
Bebegulam, Madurai-2.
Cell : 9789941480

Mr. R.A. Jesudas
Zion Illam,
Israel Nagar,
Backside of Church,
Valakapatti Pirivu,
Reddyapatti P.O.,
Dindukal-624 003.
Cell : 9626821011

Mr. Sam Inbaraj
1/473, NGO Colony,
Sivakasi West-626124.

Mr. K. Rajendran
2, Ebenezer Illam,
Tirumalai Nagar,
Aranmanaipudur,
Theni-625 531.

Mr. S. Mahendran
Mithra H/Top-1,
Agrini Apartments,
Andalpuram,
Madurai-625 003.
Cell : 9789522485

Rev. Sunder Raj (As/S)
A-3 Fenton Court,
BKN Avenue.
Opp. Ritherdon Road,
Vepery, Chennai-7.
Cell : 9841229490

Rev. Thambyraj (As/S)
12/15, Avvai Street,
2nd Extension, Selyoor,
Chennai-600 073.
Cell : 9840215107

Rev. Chitrarasu (As/S)
No.11-B/18, 2nd St.,
Nethaji Nagar,
Villivakkam,
Chennai-49.
Cell : 9791271345

Mr. L. Victor (M/C)
Old No. 80, New No. 51,
2nd Street, H.B. Colony,
Korattur, Chennai-80.
Cell : 9003270259

Mr. Daniel Aruldhas (A/C)
P 218, 29th Avenue,
Bhanu Nagar,
Ambattur,Chennai-53.
Cell : 9444505021

Mr. Kalaiazhagan (A/C)
Plot No: 4, 2nd Cross,
Janakiramareddy Colony,
Villivakkam, Chennai-49.
Cell : 9840855347

Mr. M. Selvaraj (A/C)
39, (11A), 7th Street,
Rajamangalam,
Villivakkam, Chennai-49.
Cell : 9445121023

Mr. Jeyakumar (A/C)
107/2, "Anbin Illam"
Gandhi Main Road,
Oragadam, Ambattur,
Chennai - 600 053.
Cell : 9003103592

Mrs. Christal Paulraj (M/C)
Methodist Church,
12th Main, Shanthi Nagar,
Anna Nagar West,
Chennai - 40.
Ph : 42170729

Mr. Prabaharan (M/C)
23, Kuttipalayam St.,
Davidpuram, Kilpauk,
Chennai-600 010.
Cell : 9940595148

Mrs. Deva Anbu Kensy (M/C)
A.P. 829, 60th Street,
10th Sector K.K. Nagar,
Chennai-600 078.
Cell : 994129233

Mrs. Kasthuri Xavier (M/C)
15/8, Mother Teresa St.,
Sri Nagar Colony,
Thirumullaivayal,
Chennai-600 062.
Cell : 9094764959

Mr. Justus Bright (A/C)
No. 5, Karunanithi St.,
Vinagayapuram,
Ambattur, Chennai-53.
Cell : 8939490031

Mr. Selwyn Stephen (A/C)
S6, Gajalakshmi Apart,
5, Oragadam Road,
Ambattur, Chennai-53.
Cell : 9444827348

Rev. Dayavaran (As/S)
98,99, 5th Cross,
Kumaran Nagar,
Lawspet, Puducherry-8.
Cell : 9894327093

Mr. Nelson Dhinakaran (As/S)
Cell : 9443063634

Mr. Sundersingh (A/C)
9, Bharathi Street,
Shanthi Nagar,
Lawspet,
Puducherry-605 008.
Cell : 9443914425

Mr. Devapiriyam (A/C)
42, Ragavendra Nagar,
Vaddaore - 607 303,
Cuddalore District.
Cell : 9486456353

Mr. Paul Dhayanandan (A/C)
200/3, Indra Nagar,
Neyveli - 607 801.
Cell : 8903554972

Rev. Dr. D. Aruldoss (As/S)
68(37) Javulichetty St.,
South Main Street,
Thanjavur - 613 009.
Cell : 9443936353

Mr. Benjamin (M/C)
714/34, Hameed Colony,
(Opp. TELC Church),
Mission Church Street,
M. Chavady, Thanjavur-1
Cell : 9366844886

Rev. Soundararajan (As/S)
14, Upstairs, 2nd Cross,
Ramalinga Nagar
West Extn., Trichy-3.
Cell : 9443591636

Mr. Victor Chellaiah (A/C)
27 C/4, New Colony,
VNP Street, Puthur,
Trichy - 620 017.
Cell : 9442565040

Mr. Chandra Sekaran (A/C)
26, Amul Nagar,
Tirunagar East
Extension
Ponmalai, Trichy-4.
Cell : 9489830973

Mr. Raja Chandrasekar (A/C)
532, H.B.C.,
Rajagopalapuram,
Periyar Nagar,
Pudukottai - 622 003.
Cell : 8973581027

Rev. Thomas Edison (As/S)
411, EVR Periyar Street,
Kamalatchipuram,
Otteri, Vellore-632002.
Cell : 9444145104

Rev. Devapaulraja (As/S)
121/1 (5E-1) Upstairs,
Opp - ATC Depo,
Hasthampatti, Salem-7.
Cell : 9894520784

Mr. Gunasekaran (M/C)
56/152, 2nd Cross,
Ramamurthy Pudur,
P.M. Koil, Salem-3.
Cell : 9952046700

Mr. Sundareshkumar (M/C)
17, Sambanthar St.,
Near SBI Road,
Erode-638 001.
Cell : 9943916564

Mr. M. Thangaraj (A/C)
"Zion House", L-136,
Peryar Nagar, Erode-1.
Cell : 8903450608

Mr. Rajan Ebenezar (A/C)
139, Teacher's Colony,
Perundurai, Erode-52.
Cell : 9486048367

Mr. S. Annadurai (A/C)
L-458, Periyar Nagar,
Surampatti, Erode-9.
Cell : 9443679911

Mr. M. Novaraja (A/C)
57/116, Street No. 2,
Chidambaram Colony,
Opp: Varun Complex,
Erode - 638 001.
Cell : 7598553231

Rev. A. Edwin (As/S)
"Bethel" 29/66, 3rd Phase,
Maharani Avenue,
Vadavalli, Coimbatore-41.
Cell : 9444135411

Mr. J. Johnson (M/C)
58, Sivaram Nagarm
South Enclave,
Sungam By Pass Road
Ramanathapuram,
Coimbatore-641 045.
Cell : 9600512350

Mr. John Chandrasekar (A/C)
54, Aruna Nagar,
Chinna Thadagam Road,
Vadamathurai,
Coimbatore-641 017.
Ph : 0422-2645138

Mrs. Chandraleela (A/C)
80, Chettipalayam Road
Near GD Hospital,
Behind Antony Hotel,
Pothanur, Coimbatore-23.
Cell : 9790600966

Mr. S. Baboo (A/C)
No. 37/22, 3rd Street,
Teachers Colony,
Tiruppur-641 602.
Cell : 9942413941

Mr. Stephen (A/C)
4, NGR Layout,
Neelikonampalayam,
Coimbatore-641 003.
Cell : 9786775444

Mr. Lazarus Nesakumar (A/C)
18L/W, Bethany Cottage
Sivanpuram Colony,
Mettupalayam-641 301
Cell : 9487165444

Mr. A. Manickam (A/C)
5/23A, Selvapuram,
Edayarpalayam Road,
Mettupalayam-641 301

Mrs. Arumainayagam
Punnam & Post,
Gagithapuram Via (TNPL)
Karur District-639136
Cell : 9786343060

I.E.M. ஊழியம் – ஓர் அறிமுகம்

இது ஓர் சுதேச இயக்கம். சபை பாகுபாடற்றது.

ஆரம்பிக்கப்பட்ட வருடம் 1965.

ஸ்தாபகர் : **Rev. தியோடர் வில்லியம்ஸ்**

பொதுச்செயலர் : **Rev. ஜான் வெஸ்லி**

நோக்கம் :

1. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நற்செய்தி.
ஒவ்வொரு மக்கள் கூட்டத்தின் நடுவிலும் திருச்சபை.
2. உலகமனைத்திற்கும் நற்செய்தி அறிவிக்கும் பணியில் இந்திய கிறிஸ்தவர்களின் பங்கை வலியுறுத்துவது.

இலட்சியம் :

ஏசாயா 54:2 இடத்தை விசாலமாக்கு ...

விரிவாகட்டும் ... தடை செய்யாதே ...

சில விபரங்கள் :

* 630 பணியாளர்கள்
* இந்தியாவில் 18 மாநிலங்கள் மற்றும் அந்தமான் தீவுகளில் அருட்பணி.
* 78 வகையான மக்கள் கூட்டங்கள் மத்தியில் ஊழியம்
* 128 பணி மையங்கள்
* வேதாகம மொழி பெயர்ப்பு பணி – 18 மொழிகளில்
* ஆதிவாசி சிறுவர்களுக்கு விடுதி ஊழியம்
* திருச்சபைகளிலும், கிறிஸ்தவக் குடும்பங்களிலும் அருட்பணி தரிசனத்தை உருவாக்குவது.
* மாதந்தோறும் 10 மொழிகளில் அருட்பணி பத்திரிக்கை வெளியீடு.

உங்கள் பங்கு :

ஐ.இ.எம். ஊழியங்களுக்காக ஜெபிக்கலாம்.

ஐ.இ.எம். ஊழியங்களை / அருட்பணியாளர்களை / ஆதிவாசி சிறுவர்களை உங்கள் காணிக்கையினால் தாங்கலாம்.

ஐ.இ.எம். ஜெபக் குழுக்களை உருவாக்கி ஜெபிக்கலாம்.

ஐ.இ.எம். கௌரவ வட்டாரச் செயலராக உதவி செய்ய முன்வரலாம்.

முழு நேர ஊழியத்திற்கான அழைப்பு இருக்குமானால், பணிக்கள அருட்பணியாளராக இணைந்து ஊழியம் செய்யலாம்.

இந்திய அருட்பணி இயக்கம்

பணித்தளங்கள் மற்றும் மாநில அலுவலகங்கள்



Head Office :

INDIAN EVANGELICAL MISSION

38, Langford Road, Bangalore - 560 025. Website : www.iemoutreach.org